RE/MAX REALTRON BLUE FORCE
TEAM BLUE FORCE
வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
DIRECT 416 2888882
கவாஸ் - சோம சச்சிதானந்தன்

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX
Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANCE COVERAGE
AUTO, HOME, BUSINESS
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710

மலர்:- 28, 04 பெப்ரவரி 2022 இதழ்:- 41

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

BASKARAN
SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

## கனடியத் தமிழ்ச் சமூகத்தின் ஆதரவோடு 10வது ஆண்டில் அறப்பணி!
## போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்!
## உறவுகளே! பெப்ரவரி மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

GT Brokers
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Independent Insurance Advisor
Super Visa Insurance
Dir: 416 528 1407
www.gtbrokers.ca

# 13ஐ இடைக்காலத் தீர்வாக புலிகள் ஏற்றனர்! அடேல் பாலசிங்கம் தனது நூலில் தெரிவிப்பு!



தமிழீழ விடுதலைப் புலிகள் மாகாண சபையை நிராகரிக்கவில்லை. மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியைப் பதிவு செய்ததே மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்குத் தான் என்று தமிழர் விவகாரத்தில் மனித உரிமைகள் விடயத்தை ஜெனிவாவில் புலிகள் காலத்திலிருந்து கையாள்பவர்களில் ஒருவரும் பிரான்ஸ் மனித உரிமைகள் மையத்தின் இயக்குநரும் ஆய்வாளருமான ச.வி.கிருபாகரன் தெரிவித்துள்ளார். தனது இந்தக் கருத்துக்கு சான்றாக தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தின் துணைவி யார் திருமதி அடேல் பாலசிங்கம் எழுதிய 'தி வில் ரு ப்றீடம்' (The Will toFreedom) ஆங்கில நூலை (தமிழில் சுதந்திர வேட்கை என்ற பெயரில் வெளியானது) மேற்கோள் காட்டியுள்ளார். (7ம் பக்கம் பார்க்க)

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8
*INDEPENDENTLY OWNED AND OPERATED

# இந்த எதிர்ப்பால் தமிழ்மக்களுக்கு என்ன நன்மை?



13வது திருத்தச்சட்டம் என்பது சாதாரண மக்களில் பலர் அறியாத ஒன்று. சாதாரண குடிமகனிடம் சென்று 13 தொடர்பில் என்ன நினைக்கின்றீர்கள் என்று வினவினால் அவர் பதில் சொல்ல முடியாமல் திணறுவார். ஆனால் அதே குடிமகனிடம் மாகாண சபை தொடர்பில் கேட்டால் உடனே அவர் ஆர்வமாக பதில் சொல்லுவார். மாகாண சபை வேண்டுமா அல்லது வேண்டாமா என்று கேட்டால் (5ம் பக்கம் பார்க்க)

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

BUY/SELL HOUSES
ARUL THANINAYAGAM
Sales Representative
Direct : 416-624-7971 Office : 416-298-3200
Flexible Commission
HOMELIFE
TODAY REALTY LTD. BROKERAGE

இந்த இடத்தில் விளம்பரம் செய்ய
அழையுங்கள் 416 841 9600

# தொடர் போராட்டத்துக்கு தயாரா?

இந்த இடத்தில் விளம்பரம் செய்ய
அழையுங்கள் 416 841 9600

## 13 எதிர்ப்பு:- சீனாவுக்கான அழைப்பா?



தொடர் போராட்டத்துக்கு தயாரா? மற்றும் 13 எதிர்ப்பு சீனாவுக்கான அழைப்பா? என்ற இரண்டு செய்திக் கட்டுரைகள் 16ம், 18ம் பக்கத்தில் உள்ளது.

KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons) (வழக்கறிஞர்)

"ஒரு முகவர் இரு சேவைகள்"
"One Broker Two Services"
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
rwignara@gmail.com
RE/MAX ROYAL PROPERTIES
MORTGAGE ALLIANCE

# BUYING OR SELLING OR LEASE ! Residential or Commercial



## Team SIVA WILL BRING THE BEST RESULTS!

**Siva Kandiah**
Sales Representative
**Dir: 416-301-9540**
sivakandiahhome@gmail.com

**Piravien Siva**
B.Comm. Sales Representative
**Dir: 647-221-5220**
piravien@gmail.com



18 Years Real Estate Experience

HOMELIFE HIGHER STANDARDS


*Listing Agent's Commission plus 2.5% Buyer's Agent commission- Conditions apply
NOT INTENDED TO SOLICIT PROPERTIES ALREADY UNDER CONTRACT


**HomeLife Today Realty Ltd.,**
Brokerage. INDEPENDENTLY OWNED AND OPERATED
**Bus: 416.298.3200**
31 Progress Avenue, Suite 210, Toronto, ON M1P 4S6

• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY

### Markham & Brimortan



**Scarborough** **$1,850**
Bedrooms: 2 Washrooms: 2
All Utilities Included


### Derry/Goreway

**Mississauga** **$498,900**
Bedrooms: 2 Washrooms: 1
Great Opportunity First Time Buyers


### Burnamthorpe/Living Arts

**Mississauga** **$499,000**
Bedrooms: 1+1 Washrooms: 1
Open Concept Kitchen


### Kennedy / Hwy 401

**Scarborough** **$699,000**
Bedrooms: 2+1 Washrooms: 2
Approx. 790 Sq Ft.

### Yonge & Finch

**Toronto** **$819,900**
Bedrooms: 2+1 Washrooms: 2
Over 1150 Sf Plus Balcony

### Bleasdale/ Creditview

**Brampton** **$849,000**
Bedrooms: 3 Washrooms: 2
End Unit, Villa Freehold Home

### Park Rd S/Phillip Murray Ave

**Oshawa** **$899,000**
Bedrooms: 3+1 Washrooms: 2
Close To Schools, Shopping

### Rossland And Ravenscroft

**Ajax** **$899,000**
Bedrooms: 3+1 Washrooms: 3
Huge Open Concept Kitchen

### Mclaughlin/Elgin

**Brampton** **$949,000**
Bedrooms: 3+2 Washrooms: 4
Updated Kitchen, Pot Lights

### Brock & Dellbrook

**Pickering** **$1,299,000**
Bedrooms: 4+2 Washrooms: 4
Family Size Kitchen W/Out To Deck

### Markham/Ellesmere


**Scarborough** **$1,299,999**
Bedrooms: 4+2 Washrooms: 5
Newly Renovated


### Ellesmere/Conlins

**Scarborough** **$1,299,999**
Bedrooms: 4+1 Washrooms: 4
Basement W/Separate Entrance

### Westney/Rossland

**Ajax** **$1,499,000**
Bedrooms: 4 Washrooms: 5
Over 4600 Sq Ft Of Living Space.

### Bovaird/Torbram

**Brampton** **$1,499,999**
Bedrooms: 3+2 Washrooms: 4
Brand-New Kitchen

### Richmond St W/Peter St


**Toronto** **$2,250**
Bedrooms: 1+1 Washrooms: 1
Open Concept Layout Of 790 Sq Ft


### Sheppard Ave E/ 404


**Toronto** **$2,600**
Bedrooms: 2+1 Washrooms: 2
Good Exposure W/Natural Light

## PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!

**EELANADU**
**105 DINSDALE DR**
**WOODBRIDGE - ON**
**L4H 2M4 - CANADA**

**416 841 9600 / 905 653 3000**
**eelanadu1993@ gmail.com**


## கியூபாவிற்கான சுற்றுலா

கனடாவிலிருந்து குளிர்காலச் சுற்றுலாவுக்காக உங்களை பாதுகாப்பாக கியூபாவுக்கு அழைத்துச் செல்கின்றோம்.
உங்கள் விமானச் செலவு, தங்குமிட வசதிகள் உட்பட அனைத்துச் செலவு (Pakcage) உடன் மேலதிகமாக 400.00 டொலர்கள் மட்டுமே!
இத்தொகையில் ஊர்க்கோழி, ஆட்டுக்கறி, கடலுணவு வகைகள், நமது முறைப்படி சமைத்து நீங்கள் தங்கியிருக்கும் இடத்திற்கே கொண்டு வந்து தருவதுடன் குதிரைச் சவாரி, 5க்கும் மேற்பட்ட சுற்றுலாத் தலங்களையும் பார்வையிடலாம்.

முதியோருக்கான விசேட கவனிப்பு

மேலதிக விபரங்கட்கு - தவா
**647.469.9839/647.333.0098**

04 ஜனவரி 2022, 25 ஏப்ரல் 2022 இரண்டு சுற்றுலா குழ புறப்படுகின்றது. பதிவு செய்து கொள்ளுங்கள்


# மீனவர் போராட்டக் களத்தில் சுமந்திரனும் சாணக்கியனும்! களத்தில் வெளியேறிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா!

## போராட்டத்திற்கு நீதிமன்றம் தடை! படையினர் குவிப்பு!



தமிழக மீனவர்களின் அத்துமீறல்களுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டத்திற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ சுமந்திரனும் இரா.சாணக்கியனும் நேரில் சென்று ஆதரவு தெரிவித்துள்ளனர். யாழ்.குடா நாட்டின் கரையோர பகுதிகள்



முற்றாக முடங்கியுள்ளதுடன் யாழ்.மாநகரிலும் ஆதரவு போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை கடல் எல்லைக்குள் இந்திய இழுவை படகுகளின் அத்துமீறல்களுக்கு நிரந்தரமான தீர்வு மற்றும் வடமராட்சி கிழக்கு கடலில் இடம்பெற்ற மீனவர்கள் உயிரிழப்புக்கு நீதி ஆகியவற்றை கோரி தொடங்கப்பட்ட போராட்டம் 4வது நாளாக இன்றும் முழு வீச்சுடன் இடம்பெற்று வருகின்றது.

இந்தநிலையிலேயே பருத்தித்துறை —சுப்பர்மடம் பகுதியில் போராட்டத்தை முன்னெடுத்துள்ள மீனவர்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ சுமந்திரனும், இரா.சாணக்கியனும் சந்தித்து ஆதரவு தெரிவித்துள்ளனர்.

இதேவேளை பருத்தித்துறை, சுப்பர்மடம் பகுதியில் மீனவர்கள் போராட்டம் முன்னெடுத்துவரும் இடத்திற்கு கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சென்றிருந்த போதும் எந்தவிதமான முடிவுகளும் எட்டப்படாத நிலையில் வெளியேறியுள்ளார். இந்திய மீன்பிடி படகுகளின் அத்துமீறலைக் கண்டித்தும் வத்திராயன் பகுதியில் சடலமாக மீட்கப்பட்ட 2 மீனவர்களுக்கு நீதி கோரியும் பருத்தித்துறை, சுப்பர்மடம் பகுதியில் தொடர்ந்து நான்காவது நாளாகவும் மீனவர்களால் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில் பல தரப்பினரும் போராட்டம் இடம்பெறும் இடத்திற்கு சென்று மீனவர்களுடன் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்த போதும் எந்தவிதமான உடன்பாடுகளும் எட்டப்படாத நிலையில் இன்றையதினம் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சென்று பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்திருந்தார். (14ம் பக்கம் பார்க்க)

### வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரணஅறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கியமான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்புவோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலைபேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 JAFFNA SUPER STORES**
**1221 MARKHAM RD - 14**
**(MARKHAM / EELESMERE)**

**3 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**4 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**5 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**6 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

### மொன்றியல் தொடர்புகளுக்கு
### மார்சே துர்க்கா
### (514) 276 9262

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனைத்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்டவர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகையிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப்பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடையாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.


**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**

குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்

**2401 Eglinton Ave East, Suite 300**
**Toronto, Ontario M1K 2M5**
**416 755 5544**



# புதிய அரசியலமைப்பில் இனப் பிரச்சனைக்குத் தீர்வு கிட்டாது!

## அரசின் பங்காளிக்கட்சியான லங்கா சமசமாஜக்கட்சியின் தலைவர் தெரிவிப்பு!



உத்தேச அரசியலமைப்பில் இனப்பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கப் பெறும் என்பதை தனிப்பட்ட முறையில் இதுவரையில் நம்பவில்லை என லங்கா சமசமாஜக்கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரன தெரிவித்தார்.

யுத்த சுவடுகளை நட்டஈட்டால் மாத்திரம் ஈடுசெய்ய முடியாது. இறுதிக்கட்ட யுத்தத்திலும் அதற்கு முற்பட்ட காலத்திலும் காணாமலாக்கப்பட்டோர் தொடர்பில் காலம் காலமாக பேசப்பட்டு வருகிறதே தவிர இறுதி தீர்மானம் இதுவரையில் காணப்படவில்லை. காணாமலாக்கபட்டோரது உறவினர்கள் பல ஆண்டு காலமாக நீதி கோரி போராட்டத்தில் ஈடுப்படுவது கவலைக்குரியது.

காணாமலாக்கபட்ட உறவுகளுக்கு நேர்ந்தது என்ன என்பதை தெரிந்துக் கொள்ளும் முழு உரிமையும் அவர்களின் உறவினர்களுக்கு உண்டு. நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் காணாமலாக்கப்பட்டோர் விவகாரத்தில் ஆரோக்கியமான முன்னேற்றம் காணப்பட்டது என்பதை அரசியலுக்கு அப்பாற்பட்ட நிலையில் இருந்து ஏற்றுக் கொள்ள வேண்டும்.

2009ஆம் ஆண்டு யுத்தம் முடிவடைந்ததை தொடர்ந்து இனப்பிரச்சினைக்கு தீர்வு காண சர்வகட்சி குழு மாநாட்டில் முன்னெடுக்கப்பட்ட தீர்மானங்களை செயற்படுத்தியிருந்தால் யுத்தத்தை அடிப்படையாக்க கொண்டு தோற்றம் பெற்ற பல பிரச்சினைகளுக்கு தீர்வு பெற்றிருக்க முடியும்.

காணாமலாக்கப்பட்டோர் விவகாரத்திற்கு தீர்வு வழங்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு உண்டு. நாம் வாக்குறுதி வழங்கவில்லை என ஒருபோதும் தட்டிக்கழிக்க முடியாது. காணாமலாக்கபட்டோரது உறவினர்கள் அரசாங்கத்திடமிருந்து நியாயத்தை முழுமையாக எதிர்பார்க்கிறார்கள். தற்போதைய நிலவரத்தை அடிப்படையாகக் கொண்டு நோக்குகையில் உத்தேச புதிய அரசியலமைப்பு ஊடாக இனப்பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கப் பெறும் என்பதை தனிப்பட்ட முறையில் நம்பிக்கை கொள்ள முடியவில்லை.

ஏனெனில் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் வழிமுறை ஏனைய பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் கோணத்தில் பார்க்கப்படுகிறது.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண அனைத்து இன மக்களையும் ஒன்றினைத்து பொது கொள்கைக்கமைய விரிவுப்படுத்தப்பட்ட நடவடிக்கையினை முன்னெடுக்க வேண்டும். அவ்வாறான சூழல் தற்போது காணப்படவில்லை என்பதை உண்மை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# ஜனாதிபதியுடன் கலந்துரையாடி எமக்குத் தீர்வைப் பெற்றுத் தாருங்கள் யாழ்.முஸ்லிம்கள் கோரிக்கை

நீங்கள் ஜனாதிபதியுடன் இணைந்து செயல்படுகின்றீர்கள். ஜனாதிபதியின் ஆலோசகராக இருக்கிறீர்கள். எனவே எமது பிரச்சனைகள் தொடர்பில் ஜனாதிபதிக்கு எடுத்துரைத்து எமக்குரிய தீர்வைப் பெற்றுத் தாருங்கள் இவ்வாறு நீதி அமைச்சர் அலி சப்ரியிடம் வேண்டுகோள் விடுத்தனர் யாழ்ப்பாண முஸ்லிம்மக்கள்.

நீதி அமைச்சினால் யாழ்ப்பாணத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட நடமாடும் சேவையை ஆரம்பித்து வைக்க வருகை தந்த நீதி அமைச்சர் அலி சப்ரி யாழ்ப்பாண நகர் ஜிம்மா பள்ளிவாசலுக்கு விஜயம் மேற்கொண்டு யாழ். முஸ்லிம் மக்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள் தொடர்பில் ஆராய்ந்தார். இதன் போது அமைச்சரிடம் தமது பிரச்னைகளை எடுத்துக் கூறிய மக்கள் தாங்கள் 1990 ஆம் ஆண்டு வலுக்கட்டாய மாக வடக்கிலிருந்து அனுப்பப்பட்டு மீண்டும் மீள்குடியேறி இங்கே வந்திருக்கின்றோம். ஆனால் எம்மில் பலர் தற்போதும் புத்தளம் பகுதியில் வசித்து வருகின்றார்கள். வடக்கில் முஸ்லிம் மக்களுக்கு காணிப் பிரச்னை காணப்படுகின்றது. அதிலும்1990 ஆம் ஆண்டு நாங்கள் இங்கே வெளியேற்றப் படும் போது இருந்த குடும்பங்கள் பல மடங்காகியுள்ளதால் பலர் யாழ்ப்பாணத்தில் மீள்குடியேற விரும்புகின்ற போதிலும் தற்போதுகாணிப்பிரச்னை காணப்படுகின்றது.

2014ஆம் ஆண்டு மஹிந்தவின் ஆட்சிக் காலத்தில் வடக்கில் முஸ்லிம்களுக்கு தொடர் மாடிக்கட்டடங்கள் அமைத்துக் கொடுப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டபோதிலும் அது நிறைவேற்றப்படவில்லை. தற்போது நீங்கள் ஜனாதிபதியுடன் இணைந்து செயற்படுகின்றீர்கள். ஜனாதி பதியின் ஆலோசகராக இருக்கிறீர்கள்.எனவே எமது பிரச்னைகள் தொடர்பில் ஜனாதிபதிக்கு எடுத்துரைத்து நமக்குரிய தீர்வைப் பெற்றுத் தாருங்கள் யாழ்ப்பாண முஸ்லிம்கள் சார்பில் பேசுவதற்கு ஒரு (18ம் பக்கம் பார்க்க)


கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

- ✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை
- ✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது
- ✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.
- ✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: 416.439.0224, Cell: 416.450.5011

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com




# இந்த எதிர்ப்பால் தமிழ்மக்களுக்கு என்ன நன்மை?



13வது திருத்தச்சட்டம் என்பது சாதாரண மக்களில் பலர் அறியாத ஒன்று. சாதாரண குடிமகனிடம் சென்று 13 தொடர்பில் என்ன நினைக்கின்றீர்கள் என்று வினவினால் அவர் பதில் சொல்ல முடியாமல் திணறுவார். ஆனால் அதே குடிமகனிடம் மாகாண சபை தொடர்பில் கேட்டால் உடனே அவர் ஆர்வமாக பதில் சொல்லுவார். மாகாண சபை வேண்டுமா அல்லது வேண்டாமா என்று கேட்டால் நிச்சயம் எந்தவொரு குடிமகனும் வேண்டாம் என்று சொல்லப் போவதில்லை. இது தான் யதார்த்தம். ஏனெனில் மக்கள் எப்போது இருக்கின்ற விடயமொன்றை நிராகரிப்பார்கள் என்றால் அதனையும் விடவும் சிறந்த ஒன்று அவர்களுக்கு முன்னால் இருக்கின்ற போது தான் அவர்கள் ஒன்றை நிராகரிப்பார்கள். மேலும் மக்கள் மாகாண சபை தேர்தல்களில் ஏற்கனவே வாக்களித்து அதனை கையாளும் அரசியலை ஆதரித்திருக்கின்றனர். ஆனால் இன்று 13பற்றி பேசுபவர்கள் நேர்மையாக பேசவில்லை. அதாவது வெளிப்படையாக மாகாண சபை என்று சொல்லவில்லை? ஏனெனில் மாகாண சபை என்று வெளிப்படையாக கூறினால் மக்கள் ஒரு போதுமே இதனை ஆதரிக்க மாட்டார்கள். இதன் காரணமாகவே மக்களுக்கு புதிர் போடும் வகையில் 13–எதிர்ப்பு என்னும் கோசத்தை சிலர் கையிலெடுத்திருக்கின்றனர்.

தமிழ் தேசிய மக்கள் முன்னணி (அகில இலங்கை தமிழ் காங்கிரஸ்) 13 எதிர்ப்பு என்னும் சுலோகத்தின் கீழ் யாழ்ப்பாணத்தில் ஆர்பாட்டம் ஒன்றை மேற்கொண்டிருந்த வேளையில் சிங்கள பத்திரிகை ஒன்று ஜனாதிபதி கோட்டபாயவின் புதிய அரசியல் யாப்பின் உள்ளடகத்தை வெளியிட்டிருக்கின்றது. அதாவது குறித்த கலந்துரையாடலுக்கான வரைபில் — மாகாண சபை முறைமை இல்லை. அதாவது இந்த நாட்டுக்கு மாகாண சபை தேவையில்லை என்னுமடிப்படையிலேயே புதிய அரசியல் யாப்பு யோசனை முன்வைக்கப்பட்டிருக்கின்றது. ஓரளவு தமிழ் மக்களுக்கு வாய்ப்பாக வடகிழக்கில் தமிழ் மக்களுக்கான குரலாக இருந்த மாகாண சபையையும் இல்லாமலாக்கும் யோசனை முன் வைக்கப்பட்டுள்ளது. இதனை இல்லாமலாக்கலாம் அது பிரச்சினையில்லை என்பதுதான் 13எதிர்ப்பின் பின்னாலுள்ள தீய திட்டம். இது தமிழ் மக்களுக்கு நன்மையானதா?

இவ்வாறான எதிர்ப்புக்கள் வாயிலாக தென்னிலங்கை கடும் போக்குவாதிகளின் விருப்பங்கள் நிறைவு செய்யப்படுகின்றதா? ராவண பலய பொதுபல சேனா போன்ற இன்னும் பல தேசப்பற்றுள்ள சிங்கள தேசிய இயக்கங்கள் மாகாண சபையை இல்லாதொழிக்க வேண்டுமென்று குரலெழுப்பி வருகின்றன. இதற்கான வாய்ப்பு இப்போது கிடைத்திருப்பதாக அவர்கள் நம்புகின்றனர். இவ்வாறானதொரு பின்னணியில் தான் புதிய அரசியல் யாப்பின் முதல் வரைபில் மாகாண சபையை இல்லாதொழிப்பதற்கான யோசனையை முன் வைத்திருக்கின்றனர். இந்த யோசனையை சரியென்று வாதிடும் வகையில்தான்இ மேற்படி யாழ்ப்பாண ஆர்ப்பாட்டம் இடம்பெற்றிருக்கின்றது.

அதே வேளை ஆறு கட்சிகள் இணைந்து எழுதிய கடிதத்தில் என்ன இருக்கின்றது என்பதை வாசிக்காமலேயே சிவில் சமூக அறிக்கைகள் வெளியிடப்படுகின்றன. ஆறு கட்சிகளின் கடிதத்தில் எந்தவொரு இடத்திலும் 13வது திருத்தச்சட்டம் தமிழ் மக்களின் பிரச்சினைக்கான இறுதி அரசியல் தீர்வென்று குறிப்பிடப்படவில்லை. அதே வேளை சமஸ்டி தான் தமிழ் மக்களுக்கான இறுதித் தீர்வு என்பதும் திட்டவட்டமாக குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

உண்மையில் இந்தியாவை நோக்கி மேற்கொள்ளப்பட்ட ஒரு தந்திரோபாய நடவடிக்கையாக மட்டுமே இது மேற் கொள்ளப்பட்டிருக்கின்றது. அதனை விட இதற்கு எந்தவொரு முக்கியத்துவமும் இல்லை. மேலும் ஒரு கடிதத்தை எழுதியவுடன் புதுடில்லி உடனடியாக இலங்கையில் தலையீடு செய்யப் போவதுமில்லை. ஆனால் புதிய அரசியல் யாப்பின் மூலம் ஏற்கனவே இருக்கின்ற ஏற்பாடுகளையும் இல்லாதொழிக்க முற்படும் போது அதனை தடுத்து நிறுத்துமாறு உடனடி வல்லரசான இந்தியாவிடம் தான் தமிழ் கட்சிகள் கோரிக்கை வைக்க முடியும். ஏனெனில் இந்திய– இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் கிடைக்கப் பெற்ற விடயமொன்றை நீக்குவது தொடர்பில் இந்தியா பாராமுகமாக இருக்கக் கூடாது

அதே வேளை தமிழ் மக்கள் சமத்துவமாகவும் கௌரவமாகவும் வாழ்வதற்கான தீர்வொன்றிற்கு இந்தியா உதவ வேண்டும். ஏனெனில் இந்தியா அதனை தொடர்ந்தும் வலியுறுத்தி வந்திருக்கின்றது. இந்த பின்னணில்தான் ஆறு கட்சிகள் ஒரு கடிதத்தை அனுப்பியிருந்தது. இதற்காக ஏன் ஆர்ப்பாட்டங்கள்? ஏன் இந்த ஆடம்பர செலவுகள்? இது தொடர்பில் விமர்சனங்கள் இருந்தால் ஒரு கூட்டத்தின் மூலம் அதனை வெளிப்படுத்தியிருக்கலாமே! ஆனால் இவ்வாறான ஆர்ப்பாட்டங்கள் நிச்சயம் தென்னிலங்கையின் இனவாதிகளை மகிழ்சிப்படுத்தும். தமிழர்களும் தேவையில்லையென்று கூறுகின்ற ஒருவிடயத்தில்இ இந்தியா ஏன் தலையீடு செய்ய வேண்டுமென்று கேட்பதற்கு உதவும். இந்தியாவிற்கான தூதுவர் மிலிந்த மொரகொடவிற்கு இப்போது ஒரு நல்ல துருப்புச் சீட்டு கிடைத்திருக்கின்றது. அவ்வளவு தான்.

## இந்திய எதிர்ப்பு!

தமிழ் அரசியலில் இந்திய எதிர்ப்பை வெளியிடும் ஒரு தரப்பினர் இருக்கின்றனர். வெளித்தோற்றத்தில் தங்களை அவ்வாறு காண்பித்துக் கொள்ளா விட்டாலும் கூட, சந்தர்ப்பம் கிடைக்கும் போது தங்கள் கோஷங்களை முன்வைப்பதுண்டு. தமிழ் தேசியத்தை பிரதிநிதித்துவம் செய்யும் ஆறு கட்சிகள் ஒன்றிணைந்து, இந்தியாவின் உதவியை நாடியதை அடிப்படையாகக் கொண்டு மீளவும் தமிழ் சூழலில் இந்திய எதிர்ப்பு கோஷங்களை சிலர் முன்வைக்க முயற்சிக்கின்றனர்.

குறிப்பாக இந்த கட்சிகளை இந்திய முகவர்களென்றும் இந்தியாவின் அடிமைகளென்றும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் விமர்சித்து வருகின்றனர். சீனாவின் பிடியிலிருந்து இலங்கையை இந்தியாவின் காலடியில் விழுத்துவதற்காக தமிழர் அரசியல் பலியிடப்படுவதாகவும், முன்னணியின் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் குறிப்பிட்டிருக்கின்றார். அவ்வாறாயின் இந்தியாவின் செல்வாக்கு இலங்கைத் தீவில் அதிகரிப்பதை முன்னணியினர் விரும்பவில்லையா என்னும் கேள்வி எழுகின்றது?

தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு தொடர்பில் வெளிப்படையாக பேசும் ஒரேயொரு நாடு இந்தியா மட்டும் தான். அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் மனித உரிமைகளை மேம்படுத்துதல் என்னும் அடிப்படையில் மட்டுமே பேசி வருகின்றன. தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு தொடர்பில் அவர்கள் வெளிப்படையாகப் பேசுவதில்லை. அதே வேளை தமிழர்களுக்கு முழுமையாக ஆதரவாக இருக்கின்ற ஒரேயொரு வெளிநாட்டு தரப்பு என்றால் அது தமிழ்நாட்டு தமிழர்கள் மட்டும் தான். இந்தியா தொடர்ந்தும் ஈழத் தமிழர்கள் தொடர்பில் கரிசனை கொண்டிருப்பதற்கு தமிழ்நாடே பிரதான காரணமாகும். இவ்வாறானதொரு சூழலில், இந்திய எதிர்ப்பை ஈழத் தமிழர்கள் மத்தியில் பரப்புவது, புத்திசாலித்தனமான ஒன்றா என்னும் கேள்வியை மக்கள் தங்களுக்குள் கேட்டுக்கொள்ள வேண்டும்.

13ஐ எதிர்ப்பதாக கூறுபவர்கள், தாங்கள் இந்தியாவை எதிர்க்கவில்லை – 13ஐ மட்டும் தான் எதிர்க்கின்றோமென்று வாதிடலாம். ஆனால், அது தர்க்க ரீதியில் பலமான வாதமல்ல.உண்மையிலேயே அதுதான் – அவர்களின் நிலைப்பாடு என்றால், அதனை அவர்கள் நாகரிகமாக முன்வைக்கலாம். இந்திய முகவர்கள் – இந்தியாவின் அடிமைகள் என்று கூறி இந்திய விரோதத்தை வளர்க்க வேண்டியதில்லை.

13இன் போதாமைகள் தொடர்பில் நிச்சயம் பேசத்தான் வேண்டும். ஒற்றையாட்சிக் கட்டமைப்பின் கீழ் அதிகாரங்கள் பகிரப்படுவதிலுள்ள சிக்கல்கள் தொடர்பில் நிச்சயம் பேசத் தான் வேண்டும். சமஷ்டித் தீர்வு ஒன்றின் மூலம் தான், தமிழ் மக்களின் உச்சபட்சமான அரசியல் அபிலாசைகளை தீர்க்க முடியுமென்பதைப் பற்றி பேசத்தான் வேண்டும். 1949இல் தமிழ் அரசு கட்சி (சமஷ்டிக்கட்சி) உருவாக்கப்பட்ட காலத்திலிருந்து இதனைத் தான் தமிழ் தலைமைகள் கோரி வருகின்றன. இடையில் ஒரு குறிப்பிட்ட காலம் வரைக்கும் தான் தனிநாட்டுக்கான போராட்டம் இடம் பெற்றது. தனிநாட்டை இந்தியா மட்டுமல்ல உலகில் எந்தவொரு நாடும் ஏற்றுக்கொள்ளவில்லை. நாடுகளின் ஆதரவிருந்திருந்தால் அதனை தமிழர்கள் நிச்சயம் அடைந்திருக்க முடியும்.

இப்போது நிலைமைகள் கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாகி விட்டது. தமிழர்கள் முற்றிலும் வெளியாரின் தயவை மட்டுமே எதிர்பார்த்திருக்கின்ற காலம் இது. தெற்காசியாவை பொறுத்தவரையில் எந்தவொரு வெளித் தலை யீடும் இந்தியாவைப் புறம் தள்ளி நிகழமுடியாது. இதனை கடந்த கால வரலாறு, நமக்கு (21ம் பக்கம் பார்க்க)

Real Estate Law
Immigration Law
Wills and Estate
Power of attorney for personal care and property
Business Law

Notary Services
Statutory Declarations & Affidavits
Commissioning & Notarization

NISHANTHAN LAW OFFICE

Umananthini Nishanthan
BARRISTER, SOLICITOR & NOTARY PUBLIC



Phone : 416-289-9229

1200 Markham Road, Lower Level Units 5 and 7, Scarborough, Ontario M1H 3C3 (Markham/ Ellesmere)

# 13வது திருத்தத்தினை அரசியல் தீர்வாக ஒரு போதும் நாம் ஏற்கவில்லையென சம்பந்தர் மீண்டும் தெரிவிப்பு!



13ஆவது திருத்தச்சட்டத்தினை தமிழ் மக்களின் அபிலாஷைகளை பூ ர்த்தி செய்யும் வகையிலான அரசியல் தீர்வாக ஏற்றுக்கொண்டு எந்தவொரு தருணத்திலும் கோரிக்கை விடுக்கவில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

அத்துடன் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் இட்டுக் கட்டப்பட்ட கதைகளைக் கூறி பொய்யான பிரசாரங்களை முன்னெடுத்து வருகின்றனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது, 13ஆவது திருத்தச்சட்டத்தினை தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்வதற்கான தீர்வாக எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நாம் கூறியது கிடையாது.

தமிழர் விடுதலைக் கூட்டணியாக இருந்தாலும் சரி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இருந்தாலும் சரி, தமிழரசுக் கட்சியாக இருந்தாலும் சரி இந்த நிலைப்பாட்டில் மாற்றங்கள் காணப்பட்டிருக்கவில்லை. இந்தப் பின்னணியில் தற்போது இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு அனுப்பிய ஆவணத்திலும் அவ்விடயங்கள் மிகத் தெளிவாக கூறப்பட்டுள்ளது. குறித்த ஆவணத்தில் கையொப்பமிட்ட தலைவர்களும் மிகத் தெளிவாக அந்த விடயத்தினை கூறியுள்ளனர்.

இருப்பினும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் குறித்த ஆவணத்தினை திரிவுபடுத்தி இட்டுக்கட்டப்பட்ட விடயங்களை வெளிப்படுத்தி பொய்யான பிரசாரத்தினை முன்னெடுத்து வருகின்றார்கள்.

எம்மைப் பொறுத்தவரையில் பிரிக்க முடியாத, பிளவுபடுத்த முடியாத ஐக்கிய இலங்கைக்குள் தமிழ் மக்கள் பூர்வீகமாக வாழ்ந்து வரும் இணைந்த வடக்கு கிழக்கில், தங்களைத் தாங்களே ஆட்சி செய்யக் கூடிய வகையிலும் தங்களின் தலைவிதியை தீர்மானிக்க கூடிய வகையிலும் மீளப் பெறமுடியாத அதிகாரப் பகிர்வு செய்யப்பட்டு சுயநிர்ணய அடிப்படையிலான சமஷ்டித் தீர்வொன்று வழங்கப்பட வேண்டும். அதுவே தமிழ் மக்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்வதாக இருக்கும். ஆனால், 13ஆவது திருத்தச்சட்டமானது, தற்போதைய அரசியலமைப்பில் ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயமாகும். அத்திருத்தச் சட்டமானது அதிகாரப்பகிர்வின் ஒரு வடிவமாக அரசியல் அமைப்பில் காணப்படுகின்றது. ஆகவே அதனை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும். இலங்கையின் ஆட்சி அதிகாரத்தில் மாறிமாறி இருந்த தலைவர்கள் அனைவரும் 13ஆவது திருத்தச்சட்டத்திற்கு அப்பால் சென்றே வாக்குறுதிகளை வழங்கியுள்ளார்கள். பிரேமதாச காலத்தில் மங்கள முனசிங்க ஆணைக்குழு நியமிக்கப்பட்டது.

சந்திரிகாவின் காலத்தில் பிராந்தியங்களின் ஒன்றியம் என்ற தலைப்பில் தீர்வுப்பொதி தயாரிக்கப்பட்டது. பின்னர் ரணில் விக்கிரமசிங்க காலத்தில் ஒஸ்லோ பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட்டன. மஹிந்த ராஜபக்ஷ 13பிளஸ் என்று குறிப்பிட்டதோடு சர்வகட்சி அறிக்கையும் தயாரிக்கப்பட்டது. அதன் பின்னர் மைத்திரி-ரணில் கூட்டாட்சியில் புதிய அரசியலமைப்புக்கான நகர்வுகள் முன்னெடுக்கப்பட்டன. இவற்றில் கோட்டாபய கூட அரசியல் தீர்வு பற்றி இந்தியப் பிரதமருக்கு வாக்குறுதி அளித்துள்ளார். இவ்வாறான பின்னணியில் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வொன்று வழங்கப்பட வேண்டும். அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட வேண்டும். அதற்காகவே நாம் ஈடுபாட்டை தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வருகின்றோம். விசேடமாக இந்தியா தமிழர்களின் விடயத்துடன் நீண்டகாலமாக தொடர்பு பட்டுள்ளது என்ற அடிப்படையில் அவர்களுக்குள்ள தார்மீக கடமையை முன்னெடுக்குமாறு நாம் கோரியுள்ளோம். நாம் எமது மக்கள் வழங்கிய ஆணையை மீறாது சரியான திசையில் பயணிக்கின்றோம். இதனை சில தரப்புக்கள் அரசியலுக்காக குழப்புவதற்கு முனைகின்றன என்றார்.

இது இவ்வாறிருக்க 13வது திருத்தத்தை நான் ஏற்றுக் கொள்ளவில்லை. என்று யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஶ்ரீதரன் தெரிவித்தார்.

தமிழரசுக்கட்சியின் மத்தியகுழு கூட்டம் ஜனவரி 30 வவுனியாவில் உள்ள தனியார் விடுதியில் இடம் பெற்றதன் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.அவர் மேலும் தெரிவிக்கையில், 13வது திருத்தச்சட்டத்தில் எனக்கு உடன்பாடு இல்லை. ஏனெனில் எமது மக்களை ஏமாற்றும் வகையில் பொய்யாக பிணையப்பட்டுள்ள சில விடயங்கள் அதில் இருக்கின்றது. மேலும் அதிலே தெளிவாகவும் சொல்லப்பட வில்லை. அத்தோடு இது தொடர்பாக எங்களது கூட்டத்தில் ஆராய்ந்திருந்தோம். இந்தியாவிடம் நாங்கள் 13ஐ பற்றி கேட்கத்தேவையில்லை.(21ம்பக்கம்)

தற்பொழுது ON LINE இல் வகுப்புகள்

Math & Physics Tutoring
(For High School Students)



Special Classes for IB, AP & University Students
Math: Grade 9-12, Advanced Functions,
Calculus & Vectors and Data Management.
Physics: Grade 11 & 12
கணித வகுப்புக்கள் தரம் 9 முதல் 12 வரை
பௌதீகவியல் வகுப்புக்கள் தரம் 11 முதல் 12 வரை

Instructor: S. Elancheliyan, B. Sc (Sri Lanka), B. Eng (Canada)
சி.இளஞ்செழியன்
Tel: 416-524-0424

# காணாமல் போனோர் பிரச்சனைக்கு போராட்டங்கள் மூலம் தீர்வில்லை யாழ்ப்பாணத்தில் உறுதிபடக் கூறினார் நீதிஅமைச்சர்

காணாமல் ஆக்கப்பட்டோர் தமது பிரச்னைக்கு தீர்வு வேண்டுமாயின் அரசுடன் பேச்சு நடத்தவேண்டும். போராட்டங்களை மேற் கொள்வதன் மூலம் எந்தவிதமான தீர்வைப் பெற்றுக் கொள்ள முடியாது இவ்வாறு யாழ்ப்பாணத்தில் வைத்து உறுதிபடத் தெரிவித்தார் நீதி அமைச்சர் அலி சப்ரி.



போராட்டங்களை மேற் கொள்வது அவர்களது ஜனநாயக உரிமை. அதனை மதிக்கின்றேன் என்றும் அவர் குறிப்பிட்டார். யாழ்ப்பாணத்தில் நீதி அமைச்சின் நடமாடும் சேவையை ஆரம்பித்து வைத்த பின்னர் ஊடகங்களுக்கு தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் வடக்கு மாகாணத்தில் காணாமலாக்கப் பட்டோரின் உறவினர்கள் நீண்டகாலமாக போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்கள். இன்றைய தினம் யாழ்ப்பாணத்திலும் எமது நிகழ்வு நடக்கும் இடத்துக்கு முன்னால் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்கள்.

28 ஜன 2022 (வெள்ளி) நான் முல்லைத் தீவில் ஒரு நிகழ்வில் கலந்துகொண்ட போதும் அங்கும் அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டார்கள். அவர்களை நான் சந்திக்க அழைத்தேன். ஆனால் தாங்கள் சந்திக்க விரும்பவில்லை என்று அவர்கள் கூறினார்கள்.

எனவே அதிலிருந்து ஒன்றை நான் புரிந்து கொள்ளக்கூடியதாக இருந்தது. அவர்கள் போராட்டத்துக்காகவே வந்திருக்கின்றார்கள், அவர்களின் பிரச்னைக்குரிய தீர்வு தேவையில்லை என்பது தெரிந்தது. அவர்களுக்கு போராட்டத்தின் மூலம் தீர்வு கிடைக்காது. கடந்த 13 வருடங்களாக போராட்டங்களை மேற்கொண்டு அவர்களுக்கு என்ன தான் கிடைத்தது? போராட்டங்களை மேற் கொள்வதன் மூலம் எதையும் அவர்கள் பெற்றுக் கொள்ள முடியாது.

குறிப்பாக இயக்கங்களில் இருந்தவர்களின் உயிரை மீட்டுத் தருமாறு கூறினால் அதை பெற்றுக் கொடுக்க முடியாது தானே. அதை அவர்கள் புரிந்து கொள்ளவேண்டும். ஆனால் இந்த காணாமல் ஆக்கப்பட் டோர் பிரச்னைக்கு ஒரு தீர்வு வழங்க வேண்டும். அதை நான் ஏற்றுக் கொள்கின்றேன். இந்த காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளது போராட்டங்களுக்கு பின்னால் யாரோ இருக்கிறார்கள் – அரசியல் இருக்கின்றது. குறிப்பாக இந்த போராட்டங்களை மேற்கொண்டு அரசியல் களமிறங்கி வாக்குகளை சுவீகரித்து பாராளுமன்றத்துக்கு செல்ல இருக்கின்றார்கள். ஆனால் நான் ஒன்றை கூறிவைக்க விரும்புகின்றேன், நீதி அமைச்சர் என்ற ரீதியில் காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்னைக்கு தீர்வு வேண்டுமானால் அது அரசுடன் பேசித் தான் அதற்குரிய தீர்வை பெற்றுக் கொள்ள வேண்டும். போராட்டங்களை மேற்கொண்டு தீர்வைப் பெற் றுக் கொள்ள முடியாது என்றார்.

நீதி அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட நீதிக்கான அணுகல் எனும் தொனிப் பொருளிலான நடமாடும் சேவை யாழ். மத்திய கல்லூரியில் இடம் பெற்ற போது, அதற்கு எதிர்ப்பு தெரிவித்து காணாமல் போனோரின் உறவுகள் போராட்டத்தில் ஈடுபட்டனர். காலை 10.30 மணியளவில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி முன்பாக காணாமல் போனோரின் உறவுகள் நீதி அமைச்சின் நடமாடும் செயலமர்வில் காணாமல் போனோர் விவகாரத்தை கையில் எடுக்கக்கூடாது என தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

# 13ஐ இடைக்காலத் தீர்வாக புலிகள் ஏற்றனர்! அடேல் பாலசிங்கம் தனது நூலில் தெரிவிப்பு!

தமிழீழ விடுதலைப் புலிகள் மாகாண சபையை நிராகரிக்கவில்லை. மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியைப் பதிவு செய்ததே மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்குத் தான் என்று தமிழர் விவகாரத்தில் மனித உரிமைகள் விடயத்தை ஜெனிவாவில் புலிகள் காலத்திலிருந்து கையாள்பவர்களில் ஒருவரும் பிரான்ஸ் மனித உரிமைகள் மையத்தின் இயக்குநரும் ஆய்வாளருமான ச. வி. கிருபாகரன் தெரிவித்துள்ளார்.

தனது இந்தக் கருத்துக்கு சான்றாக தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தின் துணைவியார் திருமதி அடேல் பாலசிங்கம் எழுதிய 'தி வில் ரு ப்றீடம்' (The Will toFreedom) ஆங்கில நூலை (தமிழில் சுதந்திர வேட்கை என்ற பெயரில் வெளியானது) மேற்கோள் காட்டியுள்ளார்.

13ஆவது திருத்தச் சட்டத்துக்கு எதிராக தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியினர் போராட்டங்களை மேற்கொண்டு வரும் நிலையிலேயே அவர் இந்ததத் தகவலை வெளிப்படுத்தியுள்ளார்.

இதில் வழக்கறிஞர்கள் என்று சொல்வோர் இந்த நூலை வாசிக்க வேண்டும் வாசித்திருப்பார்கள். பொய் சொல் கிறார்கள். இவர்கள் விடுதலைப் புலிகளின் பெயரால் மக்களை ஏமாற்றுவது சரியல்ல.

இந்த நூல் 2001ஆம் ஆண்டு வெளியாகியிருந்தது. இந்த விடயம் தவறு என்றால் உடனடியாகவே விடுதலைப் புலிகள் மறுத்து இருப்பார்கள் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ச. வி. கிருபாகரன் ஆங்கில நூலின் கூறிய 256— 258ஆம் பக்கங்களை மேற்கோள்காட்டிய விடயங்கள் சுதந்திர வேட்கை என்ற பெயரில் தமிழில் வெளியான நூலில் 341 — 345ஆம் பக்கங்களில் உள்ளன. வாசகர்களின் இலகுவுக்கு அந்தப் பக்கங்களில் குறிப்பிடப் பட்ட விடயத்தின் முக்கிய அம்சங்கள் அப்படியே இங்கு பிரசுரமாகின்றது.

'மாற்று வழிகளைப் புலிகள் தேடுவது என்பது அரசியல் சுதந்திரத்தை உறுதிப் படுத்தி தனி அரசை நிறுவுவது என்ற அவர்களின் உறுதியான கொள்கைக்கு மாறானது ஆகாதா என தனிப்பட்ட உரையாடல் ஒன்றின் போது பாலாவிடம் நான் கேட்டேன். அதற்கு புலிகளின் அரசியல் வியூகத்திற்குள் எந்தக் குழப்பமும் இல்லை என்று பாலா பதிலளித்தார்.

மேலும் 'விடுதலைப் புலிகளைப் பொறுத்த வரை இது, சிங்கள மக்களுடன் தமிழ் மக்களுக்கான சகவாழ்வின் சாத்தியக் கூறுகளைச் சோதிக்கும் ஒரு தீவிரமான பரிசோதனையாகும். இந்த மாற்று வழிகளைத் தேடுவதன் காரணமாகப் புலிகள் எதையும் இழந்து விடப் போவதுமில்லை என்றும் மாகாண சபைத் தேர்தலில் புலிகள் வெற்றி பெற்றால் அவர்கள் வரித்துக் கொண்ட அரசியல் இலட்சியமான தமிழர் தாயகம் மற்றும் தமிழ்த் தேசம் ஆகிய கோட்பாடுகளை அசைக்க முடியாத யதார்த்தங்களாக அவர்கள் மாற்றியமைப்பார்கள் எனவும் பாலா எனக்கு விளக்கினார்.

மேலும் 'நிரந்தர தீர்வு ஒன்றுக்கு மாகாண சபை முறைமை ஒரு சரியான அடிப்படை அல்ல. நாங்கள் சிங்கள மக்களுடன் சமாதானத்தையும் இணக்கமான சக வாழ்வையும் விரும்புகின்றோம். அதனால் விடுதலைப் புலிகள் இயக்கமானது மாகாண சபைத் தேர்தலை ஓர் இடைக்கால ஏற்பாடாக மாத்திரம் எதிர் கொள்வதற்குத் தீர்மானித்திருக்கின்றதே அல்லாமல் அதனை ஒரு நிரந்தர தீர்வாக அல்ல.

மாகாண சபைத் தேர்தல்களில் பங்

கேற்று மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளாக நாங்கள் அங்கீகாரத்தைப் பெற்ற பின்னர் — தமிழ் மக்களுக்கான பாதுகாப்பு ஏற்பாடு என்ற முக்கியமான விடயத்தையும் உள்ளடக்கியதான நிரந்தர தீர்வைக் காண்பதற்கான பேச்சு வார்த்தைகளை முன்னெடுக்க முடியும்' என்று திரு, ஹமீத் அவர்களுக்கு பாலா விளக்கினார் என்றும் அந்த நூலில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை 13ஆவது திருத்தச் சட்டத்தை இந்தியா தனது தேவைக்காக உருவாக்கியது என்ற கருத்தும் தவறானது என்று கூறிய அவர் அவ்வாறு இந்தியா தனது நலன் கருதி உருவாக்கியிருந்தால் இன்றும் இலங்கை அரசாங்கம் அதன் கைப் பிள்ளையாக இருந்திருக்கும். சீனா வசம் சென்றிருக்காது என்றும் கூறினார்.

LAW OFFICE of THELMA WILLIAMS

Barrister, Solicitor, Notary Public, Commissioner (ON)
LL.B (Sri Lanka)

❑ FAMILY LAW:
- Divorce
- Separation
- Property Division

❑ REAL ESTATE

❑ WILLS and ESTATES

❑ EMPLOYMENT LAW
- ODSP, CPP disability
- Wrongful Dismissal
- Long-term Disability

❑ ADMINISTRATIVE LAW

❑ POWERS OF ATTORNEY, AFFIDAVITS, STATUTORY DECLARATIONS

❑ விவாகரத்து, சட்டப்படி பிரிதல், சொத்துக்களை பிரித்தல் போன்ற குடும்ப வழக்குகள்,

❑ காணி, வீடு வாங்குதல், விற்றல் தொடர்பான சட்டங்கள்

❑ உயில் மற்றும் எஸ்ரேற்ஸ்

❑ தொழில்சார் சட்டம்

❑ நிர்வாக சட்டம்

❑ சட்ட ஆவணங்களை உருவாக்குதல்

கனேடிய சட்டத்துறையில் பல வருடங்கள் அனுபவம் வாய்ந்த சட்ட வல்லுனர்களின் நம்பிக்கையும், உத்தரவாதமுமான சேவை

Quality, Dependable Service with many years of Canadian legal experience.

TEL:647-777-8424
Suite #300, 10 Milner Business Court,
Scarborough, Ontario M1B 3C6
(just 2 minutes north of HWY 401)

PLEASE CALL FOR AN APPOINTMENT

# தமிழர்கள் கிடைக்காத விடயத்திற்குப் போராடுகிறார்கள் யாழ்ப்பாணத்தில் வைத்து நீதிஅமைச்சர் சப்றி தெரிவிப்பு!



கிடைக்காத விடயம் ஒன்றினை பெறுவதற்கு சில தமிழ் அரசியல்வாதிகள் முயற்சிக்கின்றார்கள் என நீதி அமைச்சர் மொகமட் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

31 ஜனவரி 2022 யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போது கருத்து வெளியிட்ட நீதி அமைச்சர் மொகமட் அலி சப்ரி, சில அரசியல்வாதிகள் இங்குள்ள இளைஞர் யுவதிகளை பிழையாக வழி நடத்துகிறார்கள். கிடைக்காது என தெரிந்து கொண்டும் அதனை பெற முயற்சிக்கிறோம் என இளைஞர்களை மக்களை தூண்டி விடுகிறார்கள் அது சாத்தியமல்லாத விடயம். எத்தனை இளைஞர் யுவதிகளை இவ்வாறான அரசியல்வாதிகளின் போராட்டத்தின் மூலம் இழந்து விட்டோம் எத்தனை இளைஞர் யுவதிகள் வடக்கில் தமது எதிர்காலத்தை இழந்து விட்டார்கள்.

வடக்கில் உள்ள இளைஞர்களுக்கு நான் கூறிவைக்க விரும்புகின்றேன் உங்களை பிழையாக வழிநடாத்தும் அரசியல்வாதிகளுக்கு பின்னால் செல்லாதீர்கள் உங்களுக்கு நல்ல சிறப்பான எதிர்காலம் உள்ளது உங்களுக்கு முன்னால் உலகம் உள்ளது உலகத்தை நோக்கி உற்றுப் பாருங்கள். ஆனால் அரசியல்வாதிகளுக்கு பின்னால் செல்லாதீர்கள். அத்தோடு இந்த 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துமாறு கோரி கடிதம் அனுப்பினார்கள் அவ்வாறு அனுப்புவதன் மூலம் ஒரு நாடு கிடைத்து விடுமா?

ஏற்கனவே 13 ஆம் திருத்தச் சட்டம் இங்கே நடைமுறையில் உள்ளது அதனை நாங்கள் பேசி அதனை நடைமுறைப் படுத்துமாறு கோரினால் அது சாத்தியப்படும் அதை விடுத்து நாங்கள் கடிதம் அனுப்புவதன் மூலம் அது நடைபெறாது.

அத்தோடு நானும் வெளிவிவகார அமைச்சரும் எதிர்வரும் காலங்களில் ஜனாதிபதி அவர்களுடன் தமிழ் பேசும் அனைத்து கட்சியினரையும் சந்திப்பதற்கான ஏற்பாடுகளை நாங்கள் விரைவில் செய்ய உள்ளோம். அவ்வாறான சந்திப்புகள் மூலம் இங்கு உள்ள பிரச்சினைகள் தொடர்பில் நாங்கள் பேசி அதற்குரிய தீர்வினைப் பெற்றுக்கொள்ள முடியும். நான் யாழ்ப்பாண சிறைச்சாலைக்கு சென்ற போது அங்கே போதைப்பொருள் தொடர்பான வழக்குடன் சம்பந்தப்பட்டோரே பலர் கைதிகளாக உள்ளார்கள். வடக்கில் இந்த போதைப் பொருளை தடுத்து நிறுத்துவதற்கான வேலைத்திட்டம் மற்றும் போதைப் பொருட்களுட்கு அடிமையானோருக்கு புனர்வாழ்வு மற்றும் விழிப்புணர்வு செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காக நான் யோசித்து இருக்கின்றேன்.

குறிப்பாக யாழ்ப்பாணத்திலும் புனர்வாழ்வு நிலையம் ஒன்றினை ஆரம்பித்து அந்த புனர்வாழ்வு நிலையத்தின் ஊடாக போதைக்கு அடிமையானோருக்கு விழிப்புணர்வு மற்றும் புனர்வாழ்வு அளிப்பதன் மூலம் வடக்கில் இந்த போதைப்பொருள் தொடர்பான பிரச்சினைக்கு தீர்வு எட்டப்படும்.

அத்தோடு நான் இன்று எமது இந்த நடமாடும் சேவை மூலம் ஒரு விடயத்தினை கண்டறிந்து உள்ளேன் வடக்கில் காணி பிரச்சினை என்பது ஒரு பெரிய பிரச்சினையாக காணப்படுகின்றது இந்த விடயத்தினை நாங்கள் கட்டாயம் ஜனாதிபதிக்கு தெரிவித்து அதற்கு என்ன செய்யலாம் என்ற விடயம் தொடர்பில் நான் ஆராய்வேன்" என தெரிவித்துள்ளார்.

# உள்நாட்டு பொறிமுறை மூலம் பிரச்சனைக்குத் தீர்வு! தமிழ் மக்களை "மாடையர்கள்" என நினைக்கும் பீரிஸ்



உள்நாட்டு பொறிமுறை மூலம் பிரச்சனையை தீர்ப்பதே இந்த அரசின் நோக்கமென வெளிவிவகார அமைச்சர் ஜி எல் பீரிஸ் யாழ்ப்பாணத்தில் தெரிவித்தார். இந்த முறை ஐநா சபையில் அரசாங்கத்தின் நிலைப்பாடு என்னவென ஊடகவியலாளர்கள் வினவிய போது மேற்கண்டவாறு தெரிவித்தார். இது ஒரு உள்நாட்டு பிரச்சனை இங்கே பல வருடமாக இடம்பெற்ற ஒரு உள் நாட்டுப் பிரச்சனை

இலங்கை ஒரு அதிக பிரச்சனை உள்ள நாடும் இல்லை உலக நாடுகளுடன் ஒப்பிடும்போது. அத்தோடு நாங்கள் ஏற்கனவே நடந்த பிரச்சினைக்காக நேரத்தையும் வீணடிக்க தேவையில்லை. தற்போது இந்த கொரோனா என்னும் நோய்க்கு முகம் கொடுப்பதால் பல மில்லியன் கணக்கில் பணத்தை செலவழித்துள்ளோம் அதாவது தடுப்பூசி மற்றும் ஏனைய செயற்பாடுகளை முன்னெடுத்து எமது இலங்கை யினை கொரோனா நோயில் இருந்து காப்பாற்றுவதற்கான முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றோம் அதோடு தற்போது உள்ள நிலைமையில் கொரோனா நிலைமை தொடர்பில் அதிக கவனம் செலுத்தி வருகின்றோம் எனவே இலங்கையின் நிலைப்பாடு என்னவென்றால் உள்நாட்டு பொறிமுறை மூலம் நடந்த பிரச்சினைக்கு தீர்வு காண்பது எமது நிலைப்பாடாக காணப்படுகின்றது

தேசிய ஒற்றுமை ஒருமைப்பாடு என்பவற்றை நிலைநாட்டி உள்நாட்டு பொறிமுறை ஒன்றை உருவாக்கி அதன் மூலம் தீர்வு வழங்குவதனை நாங்கள் எதிர்பார்க்கின்றோம் நமது நாட்டின் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷ அவர்கள் மிகவும் உறுதியாக உள்ளார்

அதாவது பல்வேறுபட்ட முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றார் இன ஒற்றுமை மற்றும் நாட்டில் சமாதானத்தை நிலை நாட்டுவதற்கு வருடங்களின் பின்னர் ஒரு நல்ல ஒரு சாதகமான நிலை தற்போதைய கோட்டபாய அரசிற்கு ஏற்பட்டுள்ளது.

இனங்களுக்கிடையில் ஒற்றுமை நல்லிணக்கம் ஏற்பட கூடிய சாத்தியக் கூறுகள் காணப்படுகின்றன அதோடு இது ஒரு முடிவல்ல ஒரு ஆரம்பப் புள்ளியாக இருக்கின்றது ஒரு சிலர் கூறலாம் இது போதுமானதான விடயம் அல்ல என அதை ஏற்றுக்கொள்கின்றோம். ஆனால் அதனை தொடர்ந்து செய்வதற்கு காலம் தேவை

தற்போது பயங்கரவாத தடைச் சட்டத்தில் கூட மாற்றம் செய்யப்பட்டுள்ளது எனவே 42 வருடங்களின் பின்னர் ஒரு மாற்றம் ஏற்பட்டுள்ளது கடந்த நல்லாட்சி அரசாங்கத்தில் இந்த பயங்கரவாத தடைச்சட்டத்தை மாற்றுமாறு கூட யாரும் கூறவில்லை அது மாற்றியமைக்கப்படவும் இல்லை ஆனால் தற்போதுள்ள கோத்தபாய அரசாங்கம் இந்த பயங்கரவாத தடைச் சட்டத்தில் கூட மாற்றங்களை செய்துள்ளது எனவே அவ்வாறு ஒரு முன்னேற்றகரமான ஒரு நிலை இருக்கின்ற போது நாங்கள் ஐநா சபையில் ஜெனிவா கூட்டத்தில் நாங்கள் இந்த விடயங்களை எடுத்துரைக்கவுள்ளோம் என்றார்.

இதேவேளை மனிதஉரிமைவிவகாரம், சட்டத்தின்ஆட்சி நல்லாட்சி ஆகிய விடயங்களில் இலங்கை அரசாங்கம் முன்னேற்றத்தை காண்பிக்க வேண்டிய கட்டாயம் குறித்து இலங்கைக்கான தனது விஜயத்தின் போது எடுத்துரைத்ததாக ஐக்கிய இராச்சியத்தின் மத்திய தென்னாசியாவிற்கான அமைச்சர் தாரிக் அஹமட் தெரிவித்துள்ளார் பேட்டியொன்றில் இதனை குறிப்பிட்டுள்ள அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

கருத்து வேறுபாடுடைய விடயங்கள் உள்ளன.ஐக்கியநாடுகள் மனித உரிமை பேரவையில்நீதி பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கம் சமாதானத்தை கட்டியெழுப்புதல் ஆகியவற்றிற்கு ஆதரவளிக்கும் தீர்மானம் உள்ளது.

ஐக்கியநாடுகளின் செயற்பாடுகளிற்கான பிரிட்டன் ஆதரவுகுறித்து நான் இலங்கை ஜனாதிபதியுடனும் அரசாங்கத்தின் ஏனைய உறுப்பினர்களுடனும் நான் ஆராய்ந்தேன். இலங்கை அரசாங்கம் மனிதஉரிமை விவகாரம், சட்டத்தின் ஆட்சி நல்லாட்சி ஆகிய விடயங்களில் இலங்கை அரசாங்கம் முன்னேற்றத்தை காண்பிக்கவேண்டிய கட்டாயம் குறித்து நான் எடுத்துரைத்தேன்.

இலங்கையின் அனைத்து சமூகத்தினருக்கும் நன்மையளிக்க கூடிய பொருளாதார அபிவிருத்தி குறித்த அரசாங்கத்தின் பேராவலுடனான திட்டத்திற்கான அடிப்படை இது.(21ம் பக்கம் பார்க்க)

**Basement for Rent**
**Mccowan / Mcnical**
**1 Room Apartment For Rent.**
**(Perfer Couples or Small Family)**
**call 647 459 0097**

# ஒன்ராறியோ மாநில கல்வி அமைச்சில் இருந்து தமிழின அழிப்பு அறிவூட்டல் வாரத்திற்கு நிதி ஒதுக்கீடு

ஜனவரி 31, 2022 அன்று கல்வி அமைச்சர் திரு. செச்சே அவர்கள் தமிழின அழிப்பு அறிவுட்டல் கிழமைக்கான நிதி ஒதுக்கீடாக ஒன்ராறியோ மாநில கல்வி அமைச்சிலிருந்து ஏறத்தாழ 50,000 டொலர்களை கனடா தமிழ்க் கல்லூரிக்கு ஒதுக்கியுள்ளார். நடைபெற்றுக் கொண்டிருக்கும் 2021 –2022 கல்வியாண்டுக்கான தமிழின அழிப்பு நினைவுகூரல் நிதியமாக இந்நிதி கல்வி அமைச்சர் ஸ்டீபன் லெச்சே அவர்களால் வழங்கப்பட்டது.

இதன்படி, ஒன்ராறியோவில் வாழும் தமிழ் மாணவர்கள் தமிழின அழிப்புத் தொடர்பான தகவல்கள், அது தொடர்பான ஆதாரங்கள் போன்றவற்றைப் பெற்றுக் கொள்வதற்கும், இன அழிப்புக்கு முகங் கொடுத்த சமுகம் என்ற வகையில் மாணவர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள மன அழுத்தங்களைக் கண்டறிந்து அவற்றைப் போக்குவதற்கும் சூழல் மாறுதலால் தமிழர் சமுகத்தினுள் ஏற்பட்டுள்ள தலைமுறையினர்களுக்கிடையிலான சிக்கல்களைத் தீர்ப்பதற்கும் இந்நிதியானது கனடா தமிழ்க் கல்லூரியினால் பயன்படுத்தப்படும்.

கனடாவில் நீண்ட காலமாக இயங்கி வரும் கனடாத் தமிழ் கல்லூரியானது, கனடாவில் வளர்ந்து வரும் கனடிய இளம் தலைமுறையினரின் மேம்பாட்டுக்காக செயற்படுவதுடன் தமிழ் இளம் சந்ததியினர் தம் மொழி, வரலாறு, தமது இனத்துக்கு எதிராக சிறிலங்காவில் மேற் கொள்ளப்படும் இன அழிப்பு நடவடிக்கை போன்றவற்றைப் பயிலுவதற்கும் உறுதுணையாக விளங்குவதுடன், மேலும் அவர்களின் பல்வேறு அறிவுசார் வளர்ச்சித் திட்டங்களையும் நடைமுறைப்படுத்தி வருகின்றது.


இது இவ்வாறிருக்க, கல்வி அமைச்சர் திரு. லெச்சே அவர்களும் அவர் சார்ந்துள்ள ஒன்ராறியோ கன்சர்வேட்டிவ் கட்சியும் தமிழர் நலன்சார்ந்த பல செயற்பாடுகளை முன்னெடுத்து வருவது அனைவரும் அறிந்ததே. அவ்வகையில் ஒன்ராறியோ கன்சர்வேட்டிவ் கட்சி தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு நீண்ட காலமாக தனது ஆதரவினை அளித்து வருகின்றது. அமைச்சர் திரு. செச்சே அவர்கள், சட்டமன்ற உறுப்பினர் திரு. விஜய் தணிகாசலம் அவர்களால் முன் மொழியப்பட்ட தமிழின அழிப்பு அறிவூட்டல் வாரம் தொடர்பான சட்டமூலம் 104ஐ ஆதரித்து ஒன்ராறியோ சட்ட



மன்றத்தில் பேசியிருந்தார். அத்துடன், 2013இல் சிறிலங்காவில் நடைபெற்ற பொதுநலவாய உச்சி மாநாட்டை புறக்கணித்த முன்னாள் கனடிய பிரதமர் ஹாப்பர் அவர்களின் குழுவிலும் திரு. லெச்சே அங்கம் வகித்திருந்தார். அது மட்டுமன்றி, நாம் இப்போது ஜனவரி மாதத்தில் கொண்டாடி வரும் தமிழ் மரபுத் திங்களுக்கான சட்டத்தினைக்கூட 2014ஆம் ஆண்டு பெப்ரவரியில் கன்சர்வேட்டிவ் கட்சி உறுப்பினரான சட்டமன்ற உறுப்பினர் திரு. டோட் ஸ்மித் அவர்களே ஒன்ராறியோ நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தியிருந்தார்.









சிறிலங்காவில் நடைபெற்றது தமிழர்கள் மீதான இன அழிப்பே என்பதை மேற்குலக நாடுகள் அங்கீகரிக்க வேண்டும் என்பதே தமிழ் மக்களின் நீண்ட கால கோரிக்கையாக இருந்து வருகிறது. அக்கோரிக்கைக்கு வலுச் சேர்க்கும் வகையில் தமிழின அழிப்பு அறிவூ ட்டல் வாரம் எனும் சட்டமூலத்தினை ஒன்ராறியோ நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தி அதனை சிறிலங்கா அரசின் பலத்த அழுத்தங்கள் மற்றும் எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் சட்டமாகக் கொண்டு வந்தவர் ஸ்காபரோ றூஜ் பார்க் தொகுதிக்கான ஒன்ராறியோ சட்டமன்ற உறுப்பினர் திரு. விஜய் தணிகாசலம் என்பது குறிப்பிடத்தக்க விடயம்.

# உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதை அறியும் உரிமை காணாமல் போனோரின் குடும்பத்தினருக்கு இருக்கின்றது ஐ.நா.சபையின் வதிவிடப் பிரதிநிதி ஹனா சிங்கர் ஹம்டி தெரிவிப்பு

பன்னிரண்டு வருடகாலத் துன்பம் இன்னமும் ஆறாமல் இருக்கின்றது. தமது அன்பிற்குரியவர்களுக்கு என்ன நேர்ந்தது என்பதை அறிந்து கொள்வதுடன் பொறுப்புக்கூறலை உறுதி செய்யுமாறு வலியுறுத்துவதற்கான உரிமை காணாமல் போனோரின் குடும்பத்தினருக்கு இருக்கின்றது. எனவே உண்மையையும் நீதியையும் நிலைநாட்டுவதை முன்னிறுத்திய அவர்களது போராட்டத்திற்கு சமூகம் ஆதரவளிக்க வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி ஹனா சிங்கர் ஹம்டி வலியுறுத்தியுள்ளார்.

இரு நாட்கள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு யாழ்ப்பாணத்திற்குச் சென்றிருந்த ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி ஹனா சிங்கர் ஹம்டி, அங்கு தமிழ் அரசியல்கட்சிகளின் பிரதிநிதிகளைத் தனித்தனியாகச் சந்தித்துக் கலந்துரையாடல்களை முன்னெடுத்திருந்தார்.

அத்தோடு யாழ்ப்பாணத்திலுள்ள ஐக்கிய நாடுகள் அலுவலக அதிகாரிகளைச் சந்தித்துப் பேசியிருந்த அவர், ஐ.நா அலுவலகத்தின் ஊடாக அங்கு முன்னெடுக்கப்பட்டு வரும் நடவடிக்கை



களை தொடர்பிலும் விரிவாக ஆராய்ந்தார். இது குறித்து தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் பதிவொன்றைச் செய்திருக்கும் ஐ.நா வதிவிடப் பிரதிநிதி ஹனா சிங்கர், யாழ்ப்பாணத்திலுள்ள ஐ.நா அலுவலக அதிகாரிகளின் அர்ப்பணிப்பும் ஒருமைப்பாடும் மிகச் சிறந்த முன்மாதிரியான செயற்பாடுகளாகும். இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பு, பொருளாதார அபிவிருத்தி, தரமான கல்வி, நல்லிணக்கம், உளவியல் ரீதியான ஆதரவு, உரியவாறான மீள் குடியேற்றம் உள்ளடங்கலாக யாழ்ப்பாண மக்களுக்குப் பல்வேறு விடயங்கள் வழங்கப்படவேண்டியிருக்கின்றன என்று அதில் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

போரினால் பாதிக்கப்பட்டவர்கள், அவர்களின் துன்பத்தை வெளிப்படுத்துவதற்கு ஏதுவான பாதுகாப்பான சூ ழலை ஏற்படுத்திக் கொடுப்பதும் அதனைப் பகிர்ந்து கொள்வதும் அவர்களை அதிர்ச்சியிலிருந்து மீளச்செய்வதற்குப் பங்களிப்புச்செய்யக்கூடிய மிகவும் அவசியமான காரணிகளாகும்' என்றும் தெரிவித்திருக்கக்கூடிய ஹனா சிங்கர், ஒட்டுமொத்த சமூகத்தினதும் நலனை உறுதிப்படுத்தும் வகையில் அனைத்து வயதுப்பிரிவினருக்கும் அவசியமான உளவியல் ரீதியான ஆலோசனைகள் மற்றும் உதவிகள் இலங்கையிலுள்ள ஐக்கிய நாடுகள் அலுவலகத்தினால் வழங்கப்பட்டு வருவதாகவும் குறிப்பிட்டிருக்கின்றார்.

அதேவேளை காணாமல் போனோர் விவகாரம் தொடர்பில் பதிவொன்றைச் செய்திருக்கும் அவர் பின்வருமாறு கூறியிருக்கின்றார்: பன்னிரண்டு வருட காலத் துன்பம் இன்னமும் ஆறாமல் இருக்கின்றது. தமது அன்பிற்குரியவர்களுக்கு என்ன நேர்ந்தது என்பதை அறிந்துகொள்வதற்கான உரிமையும் பொறுப்புக்கூறலை உறுதிசெய்யுமாறு வலியுறுத்துகின்ற உரிமையும் காணாமல் போனோரின் குடும்பத்தினருக்கு உள்ளது. தமது காயத்தை ஆற்றுவதற்கான தேவை அவர்களுக்கு இருக்கின்றது.

இவ்வாறானதொரு பின்னணியில் உண்மையையும் நீதியையும் நிலைநாட்டிக் கொள்வதற்கான அவர்களது போராட்டத்திற்கு சமூகம் ஆதரவளிக்க வேண்டும்' என்று வலியுறுத்தியுள்ளார்.

நீதியமைச்சின் ஏற்பாட்டில் 'நடமாடும் நீதிக்கான அணுகல்சேவை' என்ற செயற்திட்டம் (18ம் பக்கம் பார்க்க)

# 10வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! பெப்ரவரி மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவ ருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக் குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர் களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர் காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

9 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத் தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவு களால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த ஒன்பது ஆண்டுகளு க்கு மேலாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின் றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்ற டைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள்.

இந்த வருடத்தில் ஒருநாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வு க்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ? ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக. தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் பார்க்க உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.


29 ஜனவரி 2022 முதல் 04 பெப்ரவரி 2022 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதர வோடு செப்டம்பர் முதல் 10வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:-**

**ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## 36வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு ஆறுமுகம் நாகநாதர்

புங்குடுதீவு 10ம் வட்டாரம் பொன்னாந்தோட்டத்தைச் சேர்ந்த அமரர் உயர்திரு நாகநாதர் ஆறுமுகம் (கும்பிப்பிள்ளை) அவர்களது 36வது ஆண்டு நினைவு நாள் 07 பெப்ரவரி 2022 திங்கட்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திரு நாகநாதர் ஆறுமுகம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 4வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு சுப்பிரமணியம் சிவகுமாரன்

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு சுப்பிரமணியம் சிவகுமாரன் (கவிஞர் செழியன்) அவர்களது நான்காவது ஆண்டு நினைவு நாள் 03 பெப்ரவரி 2022 வியாழக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு சுப்பிரமணியம் சிவகுமாரன் (கவிஞர் செழியன்) அவர் களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தின ருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர் களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


## 1வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு சுபேந்திரன் (ஸ்ரீ) முத்தையா

புங்குடுதீவு 12ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடா மொன்றியல், ரொற ன்ரோ ஆகிய இடங்களை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு சுபேந்திரன் முத்தையா அவர்களின் முதலாவது ஆண்டு நினைவு நாள் 29 ஜனவரி 2022 சனிக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். கள். திரு சுபேந்திரன் முத்தையா அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தி க்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 9வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு கனகசபை மருதப்பு

நயினாதீவைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த இளைப்பாறிய ஆசிரியர் திரு கனகசபை மருதப்பு அவர்களது ஒன்பதாவது ஆண்டு நினைவு நாள் 06 பெப்ரவரி 2022 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அன்பு இல்லக் குழந்தை களுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திரு கனகசபை மருதப்பு அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தின ருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர் களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 14வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி தங்கராணி சடாச்சரசுந்தரம்

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் லண்டனை வதிவிடமாகவும் கொண்டி ருந்த திருமதி தங்கராணி சடாச்சரசுந்தரம் அவர்களது 14வது ஆண்டு நாள் நினைவு நாள் 29 ஜனவரி 2022 சனிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளு க்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி தங்கராணி சடாச்சரசுந்தரம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தின ருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர் களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


## 9வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி தவேந்திரராணி தேவரத்தினம்

யாழ்ப்பாணம் கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி தவேந்திரராணி தேவரத்தினம் அவர்களது ஒன்பதாவது ஆண்டு நினைவுநாள் 08 பெப்ரவரி 2022 செவ்வாய்க்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திருமதி தவேந்திரராணி தேவரத்தினம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக் கின்றார்கள். "நல்லதை நினை நடப்பது நடக்கும்"

## 12வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு வேலாயுதம் கந்தசாமி

அனலைதீவைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்டி ருந்த திரு வேலாயுதம் கந்தசாமி அவர்களது 12வது ஆண்டு நினைவு நாள் 02 பெப்ரவரி 2022 புதன்கிழமையாகும். அன்றைய நாள் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு வேலாயுதம் கந்தசாமி அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்ட வனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

**மின்னஞ்சல் முகவரி:- Eelanadu.ca**

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு கடந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்




29 ஜனவரி 2022 சனிக்கிழமை புங்குடுதீவு 12ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் மொன்றியல், ரொறன்ரோ கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த ஸ்ரீ என்று அன்பாக அழைக்கப்படும் திரு சுபேந்திரன் முத்தையா அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




29 ஜனவரி 2022 சனிக்கிழமை வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் லண்டனை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி தங்கராணி சடாச்சரசுந்தரம் அவர்களது 14வது ஆண்டு நினைவுநாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




30 ஜனவரி 2022 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி கங்காதரன் ஜெயமதி இணையர்களது செல்வப்புதல்வி ரஜிகா கங்காதரனின் 25வது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வி ரஜிகா தனது பெற்றோர்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




31 ஜனவரி 2022 திங்கட்கிழமை தை அமாவாசை விரத உபயமாக புதுச்செம்மணி வீதி கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருக்கும் திரு திருமதி சந்திரா சிவலோஜினி குடும்பத்தினர் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




01 பெப்ரவரி 2022 செவ்வாய்க்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி தியக்ஷன் சாதனா இணையர்களது இரண்டாவது திருமண நன்நாள் ஆகும். அன்றையதினம் இணையர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.




01 பெப்ரவரி 2022 செவ்வாய்க்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி தியக்ஷன் சாதனா இணையர்களது இரண்டாவது திருமண நன்நாள் ஆகும். அன்றையதினம் இணையர்கள் செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.




01 பெப்ரவரி 2022 செவ்வாய்க்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி தியக்ஷன் சாதனா இணையர்களது இரண்டாவது திருமண நன்நாள் ஆகும். அன்றையதினம் இணையர்கள் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.




02 பெப்ரவரி 2022 புதன்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி தியக்ஷன் சாதனா இணையர்களது இரண்டாவது திருமண நன்நாளுக்காக இன்றையதினமும் இணையர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.




02 பெப்ரவரி 2022 புதன்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி தியக்ஷன் சாதனா இணையர்களது இரண்டாவது திருமண நன்நாளுக்காக இன்றையதினமும் இணையர்கள் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.




02 பெப்ரவரி 2022 புதன்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி தியக்ஷன் சாதனா இணையர்களது இரண்டாவது திருமண நன்நாளுக்காக இன்றையதினமும் இணையர்கள் செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.




02 பெப்ரவரி 2022 புதன்கிழமை அனலைதீவு 5ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு வேலாயுதம் கந்தசாமி அவர்களது 12வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




03 பெப்ரவரி 2022 வியாழக்கிழமை உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு சுப்பிரமணியம் சிவகுமாரன் (கவிஞர் செழியன்) அவர்களது 4வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்





03 பெப்ரவரி 2022 வியாழக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி தியக்ஷன் சாதனா இணையர்களது இரண்டாவது திருமண நன்நாளுக்காக இன்றையதினமும் இணையர்கள் செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.




03 பெப்ரவரி 2022 வியாழக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி தியக்ஷன் சாதனா இணையர்களது இரண்டாவது திருமண நன்நாளுக்காக இன்றையதினமும் இணையர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.




03 பெப்ரவரி 2022 வியாழக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி தியக்ஷன் சாதனா இணையர்களது இரண்டாவது திருமண நன்நாளுக்காக இன்றையதினமும் இணையர்கள் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.




ரொரன்ரோ அல்பியன் பகுதியில் கோவில் கொண்டிருக்கும்

கனடா – அருள்மிகு

# ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்

1771 Albion Rd., Unit #1, Toronto, ON M9W 5S7 (Albion & Hwy 27)

Tel: 416.213.0110 ▪ www.shrimuththumaari.cin



ஆலயம் திறந்திருக்கும் நேரம்
காலை 9.00 மணி முதல் 1.00 மணி வரை
மாலை 5.00 மணி முதல் 9.00 மணி வரை

பூசை நேரம்:
பகல் 12:00 முதல் மாலை 7:30
உற்சவ காலங்களில் பூசை நேரங்கள் மாற்றம் அடையலாம்

அம்பாள் அடியார்களே!

13 பெப்ரவரி 2022 ஞாயிற்றுக்கிழமை
பிரதோஷ விரதம்

15 பெப்ரவரி 2022 செவ்வாய்க்கிழமை
பௌர்ணமி விரத பூஜை
உபயம்:- அழகேசன் குடும்பம்

16 பெப்ரவரி 2022 புதன்கிழமை
மாசிமகம் விரதம் பூஜை
உபயம்:- பா.உதயகுமார்

28 பெப்ரவரி 2022 திங்கட்கிழமை
மகாசிவராத்திரி விரதம்

**இரவுப் பூஜை மாலை 7.00 மணிக்கு ஆரம்பமாகும்**

இவ்வண்ணம்:- ஆலய தர்மகர்த்தா சபையினர்



# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

**Real Estate**
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

**Family Law**
- Divorce
- Custody & Support

**Estate Law**
- Power of Attorney
- Wills & Estate Administration

**Immigration Law**
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

**Business Law**
- Incorporations
- Purchases
- Sales & Leases

**Sasitharan Law Professional Corporation**
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

# தடுப்பூசியை போட்டும் தொற்று வர என்ன காரணம்?



ஆண்ட்ரே பியர்நாத்

உலகெங்கும் கொரோனா வைரஸ் தொற்றின் எண்ணிக்கை மீண்டும் அதி கரித்து வருகிறது. இந்தியா, அமெரிக்கா, பிரான்ஸ், பிரிட்டன், அர்ஜென்டினா பிரேசில் மற்றும் பல நாடுகளில் டெல்டா திரிபு மற்றும் ஒமைக்ரோன் திரிபு ஆகிய இரண்டும் சேர்ந்து தொற்றாளர்களின் எண்ணிக்கையை அதிகரித்து வருகின்றன.

அறிவியலாளர்களும் மருத்துவ ஊழியர்களும் பரிசோதனை செய்யப்பட்டு ஒப்புதல் பெறப்பட்ட தடுப்பூசிகளையே தற்போது நம்பிக்கொண்டிருக்கிறார்கள்.

அவை கொரோனாவைக் கட்டுப்படுத்த எவ்வாறு உதவுகின்றன, உலகெங்கிலும் பல நாடுகளிலும் கொரோனா வைரஸ் தடுப்பூசிகள் பெரும்பாலானவர்களுக்கு செலுத்தப்பட்ட பின்பும் தடுப்பூசிகள் உண்மையாகவே பலன் அளித்துள்ளதா என்ற விவாதம் மீண்டும் கிளம்பியுள்ளது.

ஆனால் கொரோனா தடுப்பூசி விநியோகத்தில் அரசுகள் மேற்கொண்ட நடவடிக்கைகள் போதுமான அளவு இல்லாதது குறித்து கருத்து தெரிவிக்கும் விமர்சகர்கள், தடுப்பூசியின் காரணமாக ஏற்பட வாய்ப்புள்ள பக்க விளைவுகள் அதிகம் உள்ளன என்பதற்கு மறுப்பு தெரிவிக்கிறார்கள்.

ஏனென்றால் இப்போது வரை கொரோனா வைரஸ் தடுப்பூசிகள் உண்டாக்கும் பக்க விளைவுகள் பெரும்பாலும் மிதமாகவும், தடுப்பூசி செலுத்தப்பட்ட சில நாட்களிலேயே நீங்கிவிடும் வகையிலுமே உள்ளன.

தடுப்பூசி போடப்பட்ட இடத்தில் தோல் சிவத்தல், குளிர், காய்ச்சல், தலைவலி, உடல் சோர்வு, தசை வலி மற்றும் வாந்தி வருவது போன்ற உணர்வு ஆகியவையே இதுவரை கொரோனா தடுப்பூசி எடுத்துக் கொண்டவர்களுக்கு பெரும்பாலும் உண்டான பக்க விளைவுகளாக உள்ளன.

தீவிரமான பக்க விளைவுகளான கடும் ஒவ்வாமை, ரத்தம் உறைதல், இதய வெளியுறை சவ்வு வீக்கம், இதயத் தசை அழற்சி போன்ற பக்க விளைவுகள் மிக மிக அரிதாக இருப்பதாகவே மருத்துவத் துறையினர் கூறுகிறார்கள்.

கொரோனா வைரஸ் தடுப்பூசி செலுத்துவதன் மூலம் ஒரு நபருக்கு கிடைக்கும் பலன்கள் தடுப்பூசியால் உண்டாகும் பக்க விளைவுகளை விடவும் அதிகம் என்று அவர்கள் கூறுகிறார்கள்.

### தடுப்பூசிகளின் நோக்கம் என்ன?

பிரேசிலில் உள்ள பிரபல குழந்தைகள் நல மருத்துவரும் தொற்று நோயியல் நிபுணருமான ரோனெட்டொ கேஃப்ரி இடம் பிபிசி பேசியது.

கொரோனா வைரஸ் பெருந்தொற்றின் ஆரம்ப காலத்தில் தயாரிக்கப்பட்ட தடுப்பூசிகள், மருத்துவமனையில் அனுமதிக்க வேண்டிய சூழல், மரணங்கள் உள்ளிட்ட தீவிர நோய் பாதிப்புகளை குறைப்பதையே நோக்கமாக கொண்டிருந்தன என்று அவர் கூறுகிறார்.

லேசான, மிதமான அல்லது அறிகுறிகளற்ற கொரோனாவை விடவும் இப்படி தீவிரமான உடல்நல பாதிப்பு உண்டாவதிலிருந்து தடுப்பூசிகள் பாதுகாப்பு அளிக்கும் என்று கூறுகிறார் பிரேசிலியன் சொசைட்டி ஆஃப் இம்யூனைசேஷன் எனும் அமைப்பின் இயக்குநராக இருக்கும் மருத்துவர் ரோனெட்டொ கேஃப்ரி.

கொரோனா வைரஸ் தடுப்பூசிகள் முக்கிய நோக்கம் என்பது ஒருவருக்கு கோவிட்-19 தொற்று வராமல் தடுப்பதல் ஆனால் ஒருவருக்கு தொற்று ஏற்பட்ட பிறகு உடலில் அதன் தீவிரத் தன்மையைக் குறைப்பதுதான் என்கிறார் அவர்.

பல்லாண்டு காலமாக பயன்பாட்டில் இருக்கும் பிற தடுப்பூசிகளின் நோக்கமும் இதுதான். இன்ஃப்ளுாயன்சா வைரஸ் தொற்றுக்கு எதிரான தடுப்பூசி ஆண்டுதோறும் செலுத்தப்படுகிறது. ஆனால் இதனால் யாருக்கும் ஃப்ளூ காய்ச்சல் வராமல் போவதில்லை என்றாலும், அதிகம் பாதிக்கப்பட வாய்ப்புள்ள குழந்தைகள், கர்ப்பிணி பெண்கள் மற்றும் முதியோர் ஆகியோருக்கு உண்டாகும் நோயின் தீவிரத்தை குறைக்கிறது என்கிறார் அவர்.

இன்னும் பரந்த கண்ணோட்டத்தில் பார்க்க வேண்டுமானால் நோய்த்தொற்றின் தீவிர பாதிப்பு என்பது ஒட்டுமொத்த சுகாதார கட்டமைப்பின் மீதும் மோசமான தாக்கம் செலுத்த வாய்ப்புள்ளது. மூச்சுக் கோளாறு காரணமாக பெரும்பாலானவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை குறையும்போது, பிற நோயாளிகளுக்குத் தேவையான சிகிச்சையை மருத்துவப் ஊழியர்களால் முறையாக வழங்க முடியும்.

உலகெங்கிலும் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளும் இதையே காட்டுகின்றன. காமன்வெல்த் ஃபண்ட் மேற்கொண்ட ஆய்வின்படி நவம்பர் 2021 வரையிலான காலகட்டத்தில் அமெரிக்காவில் மட்டும் பதினோரு லட்சம் பேரின் மரணத்தை யும் ஒரு கோடியே மூன்று லட்சம் பேர் மருத்துவமனையில் அனுமதித்து சிகிச்சை பெற வேண்டிய சூழ்நிலையும் தடுப்பூசி கள் தடுத்துள்ளன என்று தெரியவந்தது.

நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்புக்கான ஐரோப்பிய மையம் மற்றும் உலக சுகாதார நிறுவனம் ஆகியவை மேற்கொண்ட ஆய்வில் ஐரோப்பிய கண்டத்தில் தடுப்பூசி விநியோகம் தொடங்கிய பின்பு, 33 நாடுகளில் 60 வயதுக்கும் மேற்பட்ட சுமார் 4 லட்சத்து 70 ஆயிரம் பேரின் மரணம் தவிர்க்கப்பட்டுள்ளது என்று கண்டறியப்பட்டது.

### மீண்டும் தொற்று வர மூன்று காரணங்கள்

தடுப்பூசி செலுத்திக்கொண்ட பின்பும் பலருக்கு மீண்டும் கொரோனா தொற்று உண்டாவது சமீபகாலங்களில் உறுதியாகியுள்ளது. இதற்கு மூன்று முக்கிய காரணிகள் உள்ளன.

1. தடுப்பூசி போட்ட பின்பு கிறிஸ்துமஸ், புத்தாண்டு போன்ற கொண்டாட்டங்களுக்காக மக்கள் அதிகமாக வெளியே வருகிறார்கள். இதனால் கொரோனா வைரஸ் பரவுவதற்கான வாய்ப்பு அதிகமாக உள்ளது.

> **ஒருவர் பாதிக்கப்பட்டால் பூஸ்டர் தடுப்பூசி உள்பட மூன்று டோஸ் தடுப்பூசியும் செலுத்திக் கொண்டிருக்கும் நிலையில் அந்த நபர் மருத்துவமனையில் சேர்ந்து சிகிச்சை பெறவேண்டிய தேவை என்பது 81 சதவிகிதம் குறைவாக இருக்கிறது**

2. இரண்டாவது காரணம் கொரோனா தடுப்பூசி மூலம் கிடைக்கும் நோய் எதிர்ப்புத் திறன் மிகவும் நீண்ட காலத்துக்கு நிலைப்பதில்லை. தடுப்பூசியை உடலில் செலுத்தி சில காலம் ஆன பின்பு அதன் மூலம் கிடைக்கும் பாதுகாப்பு குறைகிறது. ஒருவருக்கு எந்தத் தடுப்பூசி செலுத்தப்பட்டது, அவரின் வயது உள்ளிட்டவை இதைத் தீர்மானிக்கின்றன என்கிறார் மருத்துவர் ரோனெட்டொ கேஃப்ரி.

இதனால்தான் பூஸ்டர் டோஸ் ஃ மூன்றாவது டோஸ் தடுப்பூசியை முதியவர்களுக்கும் நோய் எதிர்ப்பு திறன் குறைவாக உள்ளவர்களுக்கும், பின்பு ஒட்டுமொத்த மக்கள் தொகைக்கும் செலுத்த வேண்டும் என்ற தேவை உண்டானது என்று அவர் கூறுகிறார்.

3. மூன்றாவது காரணம் ஒமைக்ரோன் திரிபுக்கு எதிராகத் தடுப்பூசிகள் மூலம் அல்லது ஏற்கனவே தொற்றுக்கு உள்ளானபோது உடலில் உண்டான நோய் எதிர்ப்பான்கள் மூலம் கிடைக்கும் நோய் எதிர்ப்புத் திறன் ஒப்பீட்டளவில் குறைவாக இருப்பதும், ஒமைக்ரோன் மிக வேகமாக பரவும் தன்மை உடையதும் ஆகும்.

தடுப்பூசி செலுத்தியவர்களுக்கு மீண்டும் கொரோனா வைரஸ் தொற்று உண்டாவது மிகவும் சாதாரணமாகிவிட்டது. இத்துடன் வாழப் பழகிக்கொள்ள வேண்டும் என்று கூறுகிறார் மருத்துவர். ஆனால் தடுப்பூசி செலுத்திக் கொண்டவர்கள் மருத்துவமனையில் சேர வேண்டிய சூழல் சமீப காலங்களில் மிகவும் குறைவாகவே உள்ளது என்பதையும் அவர் சுட்டிக்காட்டுகிறார்.

நோயின் தீவிரம் அதிகமாகும்போது, தடுப்பூசிகள் நமக்கு பாதுகாப்பு அளிக்கின்றன என்று அவர் கூறுகிறார்.

கோவிட் பாதிப்புக்கு உள்ளாவது, மருத்துவமனையில் அனுமதித்து சிகிச்சை பெறுவது, உயிரிழப்பது உள்ளிட்டவை இதுவரை தடுப்பூசி செலுத்திக் கொள்ளாதவர்களைவிட தடுப்பு ஊசி செலுத்தி கொண்டவர்களுக்கு மிகமிக குறைவாகவே இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

பிரிட்டனின் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு முகமையின் சமீபத்திய அறிக்கை ஒன்றும் இதையே காட்டுகிறது. இந்த அறிக்கையில் பிரிட்டனில் உள்ள கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகம் நடத்திய ஓர் ஆய்வின் தரவுகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

இதன்படி ஒருவர் பாதிக்கப்பட்டால் பூஸ்டர் தடுப்பூசி உள்பட மூன்று டோஸ் தடுப்பூசியும் செலுத்திக் கொண்டிருக்கும் நிலையில் அந்த நபர் மருத்துவமனையில் சேர்ந்து சிகிச்சை பெற வேண்டிய தேவை என்பது 81 சதவிகிதம் குறைவாக இருக்கிறது.

பிரிட்டன் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு முகமை தாமாகவே நடத்திய இன்னொரு ஆய்வில் மூன்று டோஸ் தடுப்பூசியும் செலுத்தி கொண்டவர்கள் கொரோனா வைரஸ் தொற்றுக்கு எதிராக 88 சதவிகித பாதுகாப்பை பெற்றிருப்பதாக காட்டுகிறது. ஆனால் இந்தப் பாதுகாப்பு அவர்களது உடலில் எவ்வளவு காலம் நீடிக்கும் என்பது இன்னும் தெரியவில்லை. ஒருவேளை இன்னொரு பூஸ்டர் டோஸ் தடுப்பூசி இனி வரும் மாதங்களில் தேவைப்படலாம்.

இவை அனைத்துமே ஒமைக்ரோன் பரவல் மற்றும் டெல்டா உள்ளிட்ட அனைத்து திரிபுகளால் உண்டாகும் நோய்த் தொற்றின் எண்ணிக்கை அதிகரித்தல் ஆகியவற்றுக்கு எதிராகப் போரிட உதவுகின்றன என்பதையே காட்டுகிறது என்கிறார் மருத்துவர் ரோனெட்டொ கேஃப்ரி.

எப்படிப் பார்த்தாலும் அனைவருக்கும் கோவிட் வரத்தான் போகிறது, அதனால் தடுப்பூசி பெறுவதால் எந்த பலனும் இல்லை என்று நினைப்பது மிகவும் தவறு ஏனென்றால் தடுப்பூசிகள் கோவிட்-19 தொற்றை ஒரு வலுவிழந்த நோயாக மாற்ற உதவுகின்றன.

பெரும்பாலான நேரங்களில் மருத்துவமனைக்குப் போகாமல், வீட்டிலேயே தனிமைப்படுத்திக் கொண்டு சிகிச்சை எடுத்துக் கொள்ளக் கூடிய நிலையை அடைய தடுப்பூசிகள் உதவுகின்றன என்கிறார் அவர்.

குழந்தைகள் உள்பட மக்கள் தொகையில் பெரும்பாலானவர்களுக்குத் தடுப்பூசி செலுத்துதல், முகக் கவசம் அணிதல், சுகாதாரமாக இருப்பதற்கான அடிப்படை விதிகளைப் பின்பற்றுதல், கைகளை தூய்மைப் படுத்திக்கொள்ளுதல், கூட்டம் கூடுவதில் இருந்து விலகியிருத்தல் உள்ளிட்டவை இந்தப் பெருந்தொற்றில் இருந்து நாம் வெளியேற உதவும் என்று கூறுகிறார் தொற்று நோயியல் மருத்துவ நிபுணர் ரோனெட்டொ கேஃப்ரி.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு கடந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்




04 பெப்ரவரி 2022 வெள்ளிக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி மகாலிங்கம் பவானி இணையர்களது 50 திருமண நன்நாள் ஆகும். அன்றையதினம் இணையர்கள் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.




28 ஜனவரி 2022 வெள்ளிக்கிழமை கனடாவில் வசிக்கும் செல்வி சாருஜா காசிநாதன் அவர்களது 26வது பிறந்த நன்நாளாகும். அன்றைய தினம் செல்வி சாருஜா தனது பெற்றோர்கள், சகோதரங்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.

## 4வது பிறந்த நாள் வாழ்த்து




### செல்வன் ஹரிகேஷ் சங்கீபன்

லண்டனில் வசிக்கும் திரு,திருமதி சங்கீபன் யசோதா தம்பதிகளின் செல்வப் புதல்வன் ஹரிகேஷ் சங்கீபனின் நான்காவது பிறந்த நன்நாள் 05 பெப்ரவரி 2022 சனிக்கிழமையாகும். அன்றைய நாளில் செல்வன் ஹரிகேசும் அவரது பெற்றோர்களும் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழவுள்ளார்கள். அகவை நான்கு காணும் செல்வன் ஹரிகேஷ் நோய் நொடியின்றி சீரும் சிறப்புடன் பார் போற்றும் பைந்தமிழ் மகனாக வாழ வாழ்த்தும் அவரது பெற்றோர்களுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் வாழ்த்துகின்றார்கள். வாழ்க வளமுடன்!

## 1வது பிறந்த நாள் வாழ்த்து



### செல்வி இரா பிரபுராஜ்

கனடாவில் வசிக்கும் திரு,திருமதி பிரபுராஜ் அனித்தா தம்பதிகளின் செல்வப் புதல்வி இரா பிரபுராஜின் முதலாவது பிறந்த நன்நாள் 09 பெப்ரவரி 2022 புதன் கிழமையாகும். அன்றைய நாளில் செல்வி இராவும் அவரது பெற்றோர்களும் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழவுள்ளார்கள். அகவை ஒன்று காணும் செல்வி இரா நொடியின்றி சீரும் சிறப்புடன் பார் போற்றும் பைந்தமிழ் மகளாக வாழ வாழ்த்தும் அவரது பெற்றோர்கள், உறவுகளுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் வாழ்த்துகின்றார்கள். வாழ்க வளமுடன்!




## மீனவர் போராட்டக் களத்தில் சுமந்திரனும்...

(3ம் பக்கத் தொடர்ச்சி) இதன் போது இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி வரும் இந்திய படகுகளை நிரந்தரமாக தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்கப்படும் எனும் உத்தரவாதத்தை எழுத்து மூலமாக தர வேண்டும் என மீனவர்களால் அமைச்சரிடம் கோரிகை முன்வைக்கப்பட்டது.

மீனவர்கள் கருத்துத் தெரிவிக்கும் போது தற்போது 13 மீனவ சங்கங்கள் இணைந்துள்ளன. தீர்வு கிடைக்கும் வரை போராட்டம் தொடரும். அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரிகள் பல வாக்குறுதிகளை எமக்கு தந்து ஏமாற்றியுள்ளனர். ஆகவே, நாம் இனி அவர்களின் கதைகளை நம்ப போவதில்லை. முதலில் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும். முடிவு கிடைக்கும் வரை நாம் தொழிலுக்கு செல்ல மாட்டோம். உரியவர்கள் தீர்வோடு இங்கு வர வேண்டும். எழுத்து மூலமாக தீர்வு பெற்று தர வேண்டும்.

நாம் இனியாரையும் சென்று சந்திக்க மாட்டோம். கடற்படை தளபதியோ அல்லது, அமைச்சரோ இங்கு வந்து எழுத்து மூலமாக எமக்கு வாக்குறுதி தர வேண்டும். இனிமேலும் இந்திய இழுவை படகால் எமக்கு அநீதி இழைக்க கூடாது.

இந்திய தமிழ் சொந்தங்களுடன் எமக்கு கோபம் இல்லை. முரண்பாடு இல்லை. எமது எல்லைக்குள் வந்து மீன் பிடித்து, எங்கள் கடல் வளங்களையும், எமது உடமைகளையும் அழிக்க வேண்டாம் என்று தான் நாம் கூறுகின்றோம்.

ஆகவே இந்திய ஊடகங்கள் செய்திகளை தெளிவாக உண்மையாக வழங்க வேண்டும். மீனவ சமுதாயம் இந்த போராட்டத்தை தொடர்ந்து முன்னெடுக்கும். ஆளுநர் கூட அதிகாரி ஒருவரை அனுப்பி வைத்திருந்தார். நாம் ஆளுநர் அலுவலகத்தில் சென்று அவரை சந்திக்க மாட்டோம். யார் என்றாலும் இங்கு வந்து தீர்வை எழுத்து மூலம் தரவேண்டும் என்றனர்.

இதற்கு பதில் வழங்கிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா எழுத்து மூலமான உத்தரவாதம் தர முடியாது எனவும் தான் வாய் மூலமாகவே உத்தரவாதத்தையே தர முடியும் என கூறினார். அதனை தொடர்ந்து ஏற்பட்ட அமைதியின்மையை அடுத்து போராட்ட களத்தில் இருந்து அமைச்சர் வெளியேறினார்.

அமைச்சர் வெளியேறிய சில மணி நேரத்தில் போராட்டத்திற்கு பருத்தித்துறை நீதவான் நீதிமன்றம் தடை விதித்துள்ளது. இந்திய மீனவர்களின் அத்துமீறல்களை கட்டுப்படுத்த கோரி கடந்த திங்கட்கிழமை முதல் சுப்பர்மடம் பகுதியில் மீனவர்கள் வீதியை மறித்து போராட்டத்தினை முன்னெடுத்து வருகின்றனர்.

அந்நிலையில் நேற்றைய தினம் வியாழக்கிழமை பருத்தித்துறை காவல் துறையினர் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் ,மீனவர்களின் போராட்டத்திற்கு தடை விதிக்க கோரி விண்ணப்பம் செய்திருந்தனர்.

வீதியை மறித்து மீனவர்கள் போராட்டத்தினை முன்னெடுப்பதனால் வீதி ஊடான போக்குவரத்து முற்றாக பாதிக்கப்பட்டுள்ளது பொதுமக்களுக்கு இடையுறு விளைவித்தல் கொரோனா அபாயம் உள்ளிட்ட காரணங்களை சுட்டிக்காட்டி தடை கோரி இருந்தனர். அதனை அடுத்து மீனவர்களின் போராட்டத்திற்கு நீதிமன்று தடை விதித்து கட்டளைபிறப்பித்துள்ளது.

நீதிமன்ற கட்டளையின் பிரகாரம் , வீதி மறியலில் ஈடுபட்டுள்ள மீனவர்களை கலைந்து செல்லுமாறு காவல்துறையினர் அறிவித்துள்ளனர். அதற்கு மீனவர்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ள நிலையில் காவல்துறை விசேட அதிரடி படையினரும் போராட்ட இடத்திற்கு வரவழைக்கப்பட்டுள்ளனர். இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை கள நிலவரம் பதட்டமும் பரபரப்புடனும் காணப்படுகின்றது.

# யாழ்.முற்றவெளியில் நடந்த பொங்கலும் - சந்தையும்



**கட்டுரையாளர்:**
**யாழ்ப்பாணத்தில் இருந்து**
**- நிலாந்தன் -**

கடந்த 13ஆம் திகதி அதாவது பொங்கலுக்கு முதல் நாள் யாழ்ப்பாணம் முற்றவெளியில் ஒரு வித்தியாசமான பொங்கல் ஒழுங்கு செய்யப்பட்டது. அதற்கு பெயர் விடுதலைப் பொங்கல். அரசியல் கைதிகளை விடுவிக்கப் போராடும் அமைப்பாகிய குரலற்றவர்களின் குரல் என்ற அமைப்பு அப்பொங்கல் நிகழ்வை ஒழுங்குபடுத்தியிருந்தது. தமிழாராய்ச்சி மாநாட்டில் கொல்லப்பட்டவர்கள் நினைவாக உருவாக்கப்பட்ட நினைவுச் சின்னத்துக்கு அருகில் ஒரு சிறிய சிறைக்கூண்டு செயற்கையாக உருவாக்கப்பட்டது.

அதற்குள் கைதிகளின் உடைகளை அணிந்தபடி செயற்பாட்டாளர்கள் பொங்கல் நிகழ்வை நடத்தினார்கள். நிகழ்வுக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களையும் ஏனைய அரசியல் வாதிகளையும் அழைத்ததாக ஏற்பாட்டாளர்கள் சொன்னார்கள். ஆனால் அதில் விரல் விட்டு எண்ணக் கூடிய மிகச்சில அரசியல் வாதிகளே காணப்பட்டார்கள். ஐங்கரநேசன், சிவாஜிலிங்கம், யாழ் நகரபிதா மணிவண்ணன், பார்த்திபன் உள்ளிட்ட மிகச் சில அரசியல்வாதிகளும் இரு மதத் தலைவர்களும் அங்கே காணப்பட்டார்கள் அரசியல் கைதிகளை நோக்கி பொது மக்களின் கவனத்தையும் வெளி நாடுகளின் கவனத்தையும் ஈர்ப்பது அந்த வித்தியாசமான பொங்கலின் நோக்கமாகும்.

தமிழ் பரப்பில் நடக்கும் பெரும்பாலான கவனயீர்ப்புப் போராட்டங்கள் அடுத்த நாள் பத்திரிக்கைகளில் தலைப்புச் செய்திகளாக வருவதோடு சரி.அவை பொதுமக்களின் கவனத்தை ஈர்ப்பதை விடவும் ஊடகவியலாளர்கள் மற்றும் புலனாய்வு துறையினரின் கவனத்தைத்

மிகச்சிறு தொகையினர் ஒரு கவனயீர்ப்பு பொங்கலை நடாத்திக் கொண்டிருக்க அதிலிருந்து நடந்து போகும் தூரத்தில் இருந்த யாழ் நகரப்பகுதியில் பொங்கலுக்கான ஏற்பாடுகள் அமோகமாக காணப்பட்டன. பொங்கலுக்கு முதல் நாளான அன்று யாழ்ப்பாணத்தில் சிறிய மற்றும் பெரிய நகரங்கள் ஜனங்களால் பிதுங்கி வழிந்தன. கடந்த 12 ஆண்டுகளில் அமோகமாக கொண்டாடப்பட்ட பொங்கலில் அதுவும் ஒன்று. நாட்டில் பொருளாதார நெருக்கடி என்று ஒன்று உண்டா என்று கேட்குமளவுக்கு எல்லா நகரங்களும் ஜனங்களால் பிதுங்கி வழிந்தன. இது நடந்து சரியாக எட்டு நாட்களின் பின் கடந்த வெள்ளி சனி ஞாயிறு ஆகிய மூன்று தினங்களில் அதே முற்ற



வெளியில் 12 ஆவது யாழ். சர்வதேச வர்த்தகச் சந்தை திறக்கப்பட்டது. சந்தை நடந்த மூன்று நாட்களிலும் லட்சக்கணக்கானவர்கள் திரண்டார்கள்.

வேண்டியது அரசியல்வாதிகளும் அரசியல் செயல்பாட்டாளர்களும்தான். அதைச் செய்ய வேண்டியவர்கள் செய்யத் தவறிய ஒரு வெற்றிடத்தில் தான் அவ்வாறு யாருடைய கவனத்தையும் ஈர்க்காமல் ஒரு கவனயீர்ப்பு பொங்கல் நடந்து முடிந்தது.

பொதுமக்களின் கவனத்தையும் வெளி உலகத்தின் கவனத்தையும் அதிர்ச்சியூட்டும் விதத்தில் ஈர்க்க வேண்டும் என்பதற்காக வித்தியாசமாக சிந்திக்கப்பட்ட ஒரு பொங்கல் மக்கள் மயப்படவில்லை மட்டுமில்லை, அதைக் குறித்து மக்கள் மத்தியில் பெரியளவில் உரையாடப்படவும் இல்லை. இது அதை ஒழுங்கு படுத்திய அமைப்பின் தோல்வி மட்டுமல்ல,தமிழ் அரசியலின் தோல்வியும் தான். கடந்த 12 ஆண்டுகளாக தமிழ்ப் பரப்பில் ஒழுங்கு செய்யப்பட்டுவரும் பெரும்பாலான கவனயீர்ப்பு போராட்டங்கள் இவ்வாறு தான் காணப்படுகின்றன. அவை அடுத்தநாள் ஊடகங்களில் தலைப்புச் செய்திகளாக

தான் போராடிக் கொண்டிருக்கிறார்கள். அப் போராட்டத்திலும் எப்போதாவது அரிதாக பொதுமக்கள் இணைகிறார்கள். அப்படித் தான் காணிக்கான போராட்டமும். காணி உரிமையாளர்களும் சில அரசியல்வாதிகளும்தான் தொடர்ந்து போராடுகிறார்கள். இவை யாவும் மக்கள் மயப்பட்ட போராட்டங்கள் அல்ல. இப்போராட்டங்களை மக்கள் மயப்படுத்த வேண்டிய பொறுப்பு அரசியல்வாதிகளுக்கும் செயற்பாட்டாளர்களும் சிவில் சமூகங்களுக்கும் உண்டு. ஆனால் அதை எப்படிச் செய்வது என்பதை குறித்து யாரிடமும் சரியான பார்வையும் தெளிவான வழி வரைபடமும் இருப்பதாக தெரியவில்லை. இதை இன்னும் கூர்மையாகச் சொன்னால் கடந்த 12 ஆண்டுகளாக தமிழ் மக்களுக்கு தொடர்ச்சியாக விட்டுக் கொடுப்பின்றி போராடத் தெரியவில்லையா? அல்லது போராட முடியவில்லையா? சில எழுக தமிழ்கள் ஒரு பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலுமான போராட்டம் போன்ற தெட்டந் தெட்டமான போராட்டங்களுக்கும் அப்பால் தொடர்ச்சியாகப் போராட தமிழ் மக்களால் முடியவில்லை. கேப்பாபுலவில் காணிகளை மீட்பதற்காக நடந்த போராட்டத்தைப் போலவோ டெல்லியில் வேளாண் மசோதாவை எதிர்த்துப் போராடிய விவசாயிகளைப் போலவோ அல்லது குறைந்த பட்சம் இலங்கைதீவில் அண்மையில் அதிபர் ஆசிரியர்களுக்கு சம்பள உயர்வு கேட்டு ஒரு பெருந்தொற்றுச் சூழலுக்குள் போராடிய ஆசிரிய தொழிற்சங்கங்களைப் போலவோ தமிழ்மக்கள் தொடர்ச்சியாகப் போராடினால் தான் அரசாங்கத்தையும் வெளி உலகத்தையும் தங்களை நோக்கித் திரும்பலாம்.

தான் அதிகமாக ஈர்க்கின்றன. எனவே ஒரு கவன ஈர்ப்புப் போராட்டத்தை ஒழுங்கு செய்யும் பொழுது அங்கே அதிர்ச்சியூட்டும் புதுமை இருக்க வேண்டும் என்று அரசியல் செயற்பாட்டாளர் ஒருவர் குரலைற்றவரின் குரல் அமைப்புக்கு ஆலோசனை கூறியிருந்தார். இவ்வாறு ஆலோசனை கூறப்பட்டது கடந்த ஆண்டில் ஆகும்.

மேலும் அது போன்று வேறு சில வித்தியாசமான படைப்பு திறன்மிக்க கவனயீர்ப்பு போராட்டங்களை ஒழுங்கு செய்யுமாறும் ஆலோசனை கூறப்பட்டது. தமிழ்தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒருநாள் கைதிகளின் உடையோடு கைதிகள் சிறையில் பயன்படுத்தும் சாப்பாட்டுக் கோப்பையோடு நாடாளுமன்றத்துக்கு வெளியே ஒரு கவனயீர்ப்பு போராட்டத்தை செய்யலாம் என்பது ஒன்று.

மற்றது தமிழ்தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட வழக்கறிஞர்கள் கைதிகளின் உடையோடு ஒரு நாள் நீதிமன்ற புறக்கணிப்புப் போராட்டத்தை முன்னெடுக்கலாம் என்பது. எனினும் நாடாளுமன்ற உறுப்பினர்களையோ அல்லது ஏனைய அரசியல் செயற்பாட்டாளர்களையோ அவ்வாறு வித்தியாசமான ஒரு கவனயீர்ப்பு போராட்டத்தை நோக்கித் திரட்டும் அளவுக்கு அரசியல் கைதிகளுக்காகப் போராடும் அமைப்பிடம் ஆட்களும் இல்லை வளங்களும் இல்லை. இவ்வாறானதொரு வெற்றிடத்தில் கடந்த 13ஆம் தேதி ஒழுங்கு செய்யப்பட்ட கவன ஈர்ப்பு பொங்கலுக்கு வழமையாக போராட்டங்களில் காணப்படும் மிகச் சில அரசியல்வாதிகளே வருகை தந்திருந்தார்கள். பொது மக்கள் என்று பார்த்தால் இல்லை என்று சொல்லுமளவுக்கே நிலைமை இருந்தது. இவ்வாறு முற்றவெளியில்

மக்கள் வெள்ளம் பொங்கி வழிந்தது. சந்தைக்குள் பெரும்பாலும் மாலை வேளைகளில் உள்ளிட முடியாத அளவுக்கு ஜனத்திரள் பிதுங்கியது. குறிப்பாக இளைஞர்கள் வேண்டுமென்றே வரிசை கட்டி ஒருவர் மற்றவரின் தோளில் கைகளை வைத்தபடி பெண்கள் அதிகம் உள்ள பகுதிகளை நோக்கி புகையிரதம் ஓடி அட்டகாசம் செய்தார்கள்.

இவ்வாறாக பொங்கலுக்கு முதல் நாளும் பொங்கல் அன்றும் பொங்கலில் இருந்து ஒரு கிழமை கழித்தும் முற்றவெளியில் நடந்தவைகளை தொகுத்துப் பார்த்தால் ஒரு விடயம் தெளிவாகத் தெரிகிறது. மக்கள் கொண்டாட விரும்புகிறார்கள். மகிழ்ச்சியாக இருக்க விரும்புகிறார்கள். சந்தர்ப்பம் கிடைத்தால் அதை அட்டகாசமாக அனுபவிக்கிறார்கள். அதில் பிழையில்லை. மக்கள் கொண்டாட வேண்டும்.

அதே சமயம் தங்களுக்காக போராடி சிறையில் இருப்பவர்களுக்குப் பொங்கல் இல்லை என்பதையும் நினைத்துப் பார்க்க வேண்டும். காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் வீதியோரங்களில் ஆண்டுக்கணக்காக இப்பொழுதும் போராடிக் கொண்டிருக்கிறார்கள் என்பதனை நினைத்துப் பார்க்க வேண்டும். காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்காவும் அரசியல் கைதிகளுக்காகவும் காணிகளை அபகரிக்கப்படுவதை எதிர்த்தும் நடக்கும் போராட்டங்களில் பொதுமக்களின் பங்களிப்பு மிகக் குறைந்த அளவே காணப்படுகிறது. அதற்குப் பொதுமக்கள் பொறுப்பில்லை. மக்கள் எப்பொழுதும் மகிழ்ச்சியை நோக்கியும் ஆபத்தில்லாததை நோக்கியும் சுகமானதை நோக்கியும் ஓடிக் கொண்டே இருப்பார்கள். அவர்களை இலட்சியத்தை நோக்கி கனவுகளை நோக்கித் திரட்ட

வருவதோடு சரி. எந்த மக்களின் கவனத்தை ஈர்ப்பதற்காக அவை ஒழுங்கு செய்யப்படுகின்றனவோ ,எந்த அரசியல்வாதிகளின் கவனத்தை ஈர்ப்பதற்காக அவை ஒழுங்கு செய்யப்படுகின்றனவோ எந்த வெளியுலகத்தின் கவனத்தை ஈர்ப்பதற்காக அவை ஒழுங்கு செய்யப்படுகின்றனவோ அந்த வெளியுலகத்தின் கவனத்தையோ அல்லது மக்களின் கவனத்தையோ அல்லது அரசியல்வாதிகளின் கவனத்தையோ அவை பெரும்பாலும் ஈர்ப்பதில்லை என்பதே கடந்த 12 ஆண்டு கால அனுபவமாக காணப்படுகிறது.





அரசியல் கைதிகளுக்காக ஒன்றில் அரசியல் கைதிகள் போராடுகிறார்கள். அல்லது விடுவிக்கப்பட்ட கைதிகள் போராடுகிறார்கள். அல்லது கைதிகளின் உறவினர்கள் போராடுகிறார்கள். மிக அரிதாகத்தான் பொது மக்களும் ஏனைய அமைப்புக்களும் அந்தப் போராட்டத்தில் இணைகின்றன. அவ்வாறு இணையும் பொழுது அது அரசாங்கத்தின் மீது ஒரு அழுத்தத்தைக் கொடுக்கிறது. அப்படித்தான் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் போராட்டமும். அங்கேயும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள்

தெட்டந் தெட்டமாக நடக்கும் எழுக தமிழ்களோ அல்லது P2Pக்களோ அரசாங்கத்தின் கவனத்தையோ அல்லது வெளியுலகின் கவனத்தையோ தொடர்ச்சியாக ஈர்த்து வைத்திருக்கத் தவறி விட்டன. பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலுமான போராட்டம் முடிந்த கையோடு யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த வெளிநாட்டுத் தூதுவர்கள் பெரும்பாலானவர்கள் அதைக் குறித்து ஒருவித பிரமிப்போடு அல்லது ஆர்வத்தோடு கேள்விகளைக் கேட்பார்கள். ஆனால் அதுவும் எழுக தமிழ்களைப் போல ஒரு தொடர்ச்சியற்ற போராட்டம் தான் என்பது நிரூபிக்கப்பட்டு விட்டது. எனவே கடந்த 12 ஆண்டுகளையும் தொகுத்துப்பார்த்தால் ஒரு விடயம் தெளிவாகத் தெரிகிறது ஒப்பீட்டளவில் பெரிய ஆர்ப்பாட்டங்களையும் கவனத்தை ஈர்க்கும் போராட்டங்களையும் பொதுமக்கள் அமைப்புக்களே முன்னெடுத்துள்ளன. அநேகமாகக் கட்சிகள் அல்ல. கடந்த 12 ஆண்டுகளில் தமிழ் மக்கள் பேரவை தமிழ் மரபுரிமைப் பேரவை பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலுமான அமைப்பு ஆகிய மூன்று மக்கள் அமைப்புக்கள் தோன்றி பின் தொடர்ந்து வளராமல் தேங்கி விட்டன.

# 13 எதிர்ப்பு:- சீனாவுக்கான அழைப்பா?

கட்டுரையாளர்:
தாயகத்தில் இருந்து
-யசீந்திரா -

அண்மையில் இலங்கைக்கான சீனத் தூதுவர் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்திருந்தார். இது பல கேள்விகளை முன்வைத்திருந்தது. ஏனெனில் சீனத் தூதுவரின் வடக்கு விஜயம் வழக்கத்திற்கு மாறான ஒன்று. இந்திய (தமிழ் நாட்டு) மீனவர்கள் தொடர்பில் வடக்கு மீனவர்கள் மத்தியில் அதிருப்திகள் காணப்படுகின்றன.

நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனின் ஏற்பாட்டில் இந்திய மீனவர்களின் அத்து மீறலுக்கு எதிரான எதிர்ப்பு நடவடிக்கையொன்றும் இடம் பெற்றிருந்தது. கவனத்தை ஈர்க்கும் வகையில் கடலில் எதிர்ப்பு நடவடிக்கைகள் இடம் பெற்றன. இதன் பின்னர் தான் சீனத் தூதுவர் யாழ் மீனவர்களை நோக்கி உணவுப் பொதிகளோடு வந்திருந்தார். இருபது மில்லியன்கள் நிதியையும் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்காக வழங்கியிருந்தார். யாழ் தீவகப் பகுதிகளில் சீனாவின் நிதியாதரவுடன் கலப்பு மின்உற்பத்தி திட்டமொன்று இடம் பெறவுள்ளதாக முன்னர் செய்தியொன்று வெளியாகியிருந்தது. இதற்கான ஒப்பந்தம் சீன நிறுவனம் ஒன்றிற்கு வழங்கப்பட்டிருந்தது.

இது தொடர்பில் இந்தியா அதிருப்தியடைந்துள்ளதான செய்திகளும் வெளியாகியிருந்தன. பின்னர் இந்த திட்டம் கிடப்பிற்கு சென்றது. தாம் அந்த திட்டத்தை கைவிடவில்லையென்று யாழ்ப்பாண விஜயத்தின் போது சீனத் தூதுவர் குறிப்பிட்டிருந்தார்.

யாழ்பாண விஜயத்தின் போது வடக்கு தமிழர்களின் கலாசார குறியீடாக நோக்கப்படும், நல்லூர் கோவிலில் சீனத் தூதுவர் வழிபாடுகளில் ஈடுபட்டிருந்தார். யாழ்ப்பாண கலாசாரத்தை பிரதிபலிக்கும் வகையில் வேஸ்டியுடன் சீன அதிகாரிகள் காட்சியளித்தனர்.

தமிழ் மக்களுடன் உறவுகளை ஏற்படுத்த விரும்புவதாக அவர் தெரிவித்திருந்தார். ஆனால் உறவுகளை எவ்வாறு ஏற்படுத்துவது? ஏனெனில் சீனா தமிழ் மக்களின் அரசியல் விவகாரத்தை ஒரு உள்நாட்டு விவகாரமாக நோக்குகின்றது. தாம் நாடுகளின் உள் விவகாரங்களில் தலையிடும் வெளிவிவகாரக் கொள்கையை கொண்டிருக்கவில்லை என்பதே சீனாவின் ஒரு வரிப் பதிலாகும். அவ்வாறு கூறும் சீனாவோ மறுபுறமாக ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை அரசாங்கத்திற்கு ஆதரவாகவே இருக்கின்றது. உண்மையிலேயே நாடுகளின் உள்விவகாரத்தில் தலையிடாக் கொள்கையை சீனா கொண்டிருந்தால் தர்க்கரீதியில் தமிழர் விவகாரத்தில் ஆதரவுமில்லை எதிர்ப்புமில்லை என்னும் நடுநிலை அணுகுமுறையைத் தான் சீனா கைக் கொண்டிருக்க வேண்டும்.

ஆனால் சீனா அவ்வாறு நடந்து கொள்ளவில்லை. இலங்கையின் மனித உரிமைகள் விவகாரத்தில் பொறுப்புகூறலை வலியுறுத்தும் பிரேரணைகளின் போது சீனா எப்போதும் இலங்கையின் பக்கமாகவே இருக்கின்றது. தமிழ் மக்கள் பொறுப்பு கூறலையும் நீதியையும் எதிர்பார்த்திருக்கின்ற போது சீனாவின் கொள்கை நடுநிலை என்றால் எந்தவொரு பக்கத்திலும் சீனா தன்னை அடையாளப்படுத்திக் கொள்ளக் கூடாது. ஆனால் சீனா அவ்வாறு செயற்படவில்லை. இந்த அடிப்படையில் சீனாவின் தலையிடாக் கொள்கை கேள்விக்குள்ளாகின்றது. ஒரு வகையில் மேற்குலகின் மனித உரிமைகள்சார் தலையீட்டை எதிர்கொள்வதற்கான ஒரு பதில் தந்திரோபாயமாகவே, தலையிடாக் கொள்கையை சீனா கைக் கொண்டு வருகின்றது. தர்க்கரீதியில் சீனா, தலையிடாக் கொள்கை என்னும் பெயரில், நாடுகளில் தனது இருப்பை வலுப்படுத்திக் கொள்வதற்கான தலையீடுகளையே செய்கின்றது. அமெரிக்கா தலைமையிலான மேற்குலகம் மனித உரிமைகள் சார்ந்து தலையீடுகளை செய்கின்ற போது அதற்கு எதிராக நிற்பதன் மூலம் குறித்த நாடுகளின் அதிகாரத்தில் செல்வாக்குச் செலுத்தும் மக்களின் ஆதரவை சீனா சம்பாதித்துக் கொள்கின்றது. பின்னர் அதனையே தனது விரிவாக்கலுக்கு பயன் படுத்திக் கொள்கின்றது.

சீனா இன்று வலுவாக காலூன்றியிருக்கும் நாடுகள் அனைத்திலும் இதனை நாம் காணலாம். ஆபிரிக்க நாடுகள் அதிகம் மனித உரிமை சார்ந்த குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளாகியிருக்கின்றது. அங்கு சீனா தனது செல்வாக்கை அதிகளவில் பெருக்கியிருக்கின்றது. எனவே சீனா ஒரு இடத்தை அல்லது ஒரு மக்கள் கூட்டத்தை தெரிவு செய்யும் போது அங்குள்ள பிரச்சினைகளை எவ்வாறு தனக்கு சாதகமாக்கிக் கொள்ளலாம் என்றே திட்டமிடும். இந்த இடத்தில் ஒருவர் எதிர்வாதம் புரியலாம். ஏனைய நாடுகளும் அவ்வாறு தானே செய்கின்றன. பலம்பொருந்திய நாடுகள் தங்களுடைய நலன்களை நிறுத்துப் பார்த்துத்தானே எந்தவொரு தலையீட்டையும் செய்யும். நிச்சமாக அதில் என்னிடம் மாற்று கருத்தில்லை.

ஆனால் இந்தியா, அமெரிக்கா மற்றும் இன்னும் பல மேற்கு நாடுகளும் தமிழ் மக்களின் உரிமைகள் தொடர்பில் கரிசனைகளை காண்பிக்கின்றன. தமிழ் மக்கள் சமத்துவமாகவும் கௌரவமாகவும் வாழ்வதற்கான ஒரு அரசியல் தீர்வே, தமது கொள்கை நிலைப்பாடென்று இந்தியா தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றது.

அமெரிக்கா மனித உரிமைகள் என்னுமடிப்படையில் இறுதி யுத்தத்தின் போது இடம்பெற்ற உரிமை மீறலுக்கான பொறுப்பு கூறலை வலியுறுத்துகின்றது. எனவே அவர்களின் தலையீடு தமிழ் மக்களுக்கு சாதகமானது. ஆனால் சீனாவோ சர்வதேச அரங்குகளில் இலங்கையை காப்பாற்றிக் கொண்டு இலங்கை அரசுக்கு எதிராக எந்தவொரு விமர்சனத்தையும் முன்வைக்காமலேயே தமிழ் மக்களை நோக்கி வருகின்றது.

இந்த அடிப்படையில்த ான் இந்திய — ஈழ மீனர்களின் பிரச்சினையை பயன்படுத்தி வடக்கில் காலூன்றுவதற்கான பரிசோதனை முயற்சியில் சீனா ஒரு முறை சுழியோடிப் பார்த்தது. வடக்கில் இந்தியாவிற்கு எதிரான போக்குகள் எங்கெல்லாம் இருக்கின்றதோ — அங்கெல்லாம் காலூன்றலாம் என்பதற்கான ஒத்திகையாவே வடக்கை நோக்கி சீனா வந்தது.

மீனவர் பிரச்சினையை முன் வைத்து வடக்கை அளவிட்ட சீனாவிற்கு பிறிதொரு அழைப்பும் தற்போது விடுக்கப்படுகின்றது. 13வது திருத்தச்சட்டத்தை எதிர்த்தல் என்னுமடிப்படையில் இந்த அழைப்பு விடுக்கப்படுகின்றது. நிச்சயம் இதனையும் சீனா பயன்படுத்திக் கொள்ளும். தமிழ் தேசிய அரசியலை பிரதிநிதித்துவம் செய்யும் ஆறு கட்சிகள் ஒன்றிணைந்து இந்திய பிரதமர் மோடியிடம் கோரிக்கையொன்றை முன்வைத்திருந்தது.

இந்திய — இலங்கை ஒப்பந்தத்தின் குழந்தையான 13வது திருத்தச் சட்டதை முழுமையாக அமுல்படுத்துமாறு குறித்த கடிதத்தில் கோரப்பட்டிருக்கின்றது. 13வது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவதற்கான கோரிக்கையென்பது தற்போதிருக்கின்ற மாகாண சபையை வலுவுள்ள ஒன்றாக மாற்றுதற்கான கோரிக்கையாகும். இப்போதிருக்கின்ற ஒன்றை மேலும் பலப்படுத்த வேண்டு மென்னும் கோரிக்கையானது எப்படி தமிழ் மக்களுக்கு எதிரான ஒன்றாக இருக்க முடியும். இந்தக் கோரிக்கையை எதிர்த்தே அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் (தமிழ் தேசி மக்கள் முன்னணி) நல்லூர் கோவிலடியில் குறிப்பிட்டளவான மக்களை திரட்டி எதிர்ப்பை வெளியிட்டிருக்கின்றது. சீனத் தூதுவர் எந்த கோவிலுக்கு முன்னால் நின்று இந்தியாவிற்கு செய்தி சொன்னாரோ அந்த இடத்திலிருந்து தான் இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் மூலமாக கிடைக்கப் பெற்ற 13வது திருத்தச்சட்டத்தை கொழுத்தவுள்ளதாக கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கட்சி சூழுரைத்திருக்கின்றது. இந்திய பிரதமரிடம் கோரிக்கை வைக்கப்பட்டதிலிருந்து குறித்த கட்சிகளின் தலைவர்களை இந்திய முகவர்களென்றும் அடிமைகளென்றும் பொது வெளிகளில் காங்கிரஸ் கட்சியினர் விமர்சித்து வருகின்றனர். எனவே இவர்களது எதிர்ப்பு அடிப்படையில் 13 தொடர்பானதல்ல மாறாக இந்தியாவோடு நிற்க வேண்டுமென்னும் நிலைப்பாட்டிற்கு எதிரானது, அவ்வாறான நிலைப்பாட்டை வெளிப்படுத்தும் தமிழ் தேசிய கட்சிகளுக்கு எதிரானது. இதன் மூலம் தாங்கள் இந்தியாவோடு இல்லையென்பதையும் இவர்கள் கூற முற்படுகின்றனர். அடிப்படையில் இந்தியாவிற்கு எதிரான மனோநிலையை யாழ் மக்கள் மீது விதைப்பது தான் இதன் பின்னாலுள்ள உண்மையான இலக்கு. வடக்கிலிருந்து இந்தியாவை எதிர்ப்பது அடிப்படையில் யாருக்கான செய்தி? யாருக்கான அழைப்பு?



தர்க்க ரீதியில் 13வது திருத்தச் சட்டத்தை எதிர்ப்பது என்பதே தவறானது. அத்துடன் அது ஒரு அரசியல் நேர்மையற்ற செயலாகும். ஏனெனில் 2012இல் இடம்பெற்ற கிழக்கு மாகாண சபை தேர்தலில் போட்டியிட்டதன் மூலம் தமிழ் தேசிய கூட்டமைப்பு 13ஐ(மாகாண சபையை) தீண்டுவதில்லை என்னும் விரதத்திற்கு முற்று புள்ளியிட்டது. அதன் பின்னர் 2013இல் வடக்கு மாகாண சபை தேர்தலில் போட்டியிட்டது. மக்கள் இரண்டு தேர்தல்களிலும் ஏகோபித்த ஆதரவை வழங்கியிருந்தனர். எனவே 13வது திருத்தச்சட்டத்தின் அடிப்படையிலான மாகாண சபை தேர்தலில் போட்டியிட்டு விட்டு 13வது திருத்தத்தை எதிர்க்கின்றோம் என்று கூற முடியுமா? இப்போது 13ஜை எதிர்க்கப் போவதாக கூறிக் கொண்டிருக்கும் கஜன் பொன்னம்பலமும் மாகாண சபை தேர்தலில் போட்டியிடவுள்ளதாகவும் கூறுகின்றார். இது எவ்வாறான அரசியல் நேர்மை? அங்கு ஒன்றுமில்லை என்பதை நிரூபிப்பதற்காகவே தாம் போட்டியிடவுள்ளதாக கூறுகின்றார்? ஒரிடத்தில் ஒன்றுமில்லை என்பது திட்டவட்டமாக தெரிந்து விட்டால் அதனை நிரூபிப்பதற்காக அங்கு ஏன் செல்ல வேண்டும்? கஜன் பொன்னம்பலத்தின் வாதம் தர்க்கரீதியில் பொருளற்றது. எனவே இங்கு பிரச்சினை 13வது திருத்தச்சட்டம் இல்லை. விடயம் அதனைவிடவும் பாரதூரமானது.

ஒரு புறம் கோட்டபாய ராஜபக்ச தலைமையிலான அணியினர் பௌத்த அரசியல் யாப்பு ஒன்றை கொண்டுவர முடியுமென்று நம்பிக் கொண்டிருக்கின்றனர். அப்படியானதொரு யாப்பை கொண்டு வர வேண்டுமென்றால் 13வது திருத்தச் சட்டத்தின் மூலம் தமிழ் மக்களுக்கு சாதகமாக இருக்கின்ற மாகாண சபையை இல்லாமலாக்க வேண்டும். ஆனால் 13 விடயத்தில் இந்தியா தலையீடு செய்தால் அது புதிய நெருக்கடியை தோற்றுவிக்கும். ஆனால் தமிழர்களும் 13இல் ஒன்றுமில்லை அது தேவையற்ற ஒன்று என்று கூறினால் அதன் பின்னர் சிங்கள கடும்போக்கு பௌத்த தேசியவாதிகளின் பணி சுலபமாகும்.

ஒரு வேளை கஜன் பொன்னம்பலம் அணியினர் இதனை அறியாமலும் இருக்கலாம். 13ஜ இல்லாமலாக்க வேணடும் அல்லது பலவீனப்படுத்த வேண்டுமென்று சிங்கள பௌத்த தேசியவாத சக்திகள் ஒற்றைக் காலில் நிற்பதற்கு பின்னாலும் இந்திய எதிர்ப்புத் தான் மறைமுகமாக தொழிற்படுகின்றது. ஏனெனில் இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் இந்தியா எல்லாக் காலத்திலும் தமிழரின் பெயரால் இலங்கையில் (21ம் பக்கம் பார்க்க)

# தடை செய்யுமா பிரிட்டன்?

கட்டுரையாளர்:
இந்தியாவில் இருந்து
கேணல் ஹரிஹரன்



ஐ.நா. மனித உரிமைகள் பேரவை யின் 49ஆவது கூட்டத்தொடர் ஆரம்பிக்க இன்னும் ஒரு மாத காலமே உள்ள நிலையில் பிரித்தானியாவிலும் கொழும்பிலும் அதனை ஒட்டிய இராஜதந்திர நகர்வுகள் தீவிரமடைந்திருக்கின்றன. கொழும்பில் உள்ள வெளிநாட்டு இராஜதந்திரிகளை அழைத்து வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் அரசாங்கத்தின் செயற்பாடுகள் குறித்து விளக்கமளித்து வருகிறார்.

பயங்கரவாத தடைச்சட்டத்தை திருத்துவது மற்றும் அதனைச் சார்ந்த விடயங்களில் அரசாங்கம் எடுத்து வரும் நடவடிக்கைகள் குறித்து அவர் விளக்கங்களை அளித்திருக்கிறார். ஆனால் போர்க்கால மீறல்கள் தான் ஜெனிவா தீர்மானத்துக்கான அடிப்படை அதனைச் சார்ந்த நடவடிக்கைகள் என்ன என்பதில் அரசாங்கத்தினால் எதையும் கூற முடியாதிருக்கிறது. ஐ.நா. மனித உரிமைகள் உயர் ஸ்தானிகர் அலுவலகம் போர்க்கால மீறல்கள் குறித்த சாட்சியங்களைச் சேகரிக்கும் பணியகத்தை உருவாக்கியிருக்கும் நிலையில் அந்த செயற்பாடுகளையும் அரசாங்கம் நிராகரித்திருக்கிறது.

பிரதான விடயத்தை ஒதுக்கிவிட்டு சின்னச் சின்ன விடயங்களை நிறைவேற்றியிருப்பதாக சர்வதேச சமூகத்துக்கு காண்பிக்க முற்படுகிறது அரசாங்கம். இந்த நிலையில் ஜெனிவா கூட்டத் தொடருக்கு முன்னதாக அமெரிக்காவைப் பின்பற்றி இலங்கை படை அதிகாரிகளுக்குத் தடைவிதிக்க வேண்டும் என்ற கோரிக்கை பிரித்தானியாவில் வலுப் பெற்றிருக்கிறது. புலம் பெயர் தமிழ் அமைப்புகளால் முன்னெடுக்கப்பட்டு வந்த முயற்சிகளின் அடுத்த கட்டமாக பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரும் இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா உள்ளிட்ட அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்குமாறு பிரித்தா னிய அரசாங்கத்திடம் வலியுறுத்தியிருந்தனர்.

இந்த விவகாரம் இப்போது முக்கியமானதொரு கட்டத்தை அடைந்திருக்கிறது. பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர் சியோபெயன் மக்டோனா (Siobhain McDonagh) இலங்கை இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா மீது அமெரிக்கா விதித்த தடையைப் பின்பற்றவது குறித்து என்ன மதிப்பீட்டைக் கொண்டிருக்கிறீர்கள் என்று வெளிவிவகாரம் ஐ.நா. கொமன்வெல்த் விவகாரங்களுக் கான இராஜாங்கச் செயலர் எலிசபெத் ரஸ்சிடம் (Elizabeth Truss) எழுத்து மூலம் கேள்வி எழுப்பியிருந்தார்.

இந்தக் கேள்விக்குப் பதில் அளிக்கப்படாத நிலையில் கடந்த 25ஆம் திகதி பிரதிநிதிகள் சபையில் அவர் ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு அமெரிக்காவின் வழியைப் பின்பற்ற வெளிவிவகார செயலருக்கு இன்னும் என்ன ஆதாரம் வேண்டும்" என்றும் சற்று ஆவேசமாகவே கேள்வியைத் தொடுத்திருந்தார்.

அந்தச் சந்தர்ப்பத்தில் ஆசியாவுக்கான இராஜாங்கச் செயலர் அமன்டா மில்லிங் (Amanda Milling) உடனடியாக எழுந்து இலங்கை தொடர்பான பிரச்சினைகளில் நாங்கள் அமெரிக்காவுடனும் ஏனைய பங்காளிகளுடனும் தொடர்ந்து கலந்துரையாடல்களை நடத்தி வருவதாக கூறியதுடன் தடைகளை இலக்காக கொண்ட நடவடிக்கையை முன்னெடுப்பதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

அத்துடன் எதிர்கால தடைகள் பற்றிய ஊகங்களைப் பொதுவாக வெளியிட முடியாது என்றும் அது அவ்வாறான நடவடிக்கையின் தாக்கத்தை குறைத்து விடலாம் என்றும் அவர் பதிலளித்திருந்தார். அமன்டா மில்லிங்கின் இந்தக் கருத்து இராணுவத் தளபதி மற்றும் அதிகாரிகளுக்கு எதிரான தடைகளை விதிக்க வேண்டும் என்று வலியுறுத்தும் பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்களுக்குத் திருப்தியைத் தரவில்லை. பிரித்தானிய அரசாங்கம், இந்த விடயத்தில் நேரடியாக பதிலளிக்கத் தயங்குவதாக அவர்கள் குற்றம் சாட்டியிருந்தனர். ஆனால்



வரும் ஜெனிவா கூட்டத் தொடருக்கு முன்னதாக பிரித்தானியா விடம் இருந்து போர்க்குற்றச்சாட்டுச் சுமத்தப்பட்டுள்ள படை அதிகாரிகள் தொடர்பான ஒரு தீர்க்கமான முடிவு வெளிவரக் கூடும் என்ற எதிர்பார்ப்பு நிலவுகிறது. ஜெனிவாவில் 46 — 1 தீர்மானத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றிய அனுசரணை நாடுகள் குழுவுக்கு பிரித்தானியாவே தலைமை தாங்கியது.

அந்த வகையில் இந்த விவகாரத்தில் இலங்கைக்கு அழுத்தங்களைப் பிரயோகிப்பதற்கு பிரித்தானியாவுக்கு ஒரு கடப்பாடு உள்ளது என்பது அதற்கான முக்கியமான காரணம். இலங்கை அரசாங்கம் 46 — 1 தீர்மானத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. அதன் முக்கியமான பரிந்துரையான சாட்சியங்களைச் சேகரித்துப் பாதுகாக்கும் பொறி முறையை முற்றாக நிராகரித்திருக்கிறது.

அண்மையில் கொழும்பு வந்த பிரித்தானியாவின் தெற்கு மத்திய ஆசிய விவகாரங்களுக்கான வெளிவிவகார இராஜாங்கச் செயலர் தாரிக் அஹமட் பிரபுவிடமும் இலங்கை அரசாங்கம் அதனைத் தெளிவாக கூறியிருந்தது. இவ்வாறான நிலையில் ஐ.நா.வின் தீர்மானத்துக்கு கட்டுப்பட மறுக்கும் இலங்கை அரசாங்கத்தை வழிக்குக் கொண்டு வரும் முயற்சியாகவும் பொறுப்புக்கூறல் கடப்பாட்டை நிறைவேற்றும் உறுதிப்பாட்டில் பிரித்தானியா உள்ளது என்ற நம்பிக்கையை ஏற்படுத்துவதற்கும் உறுதியானதொரு நடவடிக்கையை எடுக்க வேண்டிய நிலை அந்த நாட்டுக்கு உள்ளது.

அமெரிக்கா இராணுவத் தளபதிக்கு எதிரான தடையை விதித்திருப்பதுடன் அண்மையில் மேஜர் ஜெனரல் உதய பெரேராவுக்கும் விசா வழங்க மறுத்திருந்தமை முக்கியமானதொரு செயற்பாடாக இருக்கிறது. இந்த நிலையில் இராணுவத் தளபதி மீதான தடையை பிரித்தானியா அறிவிக்கலாம் என்ற கருத்து காணப்படுகிறது. அத்துடன் இலங்கைக்கு எதிராக பிரித்தானியா இதுவரை கடும் போக்கை வெளிப்படுத்தவில்லை என்பதே உண்மை.

உதாரணத்துக்கு இலங்கைப் பொலிஸார் மீது மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகள் சுமத்தப்படும் நிலையில் பிரித்தானியாவிலும் ஸ்கொட்லாந்திலும் அவர்களுக்கு பயிற்சிகள் அளிக்கப்படுவதை நிறுத்த வேண்டும் என்ற பிரசாரங்கள் அண்மைக்காலமாக முன்னெடுக்கப்பட்டன. அதன் தொடர்ச்சியாகவும் அந்த நாட்டின் பாராளுமன்ற உறப்பினர்கள் கொடுத்த அழுத்தங்களை அடுத்தும் இலங்கைப் பொலிஸாருக்கான பயிற்சிகளை நிறுத்துவதாக ஸ்கொட்லாந்து பொலிஸ் ஏற்கனவே அறிவித்து விட்டது.

ஆனால் பிரித்தானியா அவ்வாறான நிலைப்பாட்டை எடுக்கவில்லை. இலங்கைப் பொலிஸாருக்கான பயிற்சிகளை வழங்கும் திட்டம், இன்னமும் பரிசீலனையில் இருப்பதாகவே கூறியிருக்கிறது. இந்த நிலைப்பாடு இலங்கையை ஒதுக்கி ஓரம் கட்டும் நிலைப்பாட்டில் பிரித்தானியா இல்லை என்பதைக் வெளிப்படுத்தினாலும் தன்னால் கொண்டு வரப்பட்ட தீர்மானத்தை உதாசீனம் செய்யும் போது அதற்கெதிராக நட வடிக்கை எடுக்க வேண்டிய நிலையில் பிரித்தா னியா இருக்கிறது. பிரித்தானிய பாராளுமன்றத்தில் இராணுவத் தளபதி மீதான நடவடிக்கை என்ன என்று வெளிவிவகார இராஜாங்கச் செயலாளர் எலிசபெத் ரஸ்சிடமே கேள்வி எழுப்பப்பட்டது. பொதுவாக அவர் இது போன்ற விடயங்களுக்கு பாராளுமன்றத்தில் நேரடியாகப் பதிலளிப்பதில்லை.

அவ்வாறாயின் தெற்கு மத்திய ஆசிய விவகாரங்களுக்குப் பொறுப்பாக தாரிக் அஹமட் தான் பதிலளித்திருக்க வேண்டும். ஆனால் அவர் பிரதிநிதிகள் சபையில் உறுப்பினர் அல்ல, பிரபுக்கள் சபையில் தான் அங்கம் வகிக்கிறார். அதனால் அவருக்கு நிகரான பதவியை வகிக்கும் ஆசிய விவகாரங்களுக்கான இராஜாங்கச் செயலர் அமன்டா மில்லிங் பதிலளித்திருக்கிறார். அவரது பதில் பூடகமானதாக இருப்பினும் எடுக்கப்படும் நடவடிக்கைகளின் தாக்கம் குறைந்து விடக்கூடாது என்ற தொனி தென்படுகிறது. இது காட்டமானதொரு நடவடிக்கைக்கு அந்த நாடு தயாராகிறது என்பதை உணர்த்துகிறது. அதே வேளை தாரிக் அஹமட்டின் பயணத்தையும் இலங்கை அரசாங்கம் ஒரு விளையாட்டாகத்தான் கருதிக் கொண்டிருந்தது. உதாரணத்துக்கு தாரிக் அஹமட் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைச் சந்தித்த பின்னர் ஜனாதிபதி ஊடகப் பிரிவு ஒரு அறிக்கையை வெளியிட்டது நினைவிருக்கலாம். அந்த அறிக்கையில் இலங்கையின் நல்லிணக்க மற்றும் பொறுப்புக் கூறல் நடவடிக்கைகளை தாரிக் அஹமட் பாராட்டினார் என்று கூறப் பட்டிருந்தது.

ஆனால் தாரிக் அஹமட் தனது ருவிட்டர் பதிவில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவை செயல்முறை மற்றும் நிலையான அபிவிருத்தி இலக்குகளுக்கு அமைய மனித உரிமைகள் நல்லிணக்கம் நீதி மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவற்றில் இலங்கை அரசு முன்னேற வேண்டியதன் அவசியத்தை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் வலியுறுத்தியதாக குறிப்பிட்டிருந்தார். தாரிக் அஹமட்டின் சந்திப்பு தொடர்பாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்ட அறிக்கையை பார்த்த எவருக்கும் பிரித்தானியா தனது இறுக்கமான நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டுள்ளதா என்ற சந்தேகமே வரும்.

ஆனால் தாரிக் அஹமட்டின் டுவிட்டர் அந்த அறிக்கையின் நேர்மையின்மையை அப்பட்டமாக வெளிப்படுத்தியது. இந் நிலையில் தான் ஜெனிவா கூட்டத் தொடருக்கு முன்னர் பிரித்தானியா எத்தகைய நகர்வை எடுக்கப் போகிறது என்ற எதிர்பார்ப்பு அதிகரித்திருக்கிறது.



# தொடர் போராட்டத்துக்கு தயாரா?

ஒற்றையாட்சிக்குள் முடக்கும் சதியை முறியடிப்போம் என்ற தொனிப்பொருளில், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஒரு பிரசாரத்தை ஆரம்பித்திருக்கிறது.

யாழ்ப்பாணத்திலும், அதனை அடுத்து ஏனைய இடங்களிலும் நடைபெறவுள்ள பேரணிகளுக்கு மக்களை அணிதிரட்டும் தீவிர முயற்சிகளில், கடந்த வாரம், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திர குமாரும், அதன் செயலாளர் கஜேந்திரனும் ஈடுபட்டிருந்தனர்.



ஒற்றையாட்சிக்குட்பட்ட 13ஆவது திருத்தத்தை நிராகரிப்போம் என்ற கோஷத்துடன் முன்னெடுக்கப்படும் இந்தப் போராட்டம், முக்கியமான தொரு கால கட்டத்தில் தொடங்கப்பட்டிருக்கிறது.

ஏழு தமிழ்க்கட்சிகள் இணைந்து 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவதை உள்ளடக்கிய தமிழ் மக்களின் அபிலாஷைகள் சார்ந்த ஒரு கோரிக்கை ஆவணத்தை இந்தியப் பிரதமருக்கு அனுப்பி வைத்த நிலையிலேயே அதற்கு எதிரான முயற்சியில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இறங்கியிருக்கிறது.

குறித்த கடிதம் இந்தியத் உயர்ஸ்தானிகரிடம் 11ஆம் திகதி கையளிக்கப்படவிருந்த நிலையில், அவர் டெல்லி சென்றதால், கையளிப்பு தாமதமாகிய நிலையில், 13ஆம் திகதி இந்தப் போராட்டம் குறித்த அறிவிப்பை வெளியிட்டார் கஜேந்திரகுமார்.

18ஆம் திகதி ஆவணம் இந்தியத் உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேயிடம் கையளிக்கப்பட்டு நான்கு நாட்களுக்குப் பின்னர், போராட்டத்தை முன்னெடுக்கப் போவதாக அறிவித்து 11 நாட்களுக்குப் பின்னர் அதாவது கடந்த 22ஆம் திகதியே பிரசாரக் களத்தில் இறங்கியிருக்கிறது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி.

13 ஆவது திருத்தச் சட்டம் தமிழர் பிரச்சினைக்கான ஆரம்பப் புள்ளியாகக் கூட இருக்க முடியாது என்பதே எல்லாத் தரப்புகளினதும் நிலைப்பாடாக உள்ளது.

ஆனாலும் சந்தர்ப்ப சூ ழ்நிலைகளை காரணம் காட் டியும், இந்தியாவை இந்த அரங்கிற்குள் கொண்டு வரும் நோக்கிலும், ஆறு தமிழ்க்கட்சிகள் 13 ஆவது திருத்தச்சட்டத்தை வலியுறுத்துகின்றன. அதனை எதிர்க்கும் ஒரே தரப்பாக, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மாத்திரம் இருக்கிறது.

13 ஆவது திருத்தச்சட்டத்தை ஏற்க முடியாது என்பதால் மாகாண சபைத் தேர்தல்களில் போட்டியிடமாட்டோம் என்று 2013இல் கூறிய கஜேந்திரகுமார் பின்னர், அந்த நிலைப் பாட்டில் இருந்து விலகினார்.

13 ஆவது திருத்தச்சட்டம் பெறுமதியற்றது என்பதையும், மாகாண சபைகள் அதிகாரமற்றது என்பதையும் நிரூபிக்க அடுத்த மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவோம் என்றும் அவர் அறிவித்திருந்தார். இப்போது அதே மாகாண சபைகளை உருவாக்கிய 13 ஆவது திருத்தச்சட்டம்' ஒற்றையாட்சிக்குள் தமிழர் பிரச்சினையை முடக்கும் சதி `என்று அவரே போராட்டத்தில் இறங்கியிருக்கிறார்.

13ஆவது திருத்தச் சட்டமும், மாகாண சபைகளும், தமிழர் பிரச்சினையை ஒற்றையாட்சிக்குள் முடக்கும் என்பதால் தான், விடுதலைப் புலிகள் அதனை ஒருபோதும் ஏற்றுக் கொள்ளவில்லை.

அவர்கள் மாகாணசபைத் தேர்தல்களை ஆதரிக்கவில்லை, மாகாண சபைகளை அங்கீகரிப்பது அதனை ஏற்றுக் கொள்வதற்குச் சமமானது என்று கருதினர்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஒரு கட்டத்தில் `கூழுக்கும் ஆசைப்பட்டு மீசைக்கும் ஆசைப்பட்டுத் தான், மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடுவோம் என்றது. இப்போது, 13 ஆவது திருத்தச்சட்டத்தை நிராகரிப்போம் என்ற போராட்டத்தை முன்னெடுக்கிறது.

13ஆவது திருத்தச்சட்டத்தை நிராகரிப்போம் என்று போராட்டத்தை நடத்திக் கொண்டு, மாகாணசபைத் தேர்தலில் முன்னணி போட்டியிட்டால், அது அதன் முரண்பட்ட நிலையையே வெளிப்படுத்தும்.

அதேவேளை, 13அவது திருத்தச் சட்டத்துக்குள் தமிழர் பிரச்சினைக்கான தீர்வை முடக்கும் முயற்சிகளை முறியடிக்கும் போராட்டத்தை, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இன்னும் வலுவானதாக முன்னெடுத்திருக்க வேண்டும்.

ஏனென்றால், தமிழரின் அபிலாசைகள் என்பது 13ஆவது திருத்தச்சட்டமோ, அதற்குட்பட்ட அதிகாரங் களோ அல்ல. தமிழரின் அபிலாஷை சமஷ்டி அதிகாரங்களுக்கானது.

இது போருக்குப் பிந்திய அனைத்து தேர்தல்களிலும், தமிழ் மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டு, அங்கீகரிக்கப்பட்டு வந்திருக்கிறது. வடக்கு, கிழக்கில் 18 பாராளுமன்ற உறுப்பினர்கள், அந்த அபிலாஷைகளுக்கு வழங்கப்பட்ட ஆணைக்கு அமையவே தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்கள்.

அந்த ஆணைக்கு எதிரான அல்லது அந்த ஆணையை நீர்த்துப் போகச் செய்து பலவீனப்படுத்தும் வகையிலான 13க்கு எதிரான போராட்டங்கள், வீரியமான முறையில் முன்னெடுக்கப்படுவதே நியாயமானது.

அவ்வாறான முயற்சியின் அவசியத்தை உணர்ந்துள்ள முன்னணி, அதற்கேற்ற வேகத்துடன் போராட்டத்தை முன்னெடுக்கிறதா என்ற கேள்வி இருக்கிறது. இதற்காக மக்களையும், சமூக செயற்பாட்டாளர்களையும் அணி திரட்டுவதில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி போதிய கவனம் எடுக்கவில்லை என்றே தெரிகிறது. சிறியளவில் பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டாலும் இது ஒரு பெரும் எழுச்சிக்கான விதையாக அமைய வேண்டிய போராட்டம். சிறியதொரு பிக் கெட்டிங் போல முடிந்து போனால், போராட்டத்தின் மீதான நியாயப்பாடும் பலவீனமடைந்து விட்டதாக அடையாளப்படுத்தப்பட்டு விடும். 13இற்கு எதிரான போராட்டத்தை கஜேந்திரகுமார் அறிவித்த போது, மனோகணேசன் ஒரு சமூக வலைத்தளப் பதிவை இட்டிருந்தார்.

கஜேந்திரகுமாரின் போராட்டத்தை தாம் ஆதரிப்பதா கவும், அதேவேளை, இந்த போராட்டத்தை ஒரு தொடர் அரசியல் போராட்டமாக அவர் முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்று வலியுறுத்தியிருந்தார். 13 ஆவது திருத்தச்சட்டத்தை நிராகரித்து மாற்று தீர்வு ஒன்றை வலியுறுத்தும் போது, அதற்கான போராட்டத்தை அங்கொன்றும் இங்கொன்றுமாக நடத்துவதோ, அவ்வப் போது நடத்திக் கொண்டிருப்பதோ பயனற்றது என்பதே மனோ கணேசனின் வாதம். விடுதலைப் புலிகள் எவ்வாறு தமது இலட்சியத்தை முன்வைத்து தொடர் போராட்டத்தை முன்னெடுத்த னரோ அதுபோன்று, கஜேந்திரகுமாரும் முன்னெடுக்க வேண்டும் என்பதே, மனோ கணேசனின் ஆலோசனையாக இருந்தது.

மக்களை அணிதிரட்டுதல் என்பது, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கு மாத்திரமல்ல, அனைத்துத் தமிழ்க் கட்சிகளுக்கும் உள்ள பெரியதொரு சிக்கலாக உள்ளது. சலுகைகள், நிவாரணம், வேலை வாய்ப்பு என்று ஏமாற்றி அழைக்கப் படும் கூட்டங்களில், கூடுகின்ற மக்களின் அளவுக்குக் கூட, கொள்கை அடிப்படையில் தமிழ்க் கட்சிகளால் கூட்ட முடியாதிருக்கிறது. இந்த நிலைமைக்கு காரணம், மக்கள் அல்ல. அவர்கள் அரசாங்கம் கூறுவது போல, அரசியல் தீர்வில் அக்கறையற்றிருக்கவில்லை. தமக்கான உரிமைகளின் மீது கவனம் செலுத்தாதிருக்கவில்லை .

அவர்கள் நியாயமான, நீதியான அரசியல் தீர்வை எதிர்பார்க்கிறார்கள். ஆனால் அவர்களை ஒழுங்கமைத்து ஒன்று திரட்டி, ஒருங்கிணைந்து போராட்டத்துக்கு அழைத்து வருவதில் தமிழ்க்கட்சிகள் போதிய கவனம் செலுத்த வில்லை என்பதே உண்மை.

13ஆவது திருத்தச்சட்டத்துக்கு எதிரான போராட்டத்துக்கான பிரசாரத்தை, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இன்னும் வீரியத்துடன் முன்னெடுத்திருக்கலாம். முன்னணியைப் பொறுத்தவரையில் இப்போது சிக்கலானதொரு நிலைக்குள் இருக்கிறது. மணிவண்ணன் தரப்பு தனியாகச் செயற்படுவது அதில் ஒன்று. அவர்கள் யாழ்ப்பாண மாநகரசபை நிர்வாகத்தை முன்னெடுக்கும் முறை, பலரது கவனத்தை ஈர்த்திருக்கிறது.

அவரை முதலமைச்சர் வேட்பாளராக்கலாம் என்று பல பிரமுகர்கள் சிந்திக்கின்ற நிலைமையும் உள்ளது. இது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஆதரவு வட்டத்துக்கும் அதன் எதிர்காலத்துக்கும் கடுமையானதொரு சவால்.

அடுத்து, ஆறு தமிழ்க்கட்சிகள் ஒன்றாக இணைந்து இந்தியாவின் உதவியைக் கோரியிருக்கின்றன.

இதிலிருந்து விலகி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மட்டும் வெளியே நிற்கிறது. இவ்வாறான நிலையில், சர்வதேச அளவில் முன்னணி ஓரங் கட்டப்படும் சவால் ஒன்றும் உள்ளது. இவ்வாறான நிலையில், 13ஆவது திருத்தச் சட்டத்தை எதிர்த்து மக்களை அணிதிரட்ட எடுக்கப்பட்ட முயற்சி, கட்சியை மக்கள் மயப்படுத்துவதற்கு உதவக் கூடும்.

ஆனால் அந்த முயற்சியில் சறுக்கினால், பலவீனமானதொரு போராட்டத்தை முன்னெடுத்தால், அது நியாயமற்றதொன்றாக அடையாளப்படுத்தப் படும் ஆபத்து உள்ளது என்பதை மறந்து விடலாகாது. இந்த ஆபத்தை தவிர்ப்பதற்கு, தொடர் அரசியல் போராட்டத்தை முன்னெடுப்பதை விட முன்னணிக்கு வேறு தெரிவு இல்லை .

## உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதை

(9ம் பக்கத் தொடர்ச்சி) வடக்கில் கடந்த ஜனவரி மாதம் 26 ஆம் திகதி தொடக்கம் 30 ஆம் திகதி வரை முன்னெடுக்கப்பட்டிருந்த நிலையில் அதற்கு எதிராக வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் ஆர்ப்பாட்டங்களை நடா த்தியிருந்தனர். அது மாத்திரமன்றி எதிர் வரும் 28 ஆம் திகதி ஆரம்பமாகின்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 49 ஆவது கூட்டத் தொடரைத் தமக்குச் சாதகமான முறையில் கையாளும் நோக்கிலேயே அரசாங்கத்தினால் இத்தகைய நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டிருப்பதாக பல்வேறு தரப்பினரால் விமர்சனங்கள் முன்வைக்க ப்பட்டுள்ளன. இவ்வாறானதொரு பின்னணியிலேயே யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டிருந்த ஐ.நா வதிவிடப்பிரதிநிதி ஹனா சிங்கர் மேற் கண்டவாறு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஜனாதிபதியுடன் கலந்துரையாடி எமக்குத் தீர்வைப்

(4ம் பக்கத் தொடர்ச்சி) பாராளுமன்ற உறுப்பினர்கூட இல்லை. நாங்கள் ஒரு பாராளுமன்ற உறுப்பினரை பெற்றுக் கொள்ளவும் முடியாது. எனவே நம் சார்பில் எமது பிரச்னைகளை ஜனாதிபதியிடம் எடுத்துரைத்து எமக்கு உள்ள காணிப் பிரச்னைக்கு விரைவில் தீர்வை பெற்றுதாருங்கள் என கோரிக்கை விடுத்தனர்.

இந்த விடயம் தொடர்பில் கருத்துதெரிவித்த நீதி அமைச்சர் அலி சப்ரி.இந்த காணிப் பிரச்னை என்பது முஸ்லிம் மக்களுக்கு மட்டுமல்ல வடக்கில்அனைத்து மக்களுக்கும் இந்த ஒருபிரச்னையாக காணப்படுகின்றது. இந்தவிடயம் தொடர்பில் உரிய தரப்பினரிடம் பேசி நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார்.




# மீண்டும் ஒரு பொது வேட்பாளரா? சூடுபிடிக்கும் எதிரணி அரசியல்!

■ பவித்திரன்

ஜனாதிபதி தேர்தலுக்கு இன்னமும் மூன்று வருடங்கள் இருக்கின்ற போதிலும் எதிரணி தயாரிப்புக்களை துரிதப்படுத்தியிருக்கின்றது, எதிரணியினரின் இந்த அவசரத்துக்கு காரணம் உள்ளது.

"எதிர்க்கட்சித் தலைவர் நான்தான்! அதனால் பிரதான எதிரணி வேட்பாளராக நானே களமிறங்குவேன்" என அமைதியாக இருக்கும் நிலையில் சஜித் பிரேமதாச இல்லை. பொது வேட்பாளரை களமிறக்கி ரணில் விக்கரமசிங்க இரு தடவை களமிறங்க முடியாத நிலை ஏற்பட்டது அவருக்கும் ஒரு பாடம். அதனால் சஜித் முகாம் துரிதமாகச் செயற்படத் தொடங்கிவிட்டது.

அதேவேளையில் பொதுவேட்பாளர் என்ற கருத்தும் இப்போது முன்வைக்கப்பட்டு இரண்டு பெயர்களும் பேசப்படுவதால் தொடர்ந்தும் அமைதியாக இருக்க முடியாத நிலையில்தான் சஜித்தின் செயற்பாடுகளும் வேகமெடுத்திருக்கிறது, அவரது ஊடகப் பிரிவும் முடுக்கிவிடப்பட்டுள்ளது,

ராஜபக்க்ஷக்கள் அமைதியாகத்தான் இருக்கின்றார்கள். கோட்டாபய மீண்டும் ஒரு முறை களத்தில் இறங்குவதற்கான வாய்ப்புக்கள் தாராளமாக உள்ளன. இரண்டாவது தடவையாகவும் அதிகாரத்தை கைப்பற்றும் விருப்பம் அவருக்கு நிச்சயமாக இருக்கும். அவர் இறங்காவிட்டாலும் அந்தப் பதவியில் கண்வைத்துள்ள மற்றொரு ராஜபக்க்ஷ களமிறங்கலாம். அது நாமலாக இருக்கலாம் அல்லது பசிலாக இருக்கலாம்.

ஆனால், பிரச்சினை இப்போது அதுவல்ல. களமிறங்கப்போகும் ராஜபக்க்ஷவை எதிர்கொள்ளக்கூடிய வல்லமை உள்ள எதிரணி வேட்பாளர் யார் என்ற கேள்விதான் இப்போது எழுப்பப்பட்டிருக்கின்றது.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கு இன்னும் சுமார் மூன்று வருடங்கள் உள்ள போதிலும், ராஜபக்க்ஷக்களில் களமிறங்கக்கூடிய எவரையும் எதிர்கொள்ளக்கூடிய வல்லமை தம்மிடம்தான் உள்ளது எனக் காட்டிக்கொள்வதற்கான தயாரிப்புக்களில் மூவர் களமிறங்கியிருக்கின்றார்கள்.

முன்னாள் நீதியரசர் சிராணி பண்டாரநாயக்கவை களமிறக்கும் முயற்சியில் சந்திரிகா குமாரதுங்க காய்களை நகர்த்தியிருக்கின்றார்.

அதுஒருபுறம் இருக்க, பிரதான எதிர்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாசவும், ராஜபக்க்ஷவை எதிர்கொள்ளக்கூடிய வல்லமை தனக்கு மட்டும்தான் உள்ளது எனக் காட்டிக்கொண்டு இப்போதே திட்டமிட்ட முறையில் தனது நகர்வுகளை ஆரம்பித்திருக்கின்றார். சஜித்தின் இந்த அவசரத்துக்கு ராஜபக்க்ஷக்கள் காரணமல்ல. எதிரணியிலிருந்து மற்றொருவரை களத்தில் இறக்குவதற்கான முயற்சிகள் தன்னையும் மீறிச் சென்றுவிடலாம் என்ற அச்சம்தான் அவரை ஆட்கொண்டிருக்கின்றது.

எதிரணி தரப்பில் மற்றொருவரும் களமிறக்கப்பட்டால் ராஜபக்க்ஷகளுக்கு எதிரான வாக்குகள் பிளவுபட்டு ராஜபக்க்ஷகளுக்கு வெற்றி உறுதியாகிவிடும் என்பது சஜித்துக்கு உறைக்கிறது.

சஜித்தின் கனவுக்கு இன்று ஆப்பு வைக்கக்கூடியவர்களாக இருப்பவர்கள் இருவர். ஒருவர் சிராணி பண்டாரநாயக்க. மற்றவர் பாட்டாளி சம்பிக்க ரணவக்க.

சம்பிக்க ரணவக்க ஒரு பொறியியலாளர். ஜாதிக ஹெல உருமய என்ற சிங்கள தேசியவாதக் கட்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவராக இருந்தவர். சிங்கள - பௌத்த தேசியவாதத்தை முன்னிலைப்படுத்தி அரசியலில் முன்னுக்கு வந்தவர். பின்னர் அந்தக் கட்சியிலிருந்து வெளியேறி, 43 ஆவது படையணி என்ற அமைப்பை உருவாக்கியவர்.

> **"அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கு இன்னும் சுமார் மூன்று வருடங்கள் உள்ள போதிலும், ராஜபக்க்ஷக்களில் களமிறங்கக்கூடிய எவரையும் எதிர்கொள்ளக்கூடிய வல்லமை தம்மிடம்தான் உள்ளது எனக் காட்டிக்கொள்வதற்கான தயாரிப்புக்களில் மூவர் களமிறங்கியிருக்கின்றார்கள்.**

ஐ.தே.க.விலிருந்து வெளியேறிய சஜித் ஐக்கிய மக்கள் சக்தியை உருவாக்கிய போது சம்பிக்கவும் அதில் இணைந்துகொண்டார்.

சம்பிக்கவுக்கு இருக்கக்கூடிய பௌத்த - சிங்கள ஆதரவுத் தளமும், அவரது ஆளுமையும் சஜித்துக்கு அச்சுறுத்தலாகத்தான் இருந்தது. கட்சியில் முக்கிய பதவிகள் எதனையும் சம்பிக்கவுக்குக் கொடுக்காமல் பாதுகாத்துக்கொள்வதில் சஜித் எப்போதும் அவதானமாகவே இருந்தார்.

ராஜபக்க்ஷக்களை எதிர்கொள்ளக்கூடிய வல்லமை தனக்கு மட்டுமே இருப்பதாக சம்பிக்க கருதுவதற்கு சில காரணங்கள் உள்ளன. ஜாதிக ஹெல உருமயவின் முக்கியமான ஒருவராக இருந்தவர் என்ற முறையில் சிங்கள - பௌத்த கடும்போக்காளர்களின் வாக்குகளைக் கவரக்கூடிய ஒருவராக அவர் இருப்பது முதலாவது காரணம்.

ஒரு புத்திஜீவி என்ற தோற்றத்தையும் அவர் வெளிப்படுத்தி வந்திருக்கின்றார். அத்துடன் அவர் உருவாக்கிய 43 ஆவது படையணி என்ற அமைப்பும் ஒருவகையில் புத்திஜீவிகளைக் கொண்டதாகவே உள்ளது. இலங்கையில் இலவசக்கல்வி அறிமுகப்படுத்தப்பட்டது 43 ஆம் ஆண்டில்தான். அதனைக் குறிக்கும் முகமாகவே அந்தப் பெயரை அவர் தெரிவு செய்தார்.

கோட்டாபய ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறங்குவதற்கு சுமார் 4 வருடங்களுக்கு முன்னர் வியத்மக, எலிய என்ற அமைப்புக்களை உருவாக்கினார். அவற்றின் மூலமாகவே ஜனாதிபதி வேட்பாளராக தன்னை நிலை நிறுத்த அவர் முயன்றார். அதேபோன்ற ஒரு காய்நகர்தலாகவே 43 ஆவது படையணியை சம்பிக்க உருவாக்கினார்.

கடந்த வருடம் நடைபெற்ற அவரது அமைப்பின் அங்குரார்ப்பண நிகழ்வில் 4 மொழிகளில் அவரது விஞ்ஞாபனம் வெளியிடப்பட்டது. சிங்களம், தமிழ், ஆங்கிலம் என்பவற்றுடன் பிரெய்ல் மொழியிலும் அதனை அவர் வெளியிட்டார். இலங்கையில் பிரெயல் மொழியில் ஒரு அரசியல் மக்கள் அமைப்பு விஞ்ஞாபனத்தை வெளியிட்டிருப்பது இதுதான் முதல்தடவை. இதன்மூலமாக இலங்கையில் இருக்கக்கூடிய கண்பார்வையற்றவர்களின் குடும்பங்களின் ஆதரவை அறுவடை செய்ய அவர் முற்படுகின்றார்.

அதேவேளையில், வெறுமனே இனவாதத்தை மட்டும் முதலீடாகக்கொள்ளாமல் சிறுபான்மையினரின் ஆதரவை வெல்வதற்கும் அவர் முற்பட்டிருக்கின்றார். இரண்டு மாதங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணம் வந்த அவர் தமிழ் மக்களின் உணர்வுகளை நாடி பிடித்துப் பார்த்தார்.

கடந்த சனிக்கிழமை 43 படையணியின் மாநாடு ஒன்று கொழும்பில் இடம்பெற்றது. அனைத்து அரசியல் கட்சிகள், எம்.பி.க்களுக்கு அழைப்பு அனுப்பப்பட்டிருந்தது. ஜனாதிபதி வேட்பாளராக தன்னை நிலை நிறுத்துவதற்கான முயற்சியாகவே இந்த மாநாட்டை சம்பிக்க பிரமாண்டமாக ஏற்பாடு செய்திருந்தார்.

தமது கட்சியைச் சேர்ந்தவர்களை அதற்குச் செல்வதைத் தடைசெய்த சஜித், கட்சி சார்பில் ஒருவரை மட்டுமே பின்னர் அனுமதித்தார். சஜித்தும் தனக்கு விடுக்கப்பட்ட அழைப்பை புறக்கணித்தார்.

அதேவேளையில், ஐமச எம்.பி.யான மனோ கணேசன் இதில் கலந்துகொண்டிருந்தார். மாநாட்டின் முடிவில் மனோ தெரிவித்த கருத்துக்கள் முக்கியமானவை. என்ன நடைபெறுகின்றது என்பதையும் அம்பலமாக்கியது.

"இன்று அரசாங்கம் விழுவதற்கு முன் நாடு விழுந்துவிட்டது. அண்டை நாடுகளிடம் கெஞ்சி கூத்தாடி கைமாற்று வாங்கிஇ மூன்று மாதங்களுக்கு ஒருமுறைஇ பெருங்கடன்களின் மீள் செலுத்தும் தொகையை செலுத்தி காலத்தை ஓட்டும் நிலைமைக்கு நாடு விழுந்துவிட்டது. ஆகவே புதிதாக கட்டி எழுப்ப வேண்டியது புதிய அரசாங்கம் என்பதை விடஇ புதிய நாடு என்றுதான் சொல்ல வேண்டும்.

ஆகவே இன்று இந்நாட்டின் அரச எதிர்ப்பு சக்திகள் அனைத்தும் கரங்கோர்க்க வேண்டும். அதற்கு முன் ஐக்கிய மக்கள் சக்தி தலைவர் சஜித் பிரேமதாசவும் 43ஆம் படையணி தலைவர் பாடலி சம்பிக்க ரணவக்கவும் கரங்கோர்க்க வேண்டும்.

மனோ கணேசனின் இந்தக் கருத்து எதிரணிக்குள் தீவிரமடைந்திருக்கும் நெருக்கடியை வெளிப்படுத்துகின்றது.

இதேவேளையில், தன்னுடைய நிலைப்பாட்டில்தான் உறுதியாக இருப்பதை சஜித்தும் மீண்டும் வெளிப்படுத்தியிருக்கின்றார்.

"அடுத்த தடவை ராஜபக்க்ஷக்களில் ஜனாதிபதி வேட்பாளராக யார் களமிறங்கினாலும் நான் தோற்கடித்தே தீருவேன்" சஜித் பிரேமதாஸ தெரிவித்திருக்கிறார்.

சம்பிக்க ரண வக்க 43ஆம் படையணி எனும் அரசியல் இயக்கத்தை உருவாக்கி அடுத்த ஜனாதிபதித் தேர்தலை இலக்கு வைத்துச் செயற்படுகின்றார் என அரசி யல் வட்டாரங்களில் சொல்லப்படுவது தொடர்பில் சஜித் பிரேமதாசவிடம் ஊடகங்கள் வினவிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

சம்பிக்க ரணவக்கவின் உண்மை யான திட்டம் என்னவென்று எனக்குத் தெரியாது. ஆனால் நான்தான் எதிரணி யின் அடுத்த ஜனாதிபதி வேட்பாளர். கடந்த தடவை ஜனாதிபதித் தேர்த லின்போது எதிரணிகளுக்குள் ஒற்றுமை இல்லாத காரணத்தால் எனக்கான வாக்குகள் சிதறின. இதனால் கோட்டாபய ராஜ பக்க்ஷ வெற்றிவாகை சூடினார்.

அடுத்த தடவை கோட்டாபய ராஜபக்க்ஷவோ அல்லது வேறெந்த ராஜபக்க்ஷ.வோ ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கினால் வீழ்த்தியே தீருவேன். நாட்டு மக்கள் இன்று ஐக்கிய மக்கள் சக்தியின் பக்கமே உள்ளனர். அவர்கள் நாட்டுக்கான புதிய தலைவரைத் தேடுகின்றனர்" என சஜித் கூறியிருக்கின்றார்.

எதிரணியின் வேட்பாளர் யார்? இதுதான் இலங்கை அரசியலில் இன்னும் சில காலத்துக்கு பரபரப்பாக இருக்கப்போகும் கேள்வி! ■

# எல்லை தாண்டும் மீனவர்கள் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்காக பேச்சுவார்த்தைக்கு தமிழக முதல்வர் ஸ்டாலின் அழைப்பு!

எல்லை தாண்டும் இந்திய மீனவர்களால் ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பில் பேச்சுவார்த்தை நடாத்தி தீர்வு காண்ப தற்கு தமிழ்நாடு வருமாறு தமிழ் நாட்டு



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அழைப்பு விடுத்துள்ளதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ் தேசிய கட்சியின் பொது செயலாளருமான எம் கே சிவாஜி லிங்கம் தெரிவித்துள்ளார்.

01 பெப் 2022 சுப்பர்மடம் பகுதியில் மீன வர்கள் போராட்டத்தில் கலந்து கொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரி விக்கும் போதே அவர் இவ்வாறு தெரி வித்தார் அவர் மேலும் தெரிவித்ததாவது,

அண்மைக் காலமாக வட பகுதி கடலிலே எங்களுடைய கடற்றொழிலாளர் கள் தங்களுடைய இலட்சக்கணக்கான கோடிக்கணக்கான கடற்றொழில் உப கரணங்களை மாத்திரமல்ல தங்களுடைய இன்னுயிர்களையும் திறக்கின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. குறிப்பாக இந்தியா விலிருந்து எல்லை தாண்டி வருகின்ற ரோளர் பாரிய இழுவை மடி படகுகள் மோதி பாரிய சேதம் ஏற்பட்டுருக்கிறது. இதே போல இலங்கை கடற்படை யினரது படகுகளாலும் வேண்டுமென்றும் விபத்தினாலும் கொல்லப்பட்டு கரை ஒதுங்குகின்ற கடற்றொழிலாளர்களது சடலங்களால் ஒரு பதட்டமான சூழல் அதிகரித்திருக்கிறது.

வடமராட்சி மருதங்கேணி வத்திராயன் பகுதியில் இரண்டு கடற்றொழிலாளர் களது உடல்கள் கரை ஒதுங்கியிரு க்கின்றன. இதே போன்று பருத்தித்துறை பொன்னாலை வீதியிலே சுப்பர்மடம் பகுதியிலே வீதியை மறித்து அவர்கள் மறியல் போராட்டத்தை நடாத்திக் கொண்டிருக்கின்றனர். பொலிகண்டி வரை வீதி போக்குவரத்து முடக்கப் பட்டிருக்கிறது.

இலங்கை அரசாங்கம் இதை பற்றி எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இல ங்கை இந்திய அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஈழ மீனவர்களும், தமிழக மீனவர்களும் நடுக்கடலிலே மோதுவதை இல்லாமல் செய்ய வேண் டும்.

தமிழக அரசும் வட மாகாணத்திலே இருக்கக் கூடிய சங்கங்கள், உட்பட மக்கள் பிரதிநிதிகளும் பேச வேண்டும். இப்பொழுது கூட இரண்டு தினங்களு க்கு முன்னர் மாண்புமிகு முதலமைச்சர் ஸ்டாலின் அவர்கள் உடனடியாக பேச்சுவார்த்தை நடாத்தி இந்தமாதிரியான பதட்டங்களை குறைக்க முன்வருமாறு கேட்டிருப்பதாக எனக்கு செய்தி அனு ப்பியிருக்கிறார்கள்.

இப்பொழுது கூட அவரது உதவியாளர் வழக்கறிஞர் ராதா கிருஷ்ணன் அவர்கள் தமிழக முதலமைச்சருடன் பேசி விட்டு செய்தி தருவதாக சொல்லியிருக்கிறார். உடனடியாக ஒரு போர் நிறுத்தம் போல அந்த எல்லையில் இருப்பவர்கள் எல்லை தாண்டக் கூடாது. இல்லா விட்டால் எங்களுடைய மக்கள் பட்டிணி யாலும் பசியாலும் தான் பாதிக்கப்படுவார் கள். மீதி விடயங்களை பேசி ஒரு இணக்கத்தின் அடிப்படையில் தீர்வு காணப்பட வேண்டும். இலங்கை அரசு இதில் அக்கறை காட்டும் என நாங்கள் எதிர்பார்க்க முடியாது. இந்திய மத்திய அரசுக்கும் ஏனோ தானோ நிலவரம்தான். இதிலே அவன் செத்தாலும் இவன் செத் தாலும் தமிழர்கள் என்ற நிலமை இரு க்கிறது.

அவர்கள் மிகப்பெரிய எண்ணிக்கையில் இருக்கிறார்கள். பொருளாதாரத்தில் பல மாக இருக்கிறார்கள். தற்போது விலை வாசி அதிகரித்திருக்கும் நிலையில் பனையால் விழுந்தவனை யானை மிரிப்ப தாக உள்ளதாகவும் உடனடியாக இந்த பிரச்சினை தீர்க்க வேண்டும். அதற்கான முழு முயற்சிகளை உடனடியாக எடுப் போம் என்றார்.

# கடுமையான அறிக்கையை வெளியிடுவார் பச்லெட்?



ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் அறிக்கை இம்முறை கடுமையானதாக இருக்கும் என தமிழ் தேசிய மக்கள் முன்ன ணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திர குமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் வருகை தந்துள்ள ஐ.நாவின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி ஹானா சிங்கருடனான சந்திப்புக்குப் பின் னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இதனை தெரிவித்தார். அரசியல் விடயங்கள் உரிமை சார்ந்த விடயங்கள் தொடர்பில் பேசியுள்ளோம். 13 ஆம் திருத்தத்தை ஏற்றுக் கொள்கின்ற தமிழ்க் கட்சிகளின் நடவடிக்கை சம்பந்த மாகவும் தமிழ் மக்கள் வழங்கிய ஆணைக்கு மாறாக நேர் மாறாக நடைபெறுகின்ற விடயம் தொடர்பில் பேசியுள்ளோம். இந்திய மீனவர்கள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடும்போது இலங்கை கடற்படை அதனை தடுக்காமல் அசண்டையீன மாக செயல்படுவது தொடர்பாகவும் தமிழ் தேசிய அரசியலில் ஈடுபாடு கொண்ட பெண்களுக்கு வரும் மோசமான பழி வாங்கல் சம்பந்தமாகவும் தெரிவித்துள்ளோம். தென்னிலங்கை சூழல் மற்றும் அரசாங்கத்தின் செயற்பாடுகள் உரிமைமீறல் சார்ந்த விடயங்கள் தொடர்பாகவும் அவருக்கு தெரியப்படு த்தியுள்ளோம். அமைதியாக அனைத்தையும் உள்வாங்கிய அம்மையாரிடம் கடந்த அறிக்கை சம்பந்தமாக கடுமையான விமர்சனங்களை முன்வைத்திருந்தோம். அரசாங்கம் புதிதாக ஆட்சிக்கு வந்ததால் அவர்களுக்கு சந்தர்ப்பம் ஒன்று வழங்க வேண்டும் என சொல்லியிருந்தார். ஆனால் இந்த முறை அறிக்கை கடுமையானதாக இருக்கும் என கூறியிருந்தார் என்றார்.



# தமிழ்நாடு அரசு - ஆளுநர் ரவி முரண்பாடு தீவிரமடைகிறதா?



தி.மு.கவின் அதிகாரபூர்வ நாளிதழான முரசொலியில் தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என். ரவியைக் கண்டித்து நீண்ட கட்டுரை ஒன்று வெளியாகியுள்ளது.

ஆளுநரின் குடியரசு தின வாழ்த்துச் செய்தியில் இடம் பெற்றிருந்த கருத்துகளை தி.மு.க. ஏற்கனவே கண்டித்திருந்த நிலையில் மேலும் ஒரு கட்டுரை வெளியாகியிருக்கிறது. முரசொலியின் கடைசிப் பக்கத்தில் கொக்கென்று நினைத்தாரோ தமிழக ஆளுநர் ரவி என்ற தலைப்பில் கட்டுரை ஒன்று வெளியாகியுள்ளது. அந்தக் கட்டுரையில் ஆளுநரின் குடியரசு தின வாழ்த்துச்செய்தியை மையமாக வைத்து கடுமையான கருத்துகள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

அவர் ஒரு காவல்துறை அதிகாரியாக இருந்து ஓய்வுக்குப் பின்னர் ஆளுனராக அமர்த்தப்பட்டவர். மிரட்டல் உருட்டல் பாணிகள் காவல் துறைக்குத் தேவை. பல நேரங்களில் அந்த பாணி கைகொடுக்கும். ஆனால் அது அரசியலில் எடுபடாது என்பதை அவர் உணர்ந்திட வேண்டும்.

குடியரசு தின விழாவை ஒட்டி ஆளுநர் விடுத்துள்ள செய்தி அவர் தனது பொறுப்புணராது தமிழக மக்களின் தன்மானத்தை உரசிப் பார்க்க நினைப்பதாகத் தோன்றுகிறது. நீட்டுக்கு எதிராக தமிழக சட்டமன்றம் ஒரு மனதாகத் தீர்மானம் நிறைவேற்றி அதனை ஆளுநரின் ஒப்புதலுக்கு அனுப்பி மாதங்கள் சில கடந்தும் அது கிடப்பிலே கிடக்கிறது.

அதன் நிலை என்னவென்று தெரியாத நிலையில் நீட் வருவதற்கு முன்பு இருந்த நிலையை விட நீட் வந்த பிறகு அரசுப் பள்ளி மாணவர்களின் மருத்துவப் படிப்பு சேர்க்கை அதிகரித்துள்ளது என்று கூறியிருக்கிறார்.

ஒட்டுமொத்தத் தமிழகமுமே நீட்டை எதிர்த்து நிற்கும் நிலையில் தமிழகத்தின் சட்டப்பேரவையே அதனை எதிர்த்து தீர்மானம் நிறைவேற்றியுள்ள நிலையில் அது அவரது பரிசீலனையில் இருக்கும் நிலையில் ஒரு ஆளுநர் இப்படி அறிவிப்பது என்ன நியாயம்?

ஒரு கட்சி தனது கொள்கைகளைச் சொல்லி மக்களிடம் வாக்குப் பெற்று ஆட்சி பீடம் ஏறுகிறது. மக்களும் அந்தக் கட்சி அவர்களது எண்ணைத்தை நிறைவேற்றும் என்று எண்ணி வாக்களிக்கிறார்கள். அந்த மக்களின் எதிர்பார்ப்பை தீர்மானமாக்கி அனுப்பும் போது அதை ஓர் ஆளுநர் அலட்சியப்படுத்துவது என்பது சுமார் ஏழு கோடி மக்களை அவமதிப்பது என்பதை உணர வேண்டும்.

தமிழக அரசியல்வாதிகள் பல கருத்துகளில் ஒன்றுபடுவதில்லை. பல ஜீவாதார உரிமைகளில் அவர்கள் ஒன்று பட்டு நிற்பார்கள். அங்கே கட்சி வேறுபாடுகளைக் காண முடியாது. அப்படிப்பட்ட உரிமைகளில் ஒன்று தான் நீட் வேண்டாம் என்பது.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை இரு மொழிக் கொள்கைதான். இதில் ஆளும் கட்சிக்கும் எதிர்க்கட்சிக்கும் மாறுபட்ட கொள்கையில்லை. மற்றொன்று நீட் வேண்டாமென்பது. ஆளுநர் ரவி இதனை உணர்ந்து உரிய தகவலை மேலிடத்திற்குத் தெரிவித்து ஒட்டு மொத்தத் தமிழகத்தின் உரிமைக் குரலுக்கு அங்கீகாரம் வாங்கித் தர முயல வேண்டும். அதனை விடுத்து இங்கே பெரியண்ணண் மனப்பான்மையோடு அரசியல் செய்ய நினைத்தால் கொக்கென்று நினைத்தாயோ கொங்கணவா எனும் பழங்கதை மொழியை அவருக்கு நினைவுபடுத்த விரும்புகிறோம்.

அதாவது இது நாகாலாந்து அல்ல, தமிழகம் என்பதை அவருக்கு நினைவுபடுத்த விரும்புகிறோம் என்று அந்தக் கட்டுரையில் கூறப்பட்டிருக்கிறது. ஏற்கனவே குடியரசு தின வாழ்த்துச் செய்தியில் ஆளுநர் ஆர். என். ரவி தெரிவித்த கருத்துகளுக்கு தமிழ்நாடு தொழில்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு கடுமையான அறிக்கை ஒன்றின் மூலம் பதில் அளித்திருந்தார்.

தமிழ்நாட்டில் மும்மொழி கொள்கையினை ஏற்றுக் கொண்டு நடைமுறைப்படுத்திட முன்வர வேண்டும் என்ற கருத்து உருவாகும் வகையில் மாண்புமிகு ஆளுநர் அவர்கள் பிற மாநிலங்களில் உள்ள மாணவர்களைப் போல நம்முடைய தமிழ் நாட்டுப் பள்ளி மாணவர்களும் பிற இந்திய மொழிகளைப் பயில வேண்டும் எனவும் பிற இந்தியமொழிகளின் அறிவை நம்முடைய மாணவர்களுக்கு மறுப்பது என்பது சரியல்ல எனவும் தனது குடியரசு நாள் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்து அது ஊடகங்களிலும் பரவலாக வெளி வந்திருக்கின்றது.

தமிழ் நாட்டின் மொழிப் போராட்ட வரலாறை அறிந்தோருக்குப் பிற இந்திய மொழிகள் என்பது இந்தியை முன் நிலைப்படுத்தும் சொற்பிரயோகம் என்பதில் இரு வேறு கருத்து இருக்க முடியாது.

இரு மொழிக் கொள்கையால் தமிழ் நாட்டு மாணவர்களின் கல்வித் தகுதியிலோ அல்லது பெரும் பொறுப்புகளில் அவர்களில் இடம் பெறும் வகையில் பெறும் வாய்ப்புகளிலோ யாதொரு பின்னடைவோ குறைகளோ ஏதுமில்லை.

தமிழ்நாடு சட்டமன்றத்திலும் நீட் தேர்வில் இருந்து விலக்களிக்கும் சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பட்டு அது மாண்புமிகு ஆளுநரின் ஒப்புதலுக்குக் காத்திருக்கின்றது. ஆளுநர் அவர்கள் அந்த சட்ட முன் வடிவிற்குத் தன்னுடைய இசைவினையும் விரைவில் அளித்து ஒன்றிய அரசுக்கு அனுப்பி வைப்பதன் மூலம் தமிழ் நாட்டு மாணவச் செல்வங்களின் மருத்துவப் படிப்பு கனவுகளை நிறைவேற்றத் துணை நிற்பார் என நான் நம்புகின்றேன்" என்று அந்த அறிக்கையில் கூறியிருந்தார்.

தமிழ்நாட்டின் ஆளுநராக முன்னாள் ஐ.பி.எஸ்.அதிகாரியான ஆர்.என். ரவி நியமிக்கப்பட்ட போதே அவரது நியமனம் குறித்து சமூக வலைதளங்களில் விவாதங்கள் எழுந்தன. இந்த நிலையில் நீட் தேர்வு தொடர்பான மசோதாவை மத்திய அரசுக்கு ஆளுநர் அனுப்பி வைக்காதது தொடர்ந்து நெருடலாகவே இருந்த வந்தது.

சில நாட்களுக்கு முன்பாக புது டில்லியில் மத்தியஉள்துறை அமைச்சர் அமித் ஷாவைச் சந்திக்க தமிழ்நாடு எம்.பிக்களுக்கு நேரம் வழங்கப்படாத நிலையில் செய்தியாளர்களைச் சந்தித்த டி.ஆர். பாலு ஆளுநர் குறித்து கடுமையான கருத்துகளைத் தெரிவித்தார். "ஆளுநர் ஆர்.என். ரவி பதவி விலக வேண்டும்" என்று கூறினார்.

இதற்கு அடுத்தபடியாக தமிழ்நாட்டில் உள்ள பல்கலைக்கழகங்களுக்கு துணை வேந்தர்களை நியமிக்கும் ஆளுநரின் அதிகாரத்தை மாநில அரசுக்கு மாற்றும் வகையில் அடுத்த சட்டமன்றக் கூட்டத் தொடரில் புதிய சட்டத் திருத்தம் கொண்டு வரப் போவதாக தமிழ்நாடு அரசு அறிவித்தது.

இந்த நிலையில் தான் தமிழ்நாட்டின் இருமொழிக் கொள்கையை கேள்விக் குட்படுத்தும் வகையில் அறிக்கை வாழ்த்துச் செய்தி ஒன்றை வெளியிட்டார்ஆளுநர் ஆர்.என். ரவி.

ஆளுநரின் வாழ்த்துச் செய்தியில் இருந்த கருத்துகளும் ஆளும் தி.மு.கவின் சார்பில் அடுத்தடுத்து வெளிவரும் அறிக்கைகளும் ஆளும் தரப்பிற்கும் ஆளுநருக்கும் இடையில் நிலவும் தீவிர மோதல் ஏற்பட்டிருப்பதையே உணர்த்துகின்றன.

நன்றி— பிபிசி

# இந்திய எதிர்ப்பு!

(5ம் பக்கத் தொடர்ச்சி) தெளிவாக உணர்த்தியிருக்கின்றது. நிலைமைகள் இவ்வாறிருக்கின்ற போது வீதிகளில் நின்று இந்தியாவிற்கு எதிராக கோஷம் எழுப்புவதால் தமிழினம் எதனை அடையப் போகின்றது? இவ்வாறு எதிர்ப்பு அரசியல் செய்பவர்கள் எதனை தமிழ் மக்களுக்கு பெற்றுக் கொடுக்கப் போகின்றனர்?

இதுவரை இவர்கள் பெற்றுக் கொடுத்தது என்ன? எல்லோரையும் எதிர்த்துக் கொண்டு. இந்தச் சிறுதீவில். தமிழினம் எவ்வாறு வாழப் போகின்றது? எதிரிகளை அதிகரித்துக் கொண்டிருப்பதன் மூலம்ஓர் இனம் உருப்பட்டதாக வரலாற்றில் பதிவுகள் இல்லை. தமிழர்கள் இது தொடர்பில் சிந்திக்க வேண்டும். தமிழ் சமூகத்தின் முன்னேறிய பிரிவினர் இது தொடர்பில் சாதாரண மக்களுக்கு உணர்த்த வேண்டும்.

## 13வது திருத்தத்தினை அரசியல் தீர்வாக ஒரு போதும்

(6ம் பக்கத் தொடர்ச்சி) ஏற்கனவே இந்திய பிரதமர் மோடி கூட்டுறவு சமஸ்டி வேண்டும் என தெரிவித்துள்ளார். அதேபோன்று இம்முறை நடைபெற்ற சட்டமன்ற தேர்தலின் போது ஈழத்திற்கான வாக்கெடுப்பு நடாத்த வேண்டும் என்று திமுகாவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் ஏற்கனவே ஜெயலலிதாவால் சட்டமன்றத்தில் கொண்டு வரப்பட்டிருந்தது. இவ்வளவு நடந்த பின்பும் நாங்கள் அதை கேட்பது காலத்திற்கு பொருத்தமானதா என்று எனக்கு தோன்றவில்லை.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் கோரிக்கை தொடர்பாக அவர்களிடம் தான் கேட்க வேண்டும். என்னுடைய கோரிக்கை 13வது திருத்தத்தை நான் ஏற்றுக் கொள்ளவில்லை. அடுத்தவர்களிடம் ஒப்பிட வேண்டாம் இது என்னுடைய கோரிக்கையாகும் என்று தெரிவித்தார்

## உள்நாட்டு பொறிமுறை மூலம் பிரச்சனைக்குத்


(8ம் பக்த் தொடர்ச்சி) ஐக்கிய நாடுகள் மனிதஉரிமை ஆணையகத்தின் செயல்முறையின் அடிப்படையில் இலங்கை அரசாங்கத்தை நீதி மற்றும் பொறுப்புக்கூறல் தொடர்பில் மேலும் காத்திரமான நடவடிக்கைகளை எடுக்குமாறு நான் இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்தினேன். இது நல்லிணக்கம் மற்றும் சமூக ஒற்றுமை குறித்த அரசாங்கத்தின் நோக்கத்திற்கு ஆதரவாக அமையும். மேலும் இது அனைத்து இலங்கையர்களிற்கும் அவசியமான பொருளாதார பாதுகாப்பிற்கு அவசியமான ஸ்திரதன்மையை உறுதிசெய்யும்.

நாங்கள் இலங்கை அரசாங்கத்துடன் அனைத்து விடயங்களிலும் ஆக்கபூர்வமான சகாவாக விளங்க விரும்புகின்றோம். மனித உரிமைகள் உட்பட ஐக்கிய இராச்சியம் எந்த விவகாரங்களில் ஆதரவளிக்கலாம் என்பதை நாங்கள் தொடர்ந்து தெரிவித்து வருவோம். ஐக்கியநாடுகள் மனித உரிமைகள் பேரவை செயற்பாடுகளை பொறுத்தவரை இலங்கை தொடர்பான முகன்மை குழுவின் ஏனைய நாடுகளின் ஒத்துழைப்புடன் இலங்கையுடனான எங்கள் ஆக்கபூ ர்வமான ஈடுபாட்டை நாங்கள் தொடர எண்ணியுள்ளோம்.


## 13 எதிர்ப்பு:- சீனாவுக்கான அழைப்பா?

(16ம் பக்கத் தொடர்ச்சி) தலைமீடு செய்வதற்கான வாய்ப்பை கொண்டிருக்கின்றது. 13வது திருத்தச்சட்டத்திலுள்ள போதாமைகளை தமிழ் பரப்பில் உரையாடுவது என்பது வேறு, அதனை வீதிகளில் நின்று எதிர்ப்பதென்பது வேறு. வீதிகளில் நின்று 13வது திருத்தச்சட்டத்தை எதிர்ப்பதாக கோசமிடுவதும் அதனை பாதுகாக்க வேண்டுமென்று கூறுபவர்களை இந்திய முகவர்கள், இந்திய அடிமைகள் என்றும் கோசமிடுவதானது அடிப்படையில் இந்தியாவிற்கான எதிர்ப்பை வடக்கில் அடையாளப்படுத்துவதும் மக்கள் மத்தியில் இந்திய எதிர்ப்பை பரவலப்படுத்துவதும் நோக்கத்தையுமே கொண்டதாகும். இவ்வாறான இந்திய எதிர்ப்பு நடவடிக்கைகளையே மறுபுறமாக சீனா தனக்கான வாய்ப்பாக பயன்படுத்திக் கொள்கின்றது. 13 எதிர்ப்பின் மூலம் சீனாவிற்கு வடக்கில் பிறிதொரு கதவு திறந்துவிடப்பட்டிருக்கின்றது. இனி அவர்கள் அதனை பயன்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்வர்.


# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?




மேடராசி அன்பர்களே! மனதில் இருந்த கவலைகள் நீங்கும். சொத்துக்கள் சம்பந்தமான காரிய அனுகூலம் ஏற்படும். நண்பர்கள் மூலம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். புதிய நபர்களின் நட்பு கிடைக்கும். குடும்பத்தில் சுபகாரியங்கள் நடக்கும். கணவன், மனைவிக்கிடையே அன்பு அதிகரிக்கும். பிள்ளைகள் உங்கள் சொல்படி நடப்பது மனதுக்கு திருப்தி தரும். உறவினர்கள் நண்பர்கள் மூலம் நன்மை நடக்கும். தொழில் வியாபாரத்தில் கூடுதல் லாபம் கிடைக்கும் என்ற தன்னம்பிக்கை ஏற்படும் உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு இழுபறியாக இருந்த அலுவலக வேலைகள் உடனே முடியும். நல்ல பெயர் கிடைக்கப் பெறுவீர்கள். பெண்களுக்கு மற்றவர்களின் பொறுப்புகளை ஏற்பதை தவிர்ப்பது நல்லது. பெறுவீர்கள். பொறுப்புகள் அதிகரிக்கும்.




ரிஷபராசி அன்பர்களே! எடுத்த காரியத்தை எப்படியும் செய்து முடித்து விடுவீர்கள். சுப செலவுகள் ஏற்படும். வேலை காரணமாக வீட்டை விட்டு வெளியில் தங்க நேரலாம். பணவரவு எதிர்பார்த்தபடி இருக்கும். பெரியோர் நேசம் கிடைக்கும். வாகன யோகம் உண்டாகும். குடும்பத்தில் கணவன், மனைவிக்கிடையே நெருக்கம் அதிகரிக்கும். குடும்பத்துடன் விருந்து, கேளிக்கை நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். குழந்தைகள் உற்சாகமாக காணப்படுவர். தொழில் வியாபாரம் தொடர்பான விஷயங்கள் சாதகமாக நடக்கும். உத்யோகத்தில் எதிர்பார்க்கும் பதவி உயர்வு ஏற்படும். பெண்கள் உதவி கேட்டு நாடி வருபவர்களுக்கு தேவையான உதவிகளை செய்வீர்கள். குடும்ப இரகசியங்களை வெளியிட வேண்டாம்.





மிதுனராசி அன்பர்களே! ராசிநாதன் சுக்கிரன் தனலாபத்தை தருவார். அடுத்தவர்களுக்கு உதவுவதில் ஆர்வம் காட்டுவீர்கள். நோய் நீங்கி உடல் ஆரோக்கியம் உண்டாகும். கோபத்தால் சில்லறை சண்டைகள் ஏற்படலாம். காரிய அனுகூலம் உண்டாகும். வாகன வசதி ஏற்படும். குடும்பத்தில் குதூகலமான சூழ்நிலை காணப்படும். கணவன், மனைவிக்கிடையே மகிழ்ச்சி கூடும். உங்கள் சொல்படி பிள்ளைகள் நடந்து கொள்வது மனதுக்கு இதமளிக்கும். பிரிந்து சென்றவர்கள் மீண்டும் உங்களை நாடி வருவார்கள். தொழில் வியாபாரம் முன்னேற்றம் காண புதிய திட்டங்களை தீட்டுவீர்கள். உத்யோகத்தில் இருப்பவர்கள் உற்சாகமாக செயல்பட்டு வேலைகளை உடனுக்குடன் செய்து முடிப்பார்கள். பெண்களுக்கு சேமிக்கும் பழக்கம் அதிகரிக்கும்.




கடகராசி அன்பர்களே! நோக்கங்கள் நிறைவேறும். வழக்கு சம்பந்தமான விஷயங்களில் சாதகமான பலன் கிடைக்கும். பயணங்கள் செல்ல நேரிடலாம். மன திருப்தியுடன் செயலாற்றுவீர்கள். புத்திசாதுரியம் மூலம் காரிய வெற்றி கிடைக்கும். கொடுத்த வாக்கை நிறைவேற்றுவதன் மூலம் மற்றவர்களிடம் மதிப்பு கூடும். பாராட்டு கிடைக்கும். வீடு மனை யோகம் ஏற்படும். குடும்பத்தில் கணவன், மனைவிக்கிடையே இருந்த மனவருத்தம் நீங்கும். பிள்ளைகளுக்கு தேவையான பொருட்களை வாங்கி கொடுப்பீர்கள். தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்களில் இழுபறியான நிலை மாறும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் அலுவலகம் தொடர்பான பணிகளில் முழுமூச்சுடன் செயல்பட்டு முன்னேற்றம் காண்பர். பெண்களுக்கு நிதானமாக பேசுவது நன்மை தரும்.




சிம்மராசி அன்பர்களே! எல்லாவகையிலும் சாதகமான பலன் கிடைக்க பெறுவீர்கள். சொத்துக்கள் விஷயத்தில் சற்று கூடுதலாக கவனம் செலுத்துவது நல்லது. குடும்பத்தில் இருந்த பிரச்னைகள் நீங்கும். வீட்டிற்கு தேவையான பொருள்களை வாங்கி மகிழ்வீர்கள். கணவன், மனைவிக்கிடையே உறவு பலப்படும். பிள்ளைகள் மகிழ்ச்சியடைய தேவையானவற்றை செய்வீர்கள். தொழில் வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். பணவரத்து இருக்கும். பாக்கிகள் வசூலாகும். உத்யோகத்தில் இருப்பவர்கள் கூடுதலாக உழைக்க வேண்டியிருக்கும். சக ஊழியர்களிடம் அனுசரித்து செல்வது நல்லது. பெண்களுக்கு காரியங்களில் இருந்த பின்னடைவு நீங்கும். தேவையற்ற அலைச்சலை குறைத்துக் கொள்வது நல்லது. மாணவர்கள் சக மாணவர்களுடன் கவனமாக பழகுவது நல்லது.





கன்னிராசி அன்பர்களே! நீண்ட நாட்களாக இருந்து வந்த உடல் உபாதை மறையும். தாயின் உடல்நிலையில் கவனம் அவசியம். திட்டமிட்டபடி காரியங்களை செய்வீர்கள். வீடு வாங்குவதில் இருந்த சிரமம் நீங்கும். தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்கள் சாதகமாக நடந்து முடியும். தொழில் விரிவாக்கத்திற்கு தேவையான பண உதவிகள் கிடைக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்க பெறுவர். பணி நிமித்தமாக பயணம் செல்ல வேண்டி வரும். குடும்பத்தில் நிம்மதி காணப்படும். விருந்து நிகழ்ச்சியில் குடும்பத்தினருடன் கலந்து கொண்டு மகிழ்ச்சி அடைவீர்கள். கணவன், மனைவிக்கிடையே இருந்த கருத்து வேற்றுமை நீங்கும். பெண்களுக்கு தைரியம் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.







துலாம்ராசி அன்பர்களே! எந்த முயற்சியும் வெற்றி பெறும். எடுத்த காரியத்தை திறமையாக செய்து முடிப்பீர்கள். தன்னம்பிக்கை அதிகரிக்கும். புத்தி தெளிவு உண்டாகும். எந்த பிரச்சனையும் எதிர்கொள்ளும் தைரியம் உண்டாகும். வீடு மனை யோகம் ஏற்படும். தொழில், வியாபாரம் தொடர்பான அலைச்சல்கள் நீங்கும். தொழில் முன்னேற்ற பாதையை நோக்கி செல்லும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு நிலுவையில் இருந்த பணம் வந்து சேரும். மேலதிகாரிகள் உதவி கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். பொருளாதார வளம் ஏற்படும். கணவன், மனைவிக்குள் மன வருத்தம் நீங்கும். பெண்கள் கொடுத்த வாக்கை காப்பாற்ற பாடுபடுவர். நிதானத்தை கடை பிடிப்பது வெற்றிக்கு உதவும்.




விருச்சிகராசி அன்பர்களே! மன மகிழும்படியாக எல்லாம் நடந்து முடியும். தொழில் வியாபாரம் நன்றாக இருக்கும். பழைய பாக்கிகள் வசூலாவதில் வேகம் இருக்கும். கொடுக்கல் வாங்கலில் இருந்த சுணக்க நிலை மாறும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு அலுவலகம் தொடர்பான பயணம் செல்ல வேண்டி இருக்கலாம். வீடு மனை வாகனம் சம்பந்தமான காரியங்களில் எதிர்பார்த்த பலன்கள் கிட்டும். குடும்பத்தில் இருந்து வந்த மனம் நோகும்படியான சூழ்நிலைகள் மாறும். அனைத்து விஷயங்களிலும் நீங்கள் அனுசரித்து செல்வது நல்லது. கணவன் மனைவிக்கிடையே எதிர்பாராத மனவருத்தம் ஏற்பட்டு நீங்கும். பெண்களுக்கு எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். எதிர்ப்புகளையும் மீறி முன்னேறுவர். உங்களது பொருட்களின் மீதும் வீடுகளின் மீதும் கூடுதல் கவனம் இருப்பது நல்லது.





தனுசுராசிஅன்பர்களே! எடுக்கும் முயற்சிகள் வெற்றி பெறும். வாழ்க்கையில் நல்ல திருப்பம் ஏற்படும். ஆன்மிகத்தில் நாட்டம் உண்டாகும். புத்தி தெளிவு உண்டாகும். வாகன யோகம் ஏற்படும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களிடம் கவனமாக பேசுவது அவசியம். தொழில் தொடர்பான விஷயங்கள் அனுகூலமாக நடக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் முன்னேற்றம் காண்பார்கள். பதவி உயர்வு கிடைக்கும். குடும்பத்தில் கணவன், மனைவிக்கிடையே இருந்த கருத்து வேற்றுமை நீங்கும். உறவினர்கள் மூலம் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். பிள்ளைகள் மனம் மகிழும்படி தேவையான பொருட்களை வாங்கி கொடுப்பீர்கள். பெண்கள் எடுத்த காரியத்தை வெற்றிகரமாக செய்து முடிப்பர். செல்வாக்கு உயரும். வெளியிட்டு அனைவரின் கவனத்தையும் ஈர்ப்பர்.




மகரராசி அன்பர்களே! எல்லா காரியங்களும் அனுகூலமாக நடந்து முடியும். எதிர்பார்த்த தகவல்கள் நல்ல தகவலாக வரும். விருப்பங்கள் கைகூடும். நண்பர்கள் மத்தியில் மரியாதையும் அந்தஸ்தும் உயரும். தொழில் வியாபாரத்தில் முன்னேற்றம் காணப்படும். அரசாங்கம் மூலம் நடக்க வேண்டிய காரியங்களில் சாதகமான நிலை காணப்படும். உத்யோகத்தில் இருப்பவர்கள் தன்னம்பிக்கையுடன் செயல்பட்டு வெற்றி பெறுவார்கள். மேலதிகாரிகள் ஆதரவும் கிடைக்கும். குடும்பத்தில் இருந்த பிரச்சனைகள் நீங்கும். கணவன் மனைவிக்கிடையே இருந்த மன வருத்தம் அகலும். குழந்தைகளின் எதிர்காலத்திற்கான திட்டங்களை செயல்படுத்துவீர்கள். புதிதாக வீடு மனை வாங்குவதற்கான வேலைகளைத் தொடங்குவீர்கள். பெண்களுக்கு காரிய அனுகூலம் உண்டாகும். க பணவரத்து இருக்கும்.




கும்பராசி அன்பர்களே! எதிர்ப்புகள் விலகும். நண்பர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும். புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும். தொழில் வியாபாரம் வாக்கு வன்மையால் சிறப்பாக நடக்கும். உத்தியோகம் தொடர்பான பயணங்கள் செல்ல நேரலாம். உத்யோகஸ்தர்கள் புத்தி சாதுரியத்தால் மேலதிகாரிகள் கொடுத்த வேலையை சிறப்பாக செய்து முடிப்பர். குடும்பத்தில் வெளிநபர்களால் ஏதாவது குழப்பம் ஏற்படலாம். சொந்த விஷயங்களுக்கு அடுத்தவர் ஆலோசனைகளை கேட்பதை தவிர்ப்பது நல்லது. கணவன், மனைவி ஒருவருக்கொருவர் மனம் விட்டு பேசுவதன் மூலம் இடைவெளி குறையும். வாகனம் வாங்குவதில் இருக்கும் சிரமம் மறையும். பெண்களுக்கு எடுத்த காரியங்களில் சாதகமான பலன் கிடைக்கும். விரும்பிய காரியங்களை செய்து சாதகமான பலன் கிடைக்க பெறுவீர்கள்.





மீனராசி அன்பர்களே! ஆக்கப்பூர்வமாக செயல்பட்டு வெற்றி பெறுவீர்கள். நல்ல பலன்களைப் பெறுவதில் சிரமம் இருக்காது. வீணாக மனதை உறுத்திக் கொண்டிருந்த கவலை நீங்கும். அடுத்தவருக்கு உதவிகள் செய்யும் போது கவனம் தேவை. தொழில் வியாபாரத்தில் இருந்த மந்த நிலை மாறும். விற்பனை அதிகரிக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் புத்தி சாதூரியத்தால் வேலைகளை திறமையாக செய்து முடித்து பாராட்டு பெறுவர். பதவி உயர்வு கிடைக்கலாம். குடும்பத்தில் இதமான சூழ்நிலை காணப்படும். உறவினர்கள் வருகை இருக்கும். கணவன் மனைவிக்கிடையே ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து செல்வது நல்லது. புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும். பெண்களுக்கு ஆன்மிக நாட்டம் ஏற்படும். சம்பள விஷயத்தில் கறாராக இருப்பது அவசியம். எதிர்பார்த்த உயர்வு கிடைக்கும்.


எதிர் பாருங்கள்! காத்திருங்கள்!

ஈழநாடு 29வது ஆண்டு விழா

சங்கீத சங்கமம் 2022

தொடர்புகளுக்கு:- 416 8419600



# Amma Pawn Broker

## அம்மா தங்கநகை அடைவு மாடம்

கனேடிய அரச அங்கீகாரம் பெற்ற தங்க நகை அடைவு மாடம்

Covide - 19 சூழ்நிலையை கருத்தில் கொண்டு
அம்மா நகை அடைவு மாடம் நட்பு ரீதியாக வழங்கும்

1.0% முதல் 1.5% வரை

## அதிரடி சிறப்பு வட்டி வீதம்

உங்கள் நகைக்கு கூடிய பெறுமதியும் கனடாவில்
இதுவரை கண்டிராத குறைந்த வட்டி வீதமும்
உங்கள் முதலை பகுதி பகுதியாக கட்டிக் குறைக்கலாம்



- நீங்கள் அடைவு வைக்கும் காலத்தில் இலவச காப்புறுதி
- உங்கள் பழைய நகைகள் அதிகூடிய விலைக்கு வாங்கப்படும்
- உங்கள் நகைகள் திருத்த வேலை செய்து தரப்படும்
- வர்த்தகத் துறையில் 27 ஆண்டு நிறைவுடன் நம்பிக்கை - நாணயம் - உத்தரவாதத்துடன் 5 நிமிடங்களிள் உங்கள் கையில் பணமும் பாதுகாப்பும்
- எம்மிடம் பழைய நகைகள் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்



**அம்மாவுக்கு நிகர் அம்மா நகை மாடமே!**

105A - 2425 Eglinton E, Scarborough, ON M1K 5G8
ammapawnbroker@gmail.com

416-757-0034
416-994-3861



Chapel Ridge
FUNERAL HOME & CREMATION CENTRE

# Serving the Tamil Community

## OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

## *At Need Funeral Arrangements*


We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*



**Vilosanan Sivatharman**
Funeral Director
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com


மனம் பூரிக்க மங்களகரமான மனையை தேர்ந்தெடுங்கள்
வீடு
வாங்க..
விற்க..
HOMELIFE
Ravi. Paramu
Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife Today Realty Inc., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto - ON., M1P 4S6


RANJANI THIRUKESWARAN LAW OFFICE
• Real Estate: வீடு, காணி கொள்வனவு விற்பனைச் சட்டம்
• Business Law: வியாபார, வர்த்தகச் சட்டம்
• Immigration Law: குடிவரவு, அகதிச் சட்டம்
• Family Law: குடும்ப வழக்குகள்
• Last Wills: உயில் தயாரித்தல்
• Power of Attorney: தத்துவப் பத்திரம் தயாரித்தல்
2855 Markham Road Suite 209
Toronto -ON- M1X 0C3
(Markham / McNicoll )
416 291 2242
Ranjani Thirukeswaran
(Barrister & Solicitor)


மருத்துவ பரிசோதனையற்ற காப்புறுதி
NON-MEDICAL INSURANCE
நாளை பற்றி கவலையை தவிர்க்க நம்பிக்கையானது காப்புறுதி ஒன்றே!!!
ARUN KULASINGAM
FINANCIAL ADVISOR
KABIS
416-357-2847
kulasingam33@yahoo.ca
• Life Insurance
• Critical Illness
• Disability
• RESP
• RRSP
• Mortgage Protection Insurance
• Travel Insurance (Super Visa)
Foresters
INDUSTRIAL ALLIANCE
Assumption Life


OVER 10 YEARS EXPERIENCE
RAVI VEERASINGAM B.A
Sales Representative
416-356-8958
BUY - SELL - LEASE - INVEST
HOMELIFE
ARVIN-KING
RABINTHIRARAJ
Broker
416-200-7001
TALENT - PATIENCE
HomeLife/Future Realty Inc., Brokerage*


RENOWNED FOR
AUTHENTIC KANCHIPURAM
SILK SAREES
$599*
FLAT RATE
Aalayaa
2 VILLA ADA DRIVE,
MARKHAM, ON L6B 1N7
1.855.575.0500


காப்புறுதிச் சேவையில் 20 ஆண்டுகள்
ஆதரவு தந்த அனைவருக்கும்
நெஞ்சார்ந்த நன்றி
DISABILITY INSURANCE
SUPER VISAS
NON-MEDICAL INSURANCE
CRITICAL ILLNESS
RRSP & RESP
AJITH SABARATNAM
INSURANCE & INVESTMENTS INC.
647 401 5800 / 416 439 2800
218 EXPORT BLVD, MISSISSAUGA, SUITE 209-211, L5S 0A7